விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 03 திங்கட்கிழமை (16.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 149

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## இராணுவத்தை முற்றாக வெளியேற்றி பொலிஸ் அதிகாரத்தை எம்மிடம் ஒப்படையுங்கள்



### வன்முறைகளை கட்டுப்படுத்துகிறோம்-சி.வி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்பட்டு பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபையிடம் ஒப்படைத்தால் யாழ்ப்பாணத்தில் அரங்கேறும் வன்முறை கலாசாரத்தை உடனடியாகக் கட்டுப்படுத்துவோம் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரி நாடு திரும்பினார்

(கொழும்பு)

பிரித்தானியா மற்றும் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியுள்ளார்.

பெங்களூரில் இருந்து நேற்று முன்தினம் இரவு 10.40 அளவில், கட்டுநாயக்க விமான நிலையத்தை

24ஆம் பக்கம் பார்க்க....

## 66 ஆண்டுகளில் சிறையிலிருந்து 7 ஆயிரம் பேர் தப்பிப்பு!

(கொழும்பு)

இலங்கையில்சுமார்7 ஆயிரம்பேர சிறைகளிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் அறிக்கைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

சிறைச்சாலைகளிலிருந்து தப்பிச் சென்ற 7 ஆயிரம் பேர் சுதந்திரமாக வெளியில் இருக்கின்றார்கள். இவ்வாறு சிறைச்சாலைகளிலிரு

24ஆம் பக்கம் பார்க்க....

## நிதி மோசடி விசாரணைப் பிரிவு; சட்ட மாஅதிபர் அலுவலகம்;

### முக்கிய விவாதம் நாளை

(கொழும்பு)

நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கிய விவாதங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் சட்ட மாஅதிபர் அலுவலகம் உட்பட பல முக்கிய துறைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர்கள் விவாதங்களில்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆளும்கட்சிக்குள் முரண்பாடு

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநர் அர ஜுன் மகேந்திரனின் பதவியை நீடிப்பது குறித்து ஆளும் கட்சிக்குள் இரண்டு விதமான கருத்துக்கள் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஜுன் மாதத்துடன் அர்ஜுன் மகேந்திரனின் பதவிக் காலம் பூர்த்தியாகவுள்ளது. அவருக்கு பதவி நீடிப்பு வழங்குமாறு பிரதமரிடம் ஒரு தரப்பினர் கோரி உள்ளதுடன் மற்றுமொரு தரப்பி

24ஆம் பக்கம் பார்க்க....

## குமுதினி படுகொலை; 4ஆம் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் நான்காம் நாளான நேற்று நெடுந்தீவு குமுதினி படகில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள தூபி முன்பாக சுடரேற்றப்பட்டது. வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்

24ஆம் பக்கம் பார்க்க....

## நாடு முழுவதும் சீரற்ற காலநிலை

### இன்றும் தொடரும் என அறிவிப்பு

- 100-150 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி
- காற்றின் வேகமும் அதிகரிக்க கூடும்

(கொழும்பு)

நாட்டில் திடீரென ஏற்பட்ட பலத்த காற்று மற்றும் இடி மின்னலுடன் கூடிய தொடர்ச்சியான மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சீரற்றகாலநிலை இன்றும் தொடரும் என வானிலை அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

மேற்படி சீரற்ற காலநிலை காரணமாக தென்பகுதியில் இதுவரை இருவர் பலியாகியுள்ளதுடன் ஒருவர் காணாமல் போயுள்ளார். அத்தோடு 2011 குடும்பங்களைச் சேர்ந்த

24ஆம் பக்கம் பார்க்க....

## கஞ்சா கடத்தல்காரர்களின் கேந்திர நிலையமாக இலங்கை

### இந்திய உள்துறை அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கஞ்சா கடத்தல்காரர்களின் பரிமாற்றல் இடமாக இலங்கை உள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கஞ்சா பெரும்பாலும் இந்திய விசாகப்பட்டினத்தில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்று இந்திய உள்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து இந்த கடத்தல்களை தடுக்கும் நடவடிக்கைகளை

24ஆம் பக்கம் பார்க்க....


## மக்களின் எதிர்ப்பை சமாளிக்க போலியாக நடிக்கிறார் மைத்திரி!

### ஜே.வி.பி சாடல்

(கொழும்பு)

ரணில் - மைத்திரி ஒன்றாக இணைந்து தீர்மானங்களை எடுத்தாலும் அந்த தீர்மானங்களுக்கு மக்களின் எதிர்ப்பு ஏற்படும் போது அதனை சமாளிக்க ஜனாதிபதி போலியான நடிப்பை அரங்கேற்றுவதாக மக்கள் விடுதலை முன்ன

24ஆம் பக்கம் பார்க்க....



## தகவல் அறிதல் மாநாடு இன்று

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவூட்டும் மாநாடு ஒன்றை நடத்த பிரதமர் அலுவலகம் தீர்மானித்துள்ளது.

இன்று காலை கொழும்பில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில்

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழக சட்டசபைத் தேர்தல் இன்று; 234 தொகுதிகளில் 3, 776 பேர் போட்டி

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகள் அனைத்தும் நேற்று முன்தினம் மாலையுடன் முடிவுக்கு வந்தது.

தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளில் 3,776 வேட்பாளர்கள் போடடியிடுகின்றனர். இதில் 3,454 பேர் ஆண் வேட்பாளர்களும், 320 பெண் வேட்பாளர்களும், இரண்டு திருநங்கைகளும் போட்டியிடுகின்றனர்.

அதிகபட்சமாக முதலமைச்சர் ஜெயலலிதா போட்டியிடும் ஆர்.கே. நகர் தொகுதியில் 45 வேட்பாளர்களும், அரவக்குறிச்சியில் 36 வேட்பாளர்களும், பெரம்பூரில் 33 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலில் 5.82 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## பால் குளிரூட்டும் நிலையம் முள்ளியவளையில் இன்று திறப்பு

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் திறந்து வைப்பார்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளைப் பிரதேசத்தில் புதிய பால் குளிரூட்டும் நிலையமொன்று இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி பால் குளிரூட்டும் நிலையமானது நியூசிலாந்து நாட்டின் வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சு, ரியர் பண்ட் நியூசிலாந்து ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பின் மூலம் உலகதரிசன நிறுவனத்தி

23ஆம் பக்கம் பார்க்க....




இன்று Vijayalanka Exports & Contracts Co.Pvt Ltd, ஆனது Browns Group
இன் TAFE உழவு இயந்திர நெல்லியடி பிரதேச விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டு தனது
காட்சி அறையை இல.50, M.M.V வீதி நெல்லியடி என்னும் முகவரியில்
16.05.2016 இன்று திங்கட்கிழமை கோலாகலமாக திறந்து வைக்கின்றார்கள்.
இக்காட்சி அறையை நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு.G.பரதன்
இன்று 9.45 மணியளவில் திறந்து வைக்கின்றார். அத்துடன் CDB leasing
இன் பஜாஜ் முச்சக்கரவண்டி, TOYOTA,NISSAN,SUZUKI,HONDA,MITSUBUSHI
வகை கார்கள் காட்சி அறையும் Vijayalanka Exports & Contracts Co.Pvt Ltd
இனால் திறந்து வைக்கப்படும்

(4588)


# ஹெரோயினுடன் அதிகாரி கைது

(கொழும்பு)

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கண்டி - இலுக்மோதர பகுதியில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வசம் இருந்து 3 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் குண்டசாலை - கென்கல்ல பகுதியைச் சேர்ந்த 34 வயதான ஒருவர் எனவும், சில வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் உப பரிசோதகராக கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை, இதுபோன்றதொரு குற்றச்சாட்டுக் காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர் எனவும் குறிப்பிடப்படுகிறது. (செ-12)

# மரண அறிவித்தல்

## கந்தையா தனபாலசிங்கம் (மணியம் மெக்கானிக்)



வேம்பொடுகேணி, பளையைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் அவர்கள் நேற்று 2016.05.15 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : 0772336338 / 0775969723 / 0779360035 / 0774815914

(C-4623)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை பத்திநாதர் சவரிமுத்து

(சவரிமுத்து மாஸ்ரர்)



பிறப்பு - 1935.07.27 இறப்பு - 2016.05.14

மயிலிட்டியை பிறப்பிடமாகவும், முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பத்திநாதர் சவரிமுத்து அவர்கள் கடந்த 14.05.2016 அன்று காலை இறைபதம் அடைந்தார்.

இவர் லங்காமலரின் அன்புக் கணவரும் அமரர் அருள்சிறிதரனின் அருமைத் தந்தையுமாவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (அன்னை இல்லம் - முல்லைத்தீவு) நாளை 17.05.2016 இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 0779978957 / 0777571021 (C-4622)

தகவல் : அருளப்பு தவேந்திரம் (மைத்துனர்)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி ஜெயபாலன்

தோற்றம் 10 - 08 - 1939



மறைவு 14 - 05 - 2016

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஜெயபாலன் 14.05.2016 அன்று சிவபதமடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற ஜெயபாலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம்-இராஜமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், நாகலட்சுமி (சுவீடன்), இராஜலிங்கம் (லண்டன்), ரஜனி (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கே.ரி.இராஜலிங்கம் (Editor Asian Tribune மற்றும் ஆசிரியர் தினச்செய்தி), திருமதி பத்மினி ராஜலிங்கம் (திருகோணமலை) ஆகியோரின் மைத்துனியும், தர்ஷினி (சுவீடன்), தாரணி (சுவீடன்) ஆகியோரின் பெரிய தாயும், பிரதீபன் (லண்டன்), பார்த்திபன் (லண்டன்), பகீரதன் (லண்டன்), திருமதி நிரஞ்சினி பாஸ்கரன் (லண்டன்), திருமதி சுபாஷினி ஜெயப்பிரகாசம் (லண்டன்), திருமதி சிவானி பிரகாஷ் (திருகோணமலை) ஆகியோரின் அப்பா மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16.05.2016 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் தில்லைகட்டி ஒழுங்கை புகையிரத நிலையத்துக்கு எதிரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்றியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-வை.ராஜலிங்கம் (சகோதரர்) (0773544725) (ஓய்வுநிலை கூட்டுறவுப் பரிசோதகரும் தற்போது லண்டனில் வசிப்பவரும்)
கே.ரி.இராஜசிங்கம் (மைத்துனர்) (Editor Asian Tribune ஆசிரியர் தினச் செய்தி) 0719764514

தில்லைகட்டி லேன், புகையிரத நிலையத்திற்கு எதிர், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

(C-4621)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532








# வன்னிவிளாங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன்

## ஆலய வருடாந்த பொங்கல் விழா

### 20.05.2016 வெள்ளிக்கிழமை

அம்பிகை அடியார்களே!

வன்னிவிளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் துர்முகி வருஷம் வைகாசித்திங்கள் 7ஆம் நாள் 20.05.2016-ம் திகதி வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 9.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும்.

குறிப்பு:-

1. பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2. பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
3. பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 18.05.2016 நண்பகல் 12.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

077 5956 909
077 6126 740

சுபம்

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய
திருப்பணிச்சபை
வன்னிவிளாங்குளம், மாங்குளம்.


(C-4620)

## தனித்தமிழீழமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்ற

# வட்டுக்கோட்டை தீர்மானத்திலிருந்து

# தமிழ்க்கூட்டமைப்பு நகர்ந்துவிட்டது

## எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

**தனித் தமிழீழமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்ற நிலைப்பாட்டை வலியுறுத்திய வட்டுக்கோட்டை தீர்மானத்திலிருந்து தாம் நகர்ந்து விட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் முன்னணி பத்திரிகையான த ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் உட்பட பெரும்பாலான தமிழ் கட்சிகள் பிரிக்கப்படாத இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இலங்கையில் புதிய அரசியல் சாசனமொன்றை தயாரிக்கும் பணிகள் இடம்பெறுவதை சுட்டிக்காட்டியுள்ள சம்பந்தன் இதில் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான திட்டங்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தமிழ் மக்களின் தன்னாட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்றும் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். (இ-5)

## உகண்டாவில் மகிந்தவுக்கு இலங்கை உணவு வழங்கல்



உகண்டாவின் கம்போலா நகரில் உள்ள இலங்கை உணவகம் ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் காலை உணவு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியை தமது உணவகத்திற்கு காலை உணவு விருந்திற்கு வருகை தருமாறு உணவகத்தினர் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதற்கமைய முன்னாள் ஜனாதிபதியுடன் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதித்த லொக்குபண்டார உள்ளிட்டோரும் உணவகத்திற்கு சென்றிருந்தனர்.

உகண்டாவின் ஜனாதிபதியாக 6 ஆவது முறையாக பதவியேற்றுக் கொண்ட முசவேனியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி அங்கு சென்றிருந்ததுடன் நேற்று நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாணந்துறையில் மினி சூறாவளி! 30வீடுகள் சேதம்

பாணந்துறையில் வீசிய கடும் காற்றினால் 30 வீடுகள் வரை சேதமடைந்துள்ளன.

மேலும் தொடர் மழை காரணமாக பாணந்துறை - பழைய காலி வீதி நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## ரயில் விபத்துக்களை தடுக்க இன்று முதல் புதிய சட்டம்

ரயில் மூலம் ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் நோக்கில் ரயில் பாதைகளில் (தண்டவாளத்தில்) நடப்பவர்களை கைது செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த சட்டமானது இன்று முதல் அமுலாகும் என ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


மேலும் மாதாந்தம் 27 தொடக்கம் 30 வரையானோர் தற்கொலை மற்றும் விபத்துகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

எனவே இதனை தடுக்கும் வகையிலேயே இந்தச் சட்டம் அமுலாக்கப்பட உள்ளதாக குறித்த திணைக்களம் கூறியுள்ளது.

இதேவேளை ரயில் பயணச் சீட்டினை பெற்றுக் கொள்ளாத மற்றும் ரயில் மிதிபலகையில் பயணிப்பவர்களுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக ரயில் மூலம் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்து பலர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மைத்திரியின் பெயரில் இந்தியாவில் பூங்கா



இந்தியாவிலுள்ள பாதையொன்றுக்கும் பூங்காவொன்றுக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரைச் சூட்டியுள்ளதாக இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர் சுவராஜ் சிங் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்திய விஜயத்தை கௌரவிக்கும் முகமாக இவ்வாறு பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். பல்கலைக்கழக நுழைவாயில் வீதி மற்றும் பூங்கா என்பவற்றுக்கே இவ் வாறு பெயர் சூட்டப்பட்டுள்ளன. (இ-5)

## எச்சரிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் கூட்டு எதிர்க்கட்சியின் கிருலப்பனை மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளை நிறுத்தாதுவிடின் நாடு தழுவிய தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்கப் போவதாக அச்சங்கங்களின் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

மே தினக் கூட்டத்துக்கு சென்றமை தொடர்பில் இடம்பெற்ற ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் தொழிற்சங்க காரியாலயம் சீல் வைக் கப்பட்டது. 1977 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனவினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்க காரியாலயம் சீல் வைக்கப்பட்டதன் பின்னர், இரண்டாவது தடவையாக கடந்த 3 ஆம் திகதி சீல் வைக்கப்பட்டுள்ளது எனவும் அவ்வொன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-5)

## நாட்டில் மீண்டும் மலேரியா அச்சம்

உலகில் மலேரியா அற்ற நாடாக இலங்கை அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் நோய் தொற்றும் சாத்தியக்கூறு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குருநாகல் மாவட்டத்திலே மலேரியா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாக குறித்த மாவட்ட மலேரியா தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் நந்தன குணதிலக்க தெரிவித்துள்ளார்.

மேலும் வெளிநாட்டு பயணிகளாலும், இந்தியாவுக்கு தலயாத்திரை சென்று வருபவர்களாலுமே மலேரியா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாக நந்தன குணதிலக்க தெரிவித்தார்.

இதேவேளை இவர்கள் குறித்து விஷேட மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக குருநாகல் மாவட்ட மலேரியா தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் நந்தன குணதிலக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஊடகவியலாளர்கள் யாரையும் ஜனாதிபதி அச்சுறுத்தவில்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போன்று தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன ஊடகவியலாளர்களை பயமுறுத்துவது இல்லை என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ, பத்திரிகை ஆசிரியர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டார். தமது குடும்பத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் செய்திகளை வெளியிடும் போது கடும் கோபத்தை வெளிக்காட்டுவார்.

எனினும் மைத்திரிபால சிறிசேன, ஊடகவியலாளர்கள் தமது பணிகளை செய்ய வேண்டும் என்றேவலியுறுத்துவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-5)

# பஞ்சாப்பை வீழ்த்தி ஐதராபாத் பிளே ஆப் சுற்றுக்கு தகுதி





ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டத்தில் பஞ்சாப் அணியை சன்ரைசர்ஸ் ஐதராபாத் 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இதன்மூலம் 8 போட்டிகளில் வெற்றி பெற்று பிளே ஆப் சுற்றை உறுதிப்படுத்தியுள்ளது.

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய முதல் ஆட்டத்தில் பஞ்சாப்- ஐதராபாத் அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்த பஞ்சாப் அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 179 ஓட்டங்கள் குவித்தது.

அம்லா அதிகபட்சமாக 56 பந்தில் 96 ஓட்டங்கள் குவித்தார். பின்னர் 180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஐதராபாத் அணியின் தவான், வோர்னர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

தவான் 25 ஓட்டங்களில் ரன் அவுட் ஆக, வோர்னர் 52 ஓட்டங்கள் எடுத்து ஹிட் விக்கெட் ஆனார். வோர்னர் வெளியேறும் போது ஐதராபாத் அணி 12.1 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 97 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

வெற்றிக்கு 47 பந்தில் 83 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அடுதது வந்த யுவராஜ் அதிரடியாக விளையாடினார். பந்தை சிக்சருக்கும் பவுண்டரிக்குமாக விரட்டினார்.

இதனால் கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அந்த ஓவரை மோகித் சர்மா வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தை வைடாக வீசினார். அடுத்த பந்தை யுவராஜ் சிங் சிக்சருக்கு தூக்கினார்.

இதனால் 180 வெற்றியிலக்கை 19.4 ஓவரில் எட்டி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 12 போட்டிகளில் 8-ல் வெற்றி பெற்று பிளே ஆப் சுற்றை உறுதிப்படுத்தியுள்ளது ஐதராபாத் அணி.

யுவராஜ் சிங் 24 பந்தில் தலா 3 சிக்ஸ், பவுண்டரிகள் அடித்து கடைசி வரை வெளியேறாமல் இருந்தார். பென் கட்டிங் 11 பந்தில் ஒரு பவுண்டரி, 2 சிக்சருடன் 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.


56 பந்துகளில் 96 ஓட்டங்கள் குவித்த அம்லா ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

## 265 நாட்களுக்குப் பிறகு முதல் பட்டத்தை வென்ற செரீனா

### சானியா – ஹிங்கிஸ் 14–வது பட்டத்தை ருசித்தது

ரோம் நகரில் நடைபெற்ற இத்தாலி ஓபன் டென்னிஸில் செரீனா வில்லியம்ஸ் சாம்பியன் பட்டம் வென்றார்.

இதேபோல், பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா - ஹிங்கிஸ் ஜோடி வெற்றி பெற்று 14-வது பட்டத்தை ருசித்தது.



இந்த வெற்றியின் மூலம் செரனா சுமார் 265 நாட்கள் கழித்து (9 மாதங்கள்) முதல் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

இதற்கு முன் கடந்த 2015-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சின்சினாட்டி கோப்பையை வென்றிருந்தார். அதன்பின் வெல்லும் முதல் கோப்பை இதுவாகும்.

இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், சக நாட்டைச் சேர்ந்த மேடிசன் கெய்ஸ்-ஐ எதிர்கொண்டார்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா- ஹிங்கிஸ் ஜோடி, மகரோவா - வெஸ்னினா ஜோடியை எதிர்கொண்டது.



கடந்த 9 மாதங்களாக 265 (நாட்கள்) எந்தவொரு சாம்பியன் பட்டத்தையும் வென்றிராத செரீனாவிற்கு மேடிசன் கடும் நெருக்கடி கொடுத்தார்.

இதனால் முதல் செட்டை பிரேக்கர் வரை சென்றது. இறுதியில் செரீனா தனது அனுபவத்தால் அந்த செட்டை 7 (7) - 6 (5) எனக் கைப்பற்றினார். 2-வது செட்டை 6-3 என எளிதில் கைப்பற்றி 2-0 என்ற நேர்செட் கணக்கில் மேடிசனை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றார்.

இதன் முதல் செட்டை சானியா ஜோடி 6-1 என எளிதில் கைப்பற்றியது. ஆனால், எதிர்ஜோடி 2-வது செட்டில் சுதாரித்துக்கொண்டு விளையாடியது. இதனால் சானியா ஜோடி அந்த செட்டை 6-7 என இழந்தார்.

ஆனால், வெற்றி ஜோடியான சானியா- ஹிங்கிஸ் ஜோடி 3-வது செட்டில் சிறப்பாக விளையாடி அந்த செட்டை 10-3 எனக் கைப்பற்றியது.

இதன்மூலம் சானியா - ஹிங்கிஸ் ஜோடி 14-வது டைட்டிலை ருசித்துள்ளது.

## மெஸ்சி, ரொனால்டோவின் ஏழு ஆண்டு ஆதிக்கம்

### முற்றுப்புள்ளி வைத்தார் சுவாரஸ்




ஸ்பெயின் கிளப் அணிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டிகளில் ஜாம்பவான்களாக திகழ்ந்த மெஸ்சி மற்றும் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோரின் 7 ஆண்டின் சாதனையை சுவாரஸ் முறியடித்துள்ளார்.

'லா லிகா' கால்பந்து லீக் போட்டி நேற்று முன்தினம் முடிவடைந்தது. இதில் பார்சிலோனா அணி ரியல் மாட்ரிட் அணியை பின்னுக்குத் தள்ளி 24-வது முறையாக சம்பியன்ஸ் பட்டத்தை வென்றது.

இந்த வெற்றிக்கு பார்சிலோனா அணியின் முன்னணி வீரர் சுவாரஸ் முக்கிய காரணமாக இருந்தார்.

அவர் கிரேனடா அணிக்கெதிராக ஹாட்ரிக் கோல் அடித்து அசத்தினார்.

இதன்மூலம் இந்த லா லீக் தொடரில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார். சுவாரஸ் 2016 சீசனில் 40 கோல்கள் அடித்துள்ளார். அடுத்து பிஎஸ்ஜி அணியின் இப்ராஹிமோவிக் 36 கோல்கள் அடித்துள்ளார். கிறிஸ்டியானோ ரொனால்டோ 35-ம், மெஸ்சி 26 கோல்களும் அடித்துள்ளனர்.

கடந்த 2009-ம் ஆண்டில் இருந்து மெஸ்சி மற்றும் ரொனால்டோ ஆகியோர்தான் அதிக கோல்கள் அடித்து தங்க ஷூவை கைப்பற்றி வந்தனர். 7 ஆண்டுகள் வரை முறியடிக்கமுடியாத இந்த சாதனையை நேற்று சுவராஸ் முறியடித்தார்.

இதனால் மெஸ்சி மற்றும் ரொனால்டோ ஆகியோரின் ஆதிக்கம் முடிவுக்கு வந்துள்ளது.

## பி.சி.சி.ஐ தொடர்ந்து பிபா உயர்மட்ட அதிகார குழுவிலும் கால்பதித்துள்ள இந்தியர்

இந்திய கால்பந்து அணி உலக தரவரிசையில் 160-வது இடத்தில் இறங்கிக்கொண்டிருக்கும் நிலையில், சர்வதேச கால்பந்து அமைப்பான பிபாவின் உயர்மட்ட குழுவின் Deputy Chairman of the Governance Committee தலைவராக ஒரு இந்தியர் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.



இச்செய்தி இந்தியர்கள் உட்பட அனைவரையும் வியக்க வைத்துள்ளது.

இந்தியாவின் பஞ்சாப் மற்றும் அரியானாவின் முன்னாள் தலைமை நீதிபதி முகுல் முட்கலே குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும், இவருடன் போர்த்துகீசியத்தை சேர்ந்த ஆளுகை நிபுணர் லஸ்மிகுவல் மடுரோவும் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில், ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் நடந்த சூதாட்ட புகார் குறித்து, ஓய்வு பெற்ற நீதிபதி முகுல் முட்கல் தலைமையிலான விசாரணை குழுவே விசாரணை நடத்தி, நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐபிஎல் உட்பட இந்தியாவின் விளையாட்டு துறைகளில் நடந்த பல முறைகேடுகளை முகுல் தலைமையிலான குழுவே விசாரணை நடத்தி தீர்வு கண்டுள்ளது.

முகுல் முட்கல் நியமனம் மூலம் சர்ச்சையின் பிடியில் இருக்கும் பிபா-விற்கு ஒரு நல்ல விடியல் கிடைக்கும் என கூறப்படுகிறது.

# தமிழின அழிப்பு நினைவு நாளில் ஒற்றுமையாய் நினைவு கூருவோம்

## தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள்

(கொழும்பு)

**தமிழினத்திற்கு நேர்ந்த அவலம் உலகில் எந்தவொரு இனத்துக்கோ, மக்களுக்கோ எந்த வேளையிலும் நிகழாமல் இருக்க வழிகோலும் ஒரு ஞாபகார்த்த தினமாகவும் இருக்க தமிழின அழிவு நினைவு நாளில் (மே.18 அன்று) ஒற்றுமையாய் நினைவு கூருவோம் என தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

ஐ. நா. சபையின் மனித வுரிமை அமைப்புக்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன வெளியேற்றப்பட்ட பின்னணியில் நவீன உலக ஊடகத்துறை இருளில் வைக்கப்பட்டு, சர்வதேச நாடுகள் பார்த்திருக்க வன்னி மண்ணில் நடத்தப்பட்ட அந்தக் கொடூரம், பின்னர் காணொலிகளாகக் கசிய, சனல் 4 போன்ற ஊடகங்களின் வெளியீடுகள் அவற்றை தெளிவாகப் போர்க் குறறங்களாக நிரூபித்து ஆவணத் தொடர்கள் வெளியிட, ஐ. நா. சபை யுத்தத்தின் இறுதித் தினங்களில் குறைந்தது 40ஆயிரம் பொதுமக்கள் இறந்ததாக அறிக்கைவிட, வடமாகாணசபை, நடந்தது ஒரு இனப்படுகொலை என்று தீர்மானம் நிறைவேற்ற, இக்கொடூர அழிப்பில் இறந்த எம் மக்களை நினைவு கூரவும் உரிமை மறுக்கப்பட்டு வந்த வேளையில் இவ்வருடம் வடமாகாண சபை மே 18 அன்று முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே நினைவு கூரல் நிகழ்வை வட மாகாணசபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் நடத்த சகல ஆயத்தங்களையும் மேற்கொண்டு வருதல் மிகவும் வரவேற்கத் தக்க விடயமாகும்.

தமிழர் வரலாற்றில் இத் தினம் என்றும் மறைக்கப் படவோ, மறக்கப்படவோ முடியாதது மட்டுமன்றி இதனைத் தடுக்கும் சகல முனைப்புகளுக்கும் முகம் கொடுக்கும் காலமிது. எனவே, நாம் இவ்வேளையில் மிகவும் நிதானமாக செயற்பட்டு அப் பேற்பட்ட முயற்சிகளை முறியடித்து வரலாற்றில் இந்நாள் வேர் ஊன்றி பதிக்கப்படுதலுக்காக புத்தி சாதுரியமாக செயற்படுதல் வேண்டும்.

இவ்வேளையில், வடக்கு மாகாணசபை முதல்வர் தலைமையில் நடைபெறும் நினைவு நாளை நாம் எல்லோரும் அணி திரண்டு பலப்படுத்தி ஒரு திடமான அத்திபாரத்தை போடுவதன் மூலமாக மே 18 என்ற தினம் தமிழர் வரலாற்றில் தீரப்பதிவதோடு நவீன உலகத்திற்கு இது ஒரு முன்மாதிரியான தினமாக இருந்து, இவ்வாறான அவலம் உலகில் எந்த ஒரு இனத்துக்கோ அல்லது மக்களுக்கோ எந்த வேளையிலும் நிகழாமல் இருக்க வழிகோலும் ஒரு ஞாபகார்த்த தினமாகவும் இருக்க வேண்டும்.

இந்த வகையில், நாளை மறுதினம் மே 18 அன்று முள்ளிவாய்க்காலில் பலதரப்பாலும் நடத்தப்பட இருக்கும் நினைவு தின நிகழ்வுகளை ஒரு குடையின் கீழ் நின்று, வடக்கு மாகாணசபையின் முதல்வரின் தலைமையில் ஒன்றுகூடி எம் மக்களின் தியாகங்களை வரலாற்றின் வெற்றிப் பக்கங்களாக மாற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக. இதற்காக சகல அமைப்புக்களையும் வட மாகாணசபையின், முள்ளிவாய்க்கால் நினைவு தின ஏற்பாட்டுக் குழுவின் நிகழ்வில் பங்குபற்றி தமது அஞ்சலியைச் செலுத்துமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

மேலும், வரலாற்றில் பதிந்த இம்மண்ணில், இப்போரின் போது கொல்லப்பட்ட மக்கள் அனைவரதும் பெயர்கள் பதிக்கப்பட்ட ஒரு நிரந்தர நினைவுத் துாபி கொண்ட நினைவு மண்டபத்தை அமைக்க வட மாகாணசபை தனது சகல பலத்தையும் பாவித்து உடனடியாக செயற்படுத்த வேண்டுமென இவ்வேளையில் வேண்டிநிற்கின்றோம்.

இதேவேளையில், தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் உபகுழு தனது தீர்வுத் திட்ட இறுதி வரைபை வெளியிட்டு அது இன்று சர்வதேச நாடுகளிடமும், ஐ. நா. விடமும் கையளிக்கப்பட்டு அவர்களுடனான சந்திப்புக்களில் பேரவையினரால் வலியுறுத்தப்பட்ட இரு முக்கிய விடயங்களில் ஒன்று, தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ் தலைமைகளுக்கு தேர்தல்களில் வழங்கிய ஆணையின் அடிப்படையில் வரையப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தின் அடிப் படையிலான கௌரவமான ஒரு நிரந்தரத் தீர்வின் அவசியத் தேவை.

இரண்டாவது, இறுதிப் போரின் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலும் அதற்கான சர்வதேச விசாரணையின் அவசியமும்.

இந்தவகையில், தமிழ் மக்கள் பேரவையின் உப குழுக்களில் ஒன்றான பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச விசாரணைக்கான உபகுழு, முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18 இல் எம் மக்களின் தியாகங்களின் மேல் தலை வணங்கி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்பதுடன், இவ் உபகுழுவினதும், இதில் இணைந்து பங்காற்ற இருக்கும் சர்வதேச சட்ட நிபுணர்களின் பெயர்களும் வெகுவிரைவில் ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்பட்டு, பேரவை தனது அடுத்த மிக முக்கிய செயற்றிட்டத்தில் இறங்குகின்றது என தமிழ் மக்கள் பேரவை விடுத் துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அரச அதிகாரிகளுக்கு அமைக்கப்பட்ட வீடுகளில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன

முல்லைத்தீவு பனிக்கன் குளத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அரச அதிகாரிகளுக்கு கடனடிப்படையில் அமைக்கப்பட்ட 50 வீட்டுத்திட்டத்தில் எவரும் குடியிருக்காத நிலையில் குறித்த வீடுகளில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்கென தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பனிக்கன் குளம் ஏ-9 வீதிக்கு அருகில் ஐம்பது பேருக்கு தலா அரை ஏக்கர் காணிகள் வீதம் வழங்கப்பட்டு கடன்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கப்பட்டு குறித்த குடியிருப்புக்களுக்கான மின்இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குடிநீர் வசதிகளுக்காக பொதுக்கிணறுகள் வீதிகள் என்பனவும் அமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வீடுகளில் எந்த வீடுகளிலும் இதுவரை எவரும் குடியிருக்காத நிலையில் பற்றைக்காடுகள் மண்டிக்காணப்படுவதுடன் குறிப்பிட்ட சில வீடுகளில் பல்வேறு குற்றச்செயல்களுக்கு ஏற்ற இடமாகக் காணப்படுகின்றன என்றும் குறித்த வீடுகள் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என குறித்த குடியிருப்புக்கு அண்மித்த பகுதியில் வாழும் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த குடியிருப்பு வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு இரு வருட காலத்தில் சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளபோதும் அறுபது வருடங்களுக்குமேலாகபழைமை வாய்ந்த அயல்பகுதிகளில் அபிவிருத்திகள் எவையும் இன்றியும் மின்சாரவசதிகள் இன்றியும் குடிநீர் வசதிகள் இன்றியும் இப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். (இ-15)

## தொலைபேசி திருடிய சிப்பாய்களுக்கு மறியல்

கிளிநொச்சி இரணைமடு பகுதயில்கைத்தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு இராணுவ சிப்பாய்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுச்சந்திப்பகுதியில் கடந்த மார்ச்மாதம் 16 ஆம்திகதி இருபதாயிரம்ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி ஒன்று களவாடப்பட்டமை தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து இதனுடன்தொடர்புபட்ட ஒருவர்கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து இத்திருட்டு சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டு இராணுவச்சிப்பாய்களை கைது செய்த பொலிஸார் குறித்த இருவரையும் கடந்த 13 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இரு இராணுவச்சிப்பாய்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (இ-15)

## இராசி பலன்

16.05.2016

(வைகாசி 03, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு

தசமி மாலை 5.51 மணிவரை

பூரம் காலை 7.31 மணிவரை

சுபநேரம் 11.53-1.23 மணிவரை

இராகுகாலம் 7.28- 8.53 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் புத | சூரி | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம்<br>பி.ப.2.10 இற்கு<br>சனி-சந் | | |
| | | | குரு ராகு சந் |
| | சனி செவ் | | |

**மீனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** தொழில் நன்மை கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களின்போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், நல்லவர் என நினைத்த ஒருவர் உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கூட்டு முயற்சி வெற்றி தரும், தொழிலில் நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மகரம்:** குன்றைசொன்னவர்கள் பாராட்டும் சூழ்நிலை உருவாகும், அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, உறவினர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.

**தனுசு:** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், உற்றார், உறவினர் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், குடும்ப ஒற்றுமை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் தொலைபேசி அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.



முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற தமிழினப் படுகொலையின் நினைவேந்தல் வாரத்தின் நான்காம் நாள் நிகழ்வுகள் நேற்று பருத்தித்துறை முனைக்கடற்கரையில் இடம்பெற்றது. வடமாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம்,பருத்தித்துறை நகர சபை முன்னாள் உறுப்பினர்கள் மதனி. தீபாணர்தன், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் பன்னீர்ச் செல்வம், கரவெட்டி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் குகதாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (இ-60)

## அனுமதிப்பத்திரம் இன்றி

## ஆட்டோவில் ஆட்டுடன் சென்ற இருவருக்கு அபராதம் விதிப்பு

அனுமதிப்பத்திரம் இனறி ஆடு ஒன்றினை ஆட்டோவில் ஏற்றிச் சென்ற இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் அத்துடன் மிருகத்தினை சித்திரவதை செய்து எடுத்துச் சென்ற குற்றத்திற்கு மேலதிகமாக 2 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த வாரம் ஒரு இலட்சம் பெறுமதியான ஆடு ஒன்றினை புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இருந்து கோப்பாய் பகுதிக்கு ஆட்டோவில் கொண்டு சென்ற இருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அவர்களை கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கினை விசாரணை செய்த நீதவான் மேற்குறித்த குற்றங்களுக்கு 12 ஆயிரத்து 500 அபராதம் விதித்தார். (இ-9)

## 'ஆராரோ ஆரிவரோ' நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

தென் பொலிகைகுமார தீபனின் ஆராரோ ஆரிவரோ என்ற தாலாட்டு நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு பொலிகண்டி வீரபத்திரர் ஆலயத்தில் உள்ள அரங்கில் பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)




# இந்து மதத்தில் பொதுச் சேவைக்கென நிதியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்

## யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இந்து மதத்தில் பொதுச்சேவைக்கென நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டு சமூக சேவைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**



இந்து சமயப்பேரவையின் ஏற்பாட்டில் திருமுறை விழா நேற்றைய தினம் நல்லூர் நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஆலயங்களிலும் அறநெறி வகுப்புக்களை நடத்த வேண்டும் என நாம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறோம். ஆனால் அந்த நடவடிக்கை எமக்கு முற்று முழுதாக வெற்றியளிக்கவில்லை. சிறிய அளவில் வெற்றி கிடைத்துள்ளது.

எமது மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் அறநெறிப் பாடசலைகளை அமைத்து திருமுறைகள் நிகழ்த்த வேணடும். பல ஆலயங்களில் இது வரை ஆரம்பிக்கவில்லை. அனைத்து ஆலயங்களிலும் அறநெறி வகுப்புக்களை ஆரம்பித்து இவ்வாறான சமூக பணிகளை செய்ய வேண்டும். அப்போது தான் தற்போது அதிகரித்துள்ள மத மாற்றத்தை தடுப்பதுடன் கல்வி வசதி அற்ற பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முடியும். சில ஆலயங்கள் இப்பணியை மேற்கொண்டபோதிலும் பல ஆலயங்கள் இன்னும் இதற்கான முயற்சி எடுக்காமல் இருப்பது பெரும் குறைபாடாகவுள்ளது.

அத்துடன் ஆலயங்களில் இடம்பெறும் பிணக்குகளை மற்றும பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தனியாக ஒரு அரச அதிபர் வர வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. புதிய நிர்வாகம்,பழைய நிர்வாகம். கணக்கு வழக்குகளில் பல பிரச்சினைகள். நிர்வாகத்தில் பல குழப்பங்கள் என தெரிவித்து என்னிடம் வந்து முறையிடுகிறார்கள்.

ஆலயங்கள் தான் சமூக பணியை செய்ய வேண்டும். ஆனால் ஆலயத்தில் இருப்பவர்கள் மோசமான நிலையில் பிரச்சினையில் ஈடுபடுகிறார்கள்.பண்புகளை இழந்தவர்களாக செயற்படுகிறார் கள்.

இவர்களின் செயற்பாடுகள் வெட்கமாக இருக்கிறது. அன்பின்றி தாம் இறைவனை விடப்பெரியவர்கள் என்ற சிந்தனையில் செயற்பட்டுவருகிறார்கள். இப்படியானவர்கள் ஏன் ஆலயத்தில் உள்ளார்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்கு ஆலயம் தேவையில்லை.

இவ்வாறான சிலரால் எமது மதத்துக்கு பாரிய இழுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆலயத்தின் மூலம்பெறும் வருவாயை பொதுச்சேவைகளுக்கு செயற்படுத்த அனைவரும் முனைய வேண்டும். பிணக்குகளை தீர்ப்பதற்கு நீதமன்றுக்கு செல்லும் செலவை பொதுச்சேவைகளுக்கு பயன்படுத்த முடியும். இவ்வாறான பிணக்குகளை தீர்ப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அமைப்பு ஒன்று இருக்க வேண்டும். அனைவரும் இணைந்து எமது மதத்தில் பொதுச் சேவைக்கென நிதியம் ஒன்று ஆரம்பிக்க வேண் டும்.

எமது மதத்துக்குரிய சிறப்பை அனைவரும் உணர்ந்து இணைந்து செயற்படுத்தி சிறந்த முறையில் மதம் சமூகத்துடன் பின்னிப்பிணைந்து இருப்பதற்கு உதவி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-9)

## விண்ணப்பத்தினை பெற்றுக் கொள்ளலாம்

கடந்த 2015 ஆம் ஆண்டிற்கான சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் உதயமான சிரேஷ்ட பிரஜைகளுக்கான மனித உரிமைகள் நலன் பேணும் அமைப்பிற்கு அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்றுவருகின்றன.

இவ்வமைப்பில்இணைந்து கொள்ள விரும்பும் சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளின் நலனில் அக்கறையுள்ள 50 வயதுக்கு மேற்பட்ட ஆர்வலர்கள் தங்களது விண்ணப்பங்களை இல. 01,3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.மேலதிக தொடர்புகளுக்கு 021-222 2021 என்ற தொலைபேசி இலக்கத்துடன்தொடர்புகொள்ள முடியும்என இலங்கைமனிதஉரிமை ஆணைக் குழுவின் உயர் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் அறிவித்துள்ளார்.(இ-9)



## ராணுவத்தின் ஏற்பாட்டில் வெசாக் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில்இம்முறை வெசாக் தின நிகழ்வுகள் எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் வேம்படி வீதி மற்றும் யாழ்.பொது நூலகத்தின் அருகிலுள்ள மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெசாக் தின அலங்காரங்கள், பக்திப் பாடல்களும், வெசாக் தோரணங்களும் அமைக்கப்படவுள்ளதுடன் மிக பெரிய அன்னதான நிகழ்வும் அன்றைய தினம் மாலை இடம் பெறும்.

எனவே இந்தநிகழ்வுக்கு அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு இலங்கை இராணுவத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-9)


இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் திருமுறை விழா நேற்றைய தினம் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்து சமயப் பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையினை வழங்கியிருந்தார். விருந்தினர்கள் உரையும் சான்றோர் கௌரவிப்பும் இடம்பெற்றது. (படங்கள்: கு.கஜரூபன்)

**பாவித்த பொருட்கள் விற்பனை**

1. Lister 10KVA3 Cylinder generator
2. TATA Buddy வான்
3. Safari 4S மோட்டார் சைக்கிள்
4. Yamaha Organ
5. மேசை, கதிரைகள் அலுவலக

நாட்களில் பார்வையிடலாம்.

**SOND**

இல.18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம்
(எடிசன் அக்கடமி, நல்லூர் அருகாமையில்)
தொடர்பு: 077 224 2394 (4580)

**திட்ட உத்தியோகத்தர், களப் பணியாளர் பதவி வெற்றிடங்கள்**

NGO துறைகளில் அனுபவமுள்ள வர்களிடமிருந்து சுய விபரக் கோவை யுடன் விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

**SOND**

இல.18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம் (எடிசன் அக்கடமி, நல்லூர் அருகாமையில்)
தொடர்பு: 077 224 2394 (4580)


# மே.21 இற்குப் பின்னர் அமைச்சரவை மாற்றம்

(கொழும்பு)

இலங்கை அமைச்சரவை, எதிர்வரும் மே 21 ஆம் திகதிக்குப் பின்னர், மாற்றியமைக்கப்படவுள்ளதாக, நன்கு தகவல் அறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜப்பானில் நடக்கவுள்ள ஜி-7 மாநாட்டுக்குச் செல்லும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடு திரும்பியதும், அமைச்சரவையை மாற்றியமைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, விரைவில் அமைச்சரவை மாற்றம் ஒன்று நிகழ்வதற்கான வாய்ப்புகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ, அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

தற்போதைய அமைச்சரவை மாற்றியமைக்கப்படுவது தொடர்பாக தனக்கு ஏதும் அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

# சட்டவிரோத மணல் அகழ்வுகள் குறித்து இதுவரை எந்த முறைப்பாடுகளுமில்லை

(மன்னார்)

சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பான எந்த முறைப்பாடுகளும் இதுவரை கிடைக்கவில்லை. அவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் உரிய அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தி அது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என மன்னார் பிரதேச சபையின் செயலாளர் இராசையா தயாபரன் தெரிவித்துள்ளார். மன்னார் தோட்டவெளிப்பகுதியில் தொடர் ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுவதாகவும் இதனைக்கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

அதாவது மன்னார் தோட்டவெளி புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து ஓலைத்தொடுவாய் புனித கர்த்தர் ஆலயத்திற்குச் செல்லும் வீதியின் அருகில் உள்ள பகுதிகள் சுமார் இரண்டு கிலோ மீற்றர் வரையான பகுதிகளில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது என்றும் இவ்வாறு மணல் அகழ்வினால் கடல்நீர் கிராமத்துள் உட்புகும் நிலை காணப்படுகின்றது. தினமும் இரவு 12 மணி முதல் அதிகாலை இரண்டு மூன்று மணி வரையும் இவ்வாறு மணல் அகழ்வு இடம் பெறுகின்றது என்றும் இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் பிரதேச சபையின் செயலாளர் கருத்து தெரிவிக்கும் போது, இது தொடர்பான முறைப்பாடுகள் எவையும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. இது தொடர்பான முறைப்பாடுகளை எமக்குத் தெரியப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அவ்வாறான இடங்கள் நேரில் சென்று பார்வையிட்டு அவற்றை உறுதிப்படுத்திக் கொண்டு இந்த பிரச்சினைகளை பிரதேச செயலகம், பொலிஸ அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தி இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-15)


## யாத்திரைத்தல திருவிழா
## புனித பிலிப்பு நேரியார் ஆலயம், செம்பியன்பற்று



**17.05.2016-26.05.2016**

17.05.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து நவநாள் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

I. நற்கருணை வழிபாடு- 25.05.2016 (புதன்கிழமை) மாலை 5 மணி

II. திருநாள் திருப்பலி- 26.05.2016 (வியாழக்கிழமை) காலை 6.30 மணி

யாத்திரிகர்களின் நலன்கருதி யாழ்ப்பாணம், பருத்தித்துறை பஸ் நிலையங்களில் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

திருவிழாக்கால வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் ஆலய நிர்வாகத்துடன் 20.05.2016 அன்று முற்பகல் 10.00 மணிக்கு தொடர்பு கொள்ளவும்.

திருவிழா அன்று (26.05.2016) மாலை 3.00 மணிக்கு விளையாட்டு நிகழ்வும் இரவு 8.00 மணிக்கு சிறப்பு எஸ்தாக்கியர் நாட்டுக் கூத்து ஆற்றுகையும் இடம்பெறும்புனிதரின் அருள் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(4578) பங்குத் தந்தையர்களும், பங்கு மக்களும்.


# சிதம்பர விநாயகருக்கு தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய இரதோற்சவ நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். (இ-312)


**வீட்டுடன் காணி விற்பனை**

கெற்பலியில் 1/2 ஏக்கர் காணி யுடன் சேர்ந்த வீடு வளவு மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 076 669 7942 (4520)



## கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோவில்

**10 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்(16.05.2016)**

**விசேட தவில், நாதஸ்வர கச்சேரி**

இன்று திங்கட்கிழமை 16.05.2016 கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோவில் 10 ஆம் திருவிழா காலை சங்காபிஷேகத்துடன் இலங்கை இந்திய தவில் ,நாதஸ்வர கச்சேரி இடம்பெறும்.

அன்று மாலை விசேட இலங்கை இந்திய தவில், நாதஸ்வர கச்சேரி மாலை 7மணி முதல் 11மணிவரை இடம்பெறும்.

**நாதஸ்வரம்**

நாதகான வினோதன் ஈழநல்லூர் P.S பாலமுருகன்
நாதஸ்வர இளவரசன் கோண்டாவில் K.P குமரன்

**தவில்**

தவில் சக்கரவர்த்தி, பத்மஸ்ரீ டாக்டர்
அரித்துவாரமங்கலம்
டாக்டர் A.K பழனிவேல்
கலைமாமணி கோவிலூர் K.G கல்யாணசுந்தரம்
அளவையூர் தவில்மேதை V.தெட்சணாமூர்த்தியின் புதல்வன்
தவில் வித்துவான் T.உதயசங்கர்
லயஞானபாலன்:ஈழ நல்லூர் P.S செந்தில்நாதன் (452)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:14<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L/அரசதொழில்<br>தொ.இ: B/5887 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 20செவ் 12 ல<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.COM/தனியார தொழில்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/5829 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 72செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்MBA/பெரியலாளர்<br>தொ.இ: B/5816 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 21சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/5832 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 42சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Diploma/அரச தொழில்<br>தொ.இ: B/5818 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 25சூரிசெவ் 3 ல<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5838 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: 10ஆம் தரம்/சொந்த தொழில்<br>தொ.இ: B/5819 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 6சூரிசெவ் 11 ல<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5842 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு: 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# சட்டவிரோத குடியேறிகள் தொடர்பாக விசாரணை

## வன ஜீவராசிகள் அமைச்சு தீர்மானம்

(வவுனியா)

**வனஜீவராசிகளின் பகுதிகளில் அனுமதியின்றி குடியேறியுள்ளவர்கள் மற்றும் விவசாயம் மேற்கொள்வோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு வன ஜீவராசிகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.**

இதற்கான பிரதேச ரீதியிலான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சுமித் பிலபிட்டிய தெரிவித்தார்.

இதற்கான முதலாவது கூட்டம் வவுனியாவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டுள்ளது.

வனஜீவராசிகளின் வாழ்விடங்களில் முறையற்ற விதத்தில் மக்கள் எவ்வாறு குடியேறியுள்ளனர் மற்றும் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர். என்பது தொடர்பில் ஆராய்வதே இந்தக் குழுக்களின் முதற்கட்ட பணியாக அமைந்துள்ள






தாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

பிரதேச மட்ட குழுக்களின் ஆய்வறிக்கை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு தேசிய மட்டத்தில் குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதேச குழுக்களின் அறிக்கையை ஆராய்ந்து தேசிய குழு, தேவையான நடவடிக்கைககளை மேற்கொள்ளும் எனவும் வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சுமித் பலப்பிட்டிய தெரிவித்துள்ளார். (இ-5)

# உலோகக் குழாய்களைச் சிறகுவலை மீன்பிடி முறைக்கு பயன்படுத்த முடியும்

( கிளிநொச்சி )

நிபந்தனைகளுக்கு அமைவாக உலோகக்குழாய்களை (கல்வனைஸ் பைப்) சிறகு வலை மூலமான மீன்பிடி முறைக்கு பயன்படுத்த முடியும் என கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி அன்று பூநகரி பள்ளிக்குடா, வலைப்பாடு ஆகிய பிரதேசங்களின் கடற்பரப்பில் இருந்து கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள். பாசையூர் மற்றும் சாவக்காடு மீனவர்களுடைய கடற்றொழில் உபகரணங்களை உலோகக் குழாய்களை பயன்படுத்தி சிறகு வலை மூலம் மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டவிடயம் என தெரிவித்து கடலில் இருந்து உபகரணங்களை அகற்றி கிளிநொச்சி நீதிமன்றில் பாரப்படுத்தினார்கள்.

இரண்டு ஊர் மீனவர்களும் கடற்றொழில் திணைக்களத்திடம் உபகரணங்களை ஒப்படைக்குமாறு கேட்டபோதும் உலோகக்குழாய் பாவித்து மீன் பிடித்தல் 1996.11.07 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை செய்யப்பட்டது என கூறி நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர்.

எனவே மீனவர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி எம்.ரெமீடியஸ் குறித்த உபகரணங்களை மீனவர்களிடம் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்திருந்தமையை தொடர்ந்து குறித்தநீரியல் வளத்துறை அதிகாரிகளை 2016.04.05 அன்று நீதிமன்றில் ஆஜராகுமாறு கட்டளையிட்டிருந்தார். அன்றையதினம் ஆஜராகிய அதிகாரிகள் வலைகளை கொடுப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்றும் உலோக குழாய்களை கொடுப்பதற்க ஆட்சேபனையும் தெரிவித்தனர்.

இதன் போது குறித்த சட்டத்தரணி வர்த்தமானி அறிவித்தலை மன்றில் சமர்ப்பித்து அதில் உலோகக்குழாய் தொடர்பாக ஒன்றும் சொல்லப்படவில்லை என்றும் அது தடை செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். அதனை ஏற்றுக் கொண்ட நீரியல் வளத்துறை அதிகாரிகள் அது வர்த்தமானியில் தடை செய்யப்படவில்லை எனவும் ஆனால் கடற்றொழில் நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் படி கடலில் மீன்பிடிப்பதாக இருந்தால் கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடம் அனுமதிபெற வேண்டும் எனதெரிவித்தனர். 6 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட சில மீன்பிடி முறைகளுக்கு மட்டுமே அனுமதி பெறப்படவேண்டும் என மீனவர்கள் சார்பில் வாதாடிய சட்டத்தரணி தெரிவித்தார். அப்போது நீரியல்வளத்துறை அதிகாரிகள் 1996.11.07 ஆம் திகதி வர்த்தமாணி அறிவித்தலில் 17 மீன்பிடிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் 9 ஆவது முறை சிறகு வலை எனத்தெரிவித்தனர். 9 ஆவது முறை பொறிவைத்து மீன் பிடிக்கும் முறையை குறிப்பிட்டுள்ளதே தவிர சிறகு வலை பற்றி குறிப்படப்படவில்லை என்றும் சிறகுவலைமுறை 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரிய வாழ் ஆதாரத்தை அடிப்படையாக கொண்ட மீன்பிடி முறை என்றும். வர்த்தமானி அறிவித்தலில் கொண்டுவரப்பட்ட வேளையில் பாராளுமன்றுக்கும் மீன்பிடி விடயம் கையாளும் அமைச்சுக்கும் சிறகு வலை முறைக்கு அனுமதி பெற வேண்டும் எனில் வெளிப்படையாக கூறியிருப்பார்கள் என சட்டத்தரணி தெரிவித்தார். இதனை பரிசீலித்த நீதிபதி இரு தரப்பினரும் எழுத்து மூல சமர்ப்பணத்தை சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டு வழக்கை கடந்த 12 ஆம் திகதி தீர்ப்புக்காக ஒத்திவைத்தார்.

கடந்த 12 ஆம் திகதி நீதவான் உலோககுழாய் பாவிக்க முடியாதது தொடர்பாக கட்டளைகளில் எவ்விதமான ஏற்பாடுகளும் இல்லை என கூறியதுடன் இவ்விடயம் தொடர்பாக இரு தரப்பினரும் ஒரு உடன்படிக்கைக்குவர வேண்டும் என ஆலோசனை வழங்கினார்.

உலோகக்குழாய்கள் பயனபடுத்தமுடியும் எனவும் பயன்படுத்தப்படும் உலோகக்குழாயின் ஆகக்கூடிய உயரம் 18 அடியாக இருக்கவேண்டும் என்றும் அதைவிட உயரமான எவையும் மீன்பிடிக்கு பயன்படுத்த முடியாது எனவும் இரு தரப்பினரும் உடன்பாட்டுக்கு வந்தனர்.

இதனை தொடர்ந்து மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக உலோகக்குழாய்கள் சிறகுவலை மூலமான மீன்பிடி முறைக்கு பயன்படுத்தலாம் எனகட்டளையிட்டதுடன் மன்றில் ஒப்படைக்கப்பட்டிருந்த மீனவர்களின் உபகரணங்களை மீனவர்களிடம் ஒப்படைக்குமாறும் நீதவான் கட்டளையிட்டார்.

நீதவானின் தீர்ப்பையடுத்து பாசையூர் மீனவர்கள் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்தனர். (இ-9)

# முறையற்ற விதத்தில் வழக்கு நீதவான் கடும் எச்சரிக்கை

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குடபட்ட இலுப்பைக்கடவை கிராமத்தில சட்ட விரோதமான முறையில் "பனங்கள்ளு" விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த மன்னார் மதுவரித்திணைக் கள அலுவலர் முறையற்ற விதத்தல் வழக்கு தொடுத்தமைக்காக மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா கடும் தொனியில் எச்சரித்த சம்பவம் கடநத வெள்ளிக்கிழமை மன்னார் நீதி மன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குடபட்ட இலுப்பைக்கடவை கிராமத்தில் சட்டவிரோதமான முறையில் பனங்கள்ளு விற்பனை செய்தார்கள் என்ற குற்றச் சாட்டில் 5 சந்தேக நபர்கள் கைது செய்த மன்னார் மது வரித்திணைக்கள அதிகாரிகள் குறித்த சந்தேக நபர்களை கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது மன்னார் மது வரித்திணைக்கள அலுவலகர் ஒருவரும் மன்றில் பிரசன்னமாகியிருந்தார். இதன் போது குறித்த 5 சந்தேக நபர்களும் சட்டவிரோதமான முறையில் இலுப்பைக் கடவை பகுதியில் பனங்கள்ளு விற்பனை செய் தார் என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது. இதன்போது மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் குறித்த வழக்கானது மன்னார் மது வரித் திணைக்களத்தினால் மாதம் மாதம் "கோட்டா" அடிப்படையில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், தமது சங்கத்தினால நபர்கள் தெரிவு செய்யப்பட்டு வழக்கு நடவடிக்கைக்காக மன்னார் மது வரித்திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது என குறித்த நபர் மன்றில் தெரிவித்தார். இதனையடுத்து மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா குறிதத 5 சந்தேக நபர்களிடமும் வாக்கு மூலத்தை திறந்த மன்றில் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டார்.

மேலும் அப்பாவி சீவல் தொழிலாளர்களை ஏன் இவ்வாறு மன்னார் மது வரித் திணைக்கள அதிகாரிகள் நடத்துகின்றார்கள் என்றும் குறித்த மதுவரித் திணைக்கள அதிகாரிகளை எச்சரித்ததோடு, குறித்த சந்தேக நபர்களிடம் திறந்த நீதிமன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் மன்னார் மது வரித்திணைக்களத்தில் குறித்த அலுவலகருக்கும், தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறப்படும் உத்தியோகஸ்தர்கள் குழுவினர்களுக்கும் எதிராக எவ்விதமான சட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது குறித்து தனக்கு அறிவுரைகளை வழங்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் குறித்த வழக்குச்சீட்டுக்களை அனுப்புமாறு கூறியதோடு, மன்றில் ஆஜராகியிருந்த மன் னார் மதுவரித்திணைக்கள அலுவலகரை கடும்தொனியில் நீத வான் எச்சரித்தார்.

மேலும் குறித்த 5 சந்தேக நபர்களையும் தலா ஆயிரம் ரூபாய் பெறுமதி யான சொந்தப் பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

குறித்த வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# கிளிநொச்சி மாணவர்களால் எனக்குப் பெருமை

## கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் கிளிநொச்சி மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் பண்புகள் மிக்க நடவடிக்கைகள் பெருமையாக பேசப்பட்டமையினால், கிளிநொச்சியின் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் அந்தக் கூட்டத்தில் தான் மிகவும் பெருமையடைந்ததாக வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும், இந்துக் கல்லூரிக்கும் இடையே நேற்று முனதினம் இடம் பெற்ற நீலங்களின் சமர் துடுப்பாட்ட போட்டியில் பிர தம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

யாழ்ப்பாணத்தில் நீதிபதி இளஞ்செழியன் உள்ளிட்ட சில நீதிபதிகள் நடத்திய கூட்டம் ஒன்றில் மாணவர்களின் தற்போதைய நடவடிக்கைகள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. இதன் போது கிளிநொச்சி மாணவர்களின் ஒழுக்கம், பண்புகள் குறித்தும் பேசப்பட்டது. இது அந்தக் கூட்டத்தில் என்னை பெருமைப்படுத்தியது. எனக்குறிப்பிட்ட அவர்,

இந்த துடுப்பாட்ட போட்டியிலும் போட்டியாளர்கள் மற்றும் பார்வையாளர்கள், கலந்துகொண்ட மாணவர்கள் என அனைவரும் போட்டி முடியும் வரைக்கும் நடந்துகொண்ட விதம், கடைபபிடித்த கட்டுப்பாடுகள், பண்புகள் என்பன கிளிநொச்சி மாணவர்கள் ஒழுக்க மிக்கவர்கள் என்பதனை மேலும் உறுதிப்படுத்தியது. அதற்காக நான் உங்களை பாராட்டுகிறேன். தொடர்ந்தும் ஒழுக்க மிக்க செயற்பாடுகள் தொடர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (இ-312)


### உண்மையான உணர்வோடு நினைவேந்துங்கள்

# போரில் மறைந்த உறவுகளை மறப்பது மனிதப் பண்பல்ல

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

(மன்னார்)

**மண்ணையும், மறைந்த உறவுகளையும் மறப்பது மனிதப் பண்பல்ல. எனவே மே 18 ஐ உண்மையான உணர்வோடு நினைவேந்துங்கள் என வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.**



இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இன விடுதலைக்காக எம்மால் கொடுக்கப்பட்ட தியாகங்கள் எண்ணிலடங்காதவை. பல்லாயிரக்கணக்கான உறவுகளை இழந்திருக்கின்றோம். மொத்த இழப்புக்களின் இறுதி நாளே மே 18 ஆம் திகதி ஆகும்.

பிறந்த மண்ணையும் மறைந்த உறவுகளையும் மறப்பவர்கள் மனிதருமல்ல, தமிழருமல்ல. அந்த வகையில் எம்மினம் இவ்வுலகில் இருக்கும் வரைக்கும் நினைவில் வைத்திருக்கவேண்டிய மே 18. எம்முடைய மனங்களிலிருந்து படிப்படியாக இந்த நினைவுகள் குறைந்து வருவதை தற்போதைய காலத்தில் உணர முடிகின்றது. இந்நிலை தொடருமெனில், நாம் இந்த மண்ணுக்காக சிந்திய இரத்தம், விதைக்கப்பட்ட ஒவ்வொரு உயிர்கள், எம்மினத்தின் சரித்திரம் தொடர்பில் எமது அடுத்த சந்ததியினர் பிற இனத்தவரிடம் கேட்டு அறியவேண்டிய துர்ப்பாக்கிய நிலை வெகு தொலைவில் இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேலும் இப்போது எங்கு பார்த்தாலும் எமது பகுதிகளில் கொலை, கொள்ளை, வன்புணர்வுகள் இவற்றுக்கு மேலாக தற்போது வாள் வெட்டுக் கலாசாரம்.

எமது இனம் இன்று எதை நோக்கிப் போகின்றது என்பதை எனது இளைய சமுதாயமே நீங்கள் சிந்திக்கின்றீர்களா? குறிப்பாக யாழ் மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு சில இளைஞர்கள் வாள்வெட்டுக் கலாசாரத்துக்கு அடிமைகளாக மாறிவிட்டீர்கள்.

மேற்படிக் குற்றச் செயல்கள் தென்பகுதியினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது என நாம் கூறுவோமாயின், அது எமக்கு நாமே கூறிக்கொள்ளும் மிகவும் பொய்யான வார்த்தைகளாகும், எமது இளைய சமுதாயமே நீங்கள் மற்றவர்களை சாகடிக்கப் பிறந்தவர்களல்லர், சாதிக்கப்பிறந்தவர்கள். இதிலிருந்து மீண்டு வருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எம்மினத்தின் விடுதலைக்காக நாம் அளவுக்கதிகமாகவே உயிர்களையும், உறவுகளையும் இழந்து நிற்கின்றோம். அவற்றிற்கு அர்த்தம் தேடவேண்டுமெனில் நீங்கள் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டியது வாள்களை அல்ல, ஜனநாயகத்தின் திறவு கோல்களாய் இருக்கின்ற பேனாக்களையும், ஜனநாயக விழுமியங்களையுமே.

ஆகவே என்னுடைய இளைய சமுதாயமே...!! வருகின்ற மே 18 ஆம் திகதிக்குப்பின்னர் நம்முடைய மண்ணிலே வாள்வெட்டுக் கலாசாரம் இல்லை என்ற செய்தி இந்த உலகம் முழுவதும் பரவவேண்டும், வாள்களைத் தூக்கி எறிந்துவிட்டு சத்தியத்தோடு வெளியில் வாருங்கள். உங்களுக்காக புதிய வாழ்க்கை காத்திருக்கின்றது.

மே 18 நினைவேந்தல் முள்ளிவாய்க்காலில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை உணர்வுபூர்வமான அஞ்சலி வழிபாடுகள் வடக்கு மாகாணசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன, ஆகவே வரக்கூடியவர்கள் அனைவரும் வருகைதருமாறும் வர முடியாத எமது உறவுகள் தேவையற்ற களியாட்டங்களைத் தவிர்த்து தத்தமது இல்லங்களில் அல்லது இடங்களில் அஞ்சலி வழிபாடுகளில் ஈடுபடுமாறும் உங்கள் அனைவரிடமும் நான் உரிமையோடும் உணர்வோடும் கேட்டுநிற்கின்றேன்.

மேலும் குறித்த திகதியில் மே 18 அன்று முல்லைத்தீவு நகரத்தில் இருந்து முள்ளிவாய்க்காலுக்கான விசேட பேருந்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. என்பதோடு அன்றைய நினைவேந்தல் ஆராதனைகள் பிற்பகல் 5 மணிவரை தொடர்ந்து நடைபெறுமெனவும், பொதுமக்கள் தமக்கு வசதியான நேரத்திற்குச் சென்று நினைவஞ்சலி செய்யமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9-281-312)

## அன்றாடம் பல பிரச்சினைகள்; வீதியை புனரமைத்து தாருங்கள்

### ஈஸ்வரிபுரம், மறவன்குளம் பகுதி மக்கள் கோரிக்கை

வவுனியா தெற்கு பிரதேசத்திற்குட்பட்ட ஈஸ்வரிபுரம், மறவன்குளம் ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமையினால் இதனைப் பயன்படுத்தும் மக்கள் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் இவ்வீதியை புனரமைத்து தருமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மறவன்குளம், ஈஸ்வரிபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து கிடாச்சூரிவரைக்குமான ஐந்து கிலோ மீற்றர் வரையான பிரதான வீதி புனரமைக்கப்படாமல் பாரிய குன்றும்குழியுமாக காணப்படுவதனால் இதனூடாக பயணிக்கும் மக்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த கிராமங்களில் இருந்து பல்வேறு சிரமங்களின் மத்தியில் தமது பயணங்களை மேற்கொண்டு கிடாச்சூரியிலிருந்து பேருந்து மூலம் வவுனியா நகருக்கு சென்று தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் வவுனியா தெற்கு பிரதேச சபைக்குச்சொந்த மான குறித்த வீதியினை புனரமைத்து தமது கிராமத் திற்கான சீரான போக்குவ ரத்து வசதிகளை ஏற்படுத்தி தருமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கீழ் 182 கிராமங்கள் காணப்படுகின்றன. இதில் அநேகமாக மீள் குடியேற்றப்பட்ட கிராமங்களாகவே காணப்படுகின்றன.

புதிய வீட்டுத்திட்ட கிராமங்களாக இவை காணப்படுவதனால் இங்குள்ள வீதிகள் தற்காலிக வீதிகளாகவே காணப்படுகின்றன. இவற்றை ஏற்கனவே தற்காலிகமாக செப்பனிட்டுக் கொடுத்திருந்தோம். தற்போது மறவன்குளம் கிராமத்தில் வேலைத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது. இதேவேளை இந்த ஆண்டில் ஈஸ்வரி புரம் கிராமத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது. தான் குறித்த கிராமத்தை சென்று பார்த்த போது தற்போது பெய்து வரும் மழையினால் வீதிகள் சேதமடைந்து மழைநீர் தேங்கிக்காணப்படுகின்றது. காலநிலை சீரானதும் அவ்வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-15)




## சிசுவின் தாய்க்கு விளக்கமறியல்

கிளிநொச்சி புளியம்பொக்கணை ஆற்றுப்பகுதியில் பொலித்தீன் பையில் சுற்றப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட சிசுவின் தாயை எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி புளியம்பொக்கணை ஆற்றுப்பகுதியில் பொலித்தீன் பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் கடந்த 8 ஆம்திகதி சிசு ஒன்றின் சடலம் இருப்பதாக பொதுமக்கள் வழங்கிய தகவலைத்தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற தர்மபுரம் பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் அச் சிசுவின் தாயென சந்தேகிக்கும் பெண்ணொருவரைக் கைது செய்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதித்திருந்ததுடன் இச்சம்பவம் தொடர்பான மேலதிக அறிக்கை யினை கடந்த 13 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்ததையடுத்து குறித்த சந்தேக நபரை கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நேரடியாக சென்று பார்வையிட்ட நீதவான் மேற்படி சந்தேக நபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-5)

## சட்டவிரோத மணல் அகழ்வு இருவர் பொலிஸாரால் கைது

(மல்லாவி)

கிளிநொச்சி உமையாள்புரம், வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனம், உழவு இயந்திரம் என்பன கிளிநொச்சி பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருவதாகவும் இதனைத்தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் பொலிஸாரின் விசேட நடவடிக்கை மூலம் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றினூடாக தண்டம் விதிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் ஒன்றின் சாரதியை கைது செய்துள்ளனர்.

அத்துடன் வட்டக்கச்சிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் ஒன்றினையும் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு குறித்த வாகன சாரதிகள் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளார். (இ-15)

### நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும்

## கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் கிளிநொச்சியில் அடையாளம் காணப்பட்டன

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளன என கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.கௌரிதிலகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்களின் பிரதான வாழ்வாதாரத் தொழில்களில் கால்நடை வளர்ப்பு முக்கியமான ஒன்றாகக்காணப்படுகின்றது. இவ்வாறு கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாத நிலையில் பயிர்செய்கை காலங்களில் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளரிடம் தொடர்பு கொண்ட போது கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அடையாளங் காணப்பட்டுள்ளன.

இதில் முதற்கட்டமாக கண்டாவளைப் பிரதேசத்தில் நூறு ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட மேய்ச்சல் தரவையினை உருவாக்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் ஆரம்பக்கட்ட வேலைகளுக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டு அதற்கான திட்டம் உரிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேய்ச்சல் தரவைகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிப்பதற்கு அதற்கான நில அளவை செய்யப்படவேண்டும். நில அளவை செய்வதற்கான நிதி இல்லாத நிலை காணப்படுகின்றது. கண்டாவளை பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள நூறு ஏக்கர் நிலத்தினை அளவீடு செய்வதற்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதி தேவையாகவுள்ளது.

இதேபோன்று ஏனைய பூநகரி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களிலும் மேய்ச்சல் தரவைகளாக அடையாளம் காணப்பட்ட இடங்களையும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கு அளவீடு செய்வதற்கு அதிக நிதி தேவையாகவுள்ளது என்றும் தெரிவித்த உதவிப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேய்ச்சல் தரவைகளுக்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் கண்டாவளைப் பிரதேசத்திற்கான மேய்ச்சல் தரவையின் நூறு ஏக்கர் நிலத்தினை அளவீடு செய்வ தற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு திணைக்களங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-15)









யாழ். வயாவிளான் மத்திய கல்லூரியின் உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் அதிபர் வி.ரி.ஜயந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இணையத்தளத்தை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



நெடுந்தீவு வாழ்வின் எழுச்சிப் பிரிவினரால் 24.02.2016 இல் நடத்தப்பட்ட சித்திரைப்புத்தாண்டு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய பயனாளி ஒருவருக்கு அண்மையில் பரிசில் வழங்கப்பட்ட போது...



தெற்குப்புன்னாலைக்கட்டுவன் தாழையம்பதி ஸ்ரீ அன்னம்மா மகேஸ்வரர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த அலங்கார உற்சவத்தில் பன்னிரெண்டு நாட்கள் சிவலீலை பற்றி தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழி வாற்றிய கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்த சர்மாவை பாராட்டி ஆலய பரிபாலன சபைத்தலைவர் ஆனந்தராசா பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை மாணவர்களுக்கு. பாடசாலையின் பழைய மாணவிகளான புலம்பெயர் சகோதரிகளால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. ஏழாலை வடக்கைச் சேர்ந்த சகோதரிகளான திருமதி.சந்திரன் சாந்தா மற்றும் திருமதி ராஜன் ரஜனா ஆகியோரின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட கற்றல் உபகரணங்கள் அண்மையில் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வின் போது மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் எஸ்.ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்ததுடன், மாணவ முதல்வர்களுக்கான சின்னங்களையும் சூட்டிவைத்தார். இந்நிகழ்வில் ஏழாலை வடக்கு மக்கள் முன்னேற்றக்கழகத்தின் தலைவர் ரஞ்சன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்: கிஷோ)





சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 109 ஆவது ஆண்டு நினைவு விழா தும்பளை கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. நிலையத்தலைவர் பா.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொண்டிருந்தார்.




கரவெட்டி கன்பொல்லை கிராமத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மூன்று மாணவர்களுக்கு புலம்பெயர் ஐரோப்பிய சமூகத்தால் வழங்கப்பட்ட நிதி கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்ட போது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# குமுதினியாள் கடல் நடுவே துயரம் தோய்ந்த மானிடத்தின் நினைவுகள்




நீண்ட பெரும் கடற்பரப்பால் பிரித்துக் கொண்டது நெடுந்தீவின் பௌதீக அம்சம் என்றாலும் மானிடம் யாழ்.குடாவோடு இணைந்தே இருந்தது.

மக்களின்அன்றாடத்தேவைகளுக்காக பொங்கும் நுரைக் கடலைக் கடக்க வேண்டிய தேவை இருந்தது. தினம் தினம் குமுதினிப் படகு அதிகாலையில் தனது சேவையினை நெடுந்தீவு மாவலித் துறையில் இருந்து குறிகாட்டுவானிற்கான பயணத்தை ஆரம்பித்தது.

பொங்கும் கடல் அலையின் மத்தியில் காற்றை பிளந்து தனது பயணத்தை ஆரம்பித்த போது உறவுகள் கூடியே வழமை போல் வழியனுப்பி வைத்தார்கள்.

அரச உத்தியோகத்தர்கள் வர்த்தகர்கள், பொதுமக்கள் என்று பல்வேறு வயதுப் பிரிவினரும் பயணித்தனர்.

1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி கறை படிந்த துயரத்தை சுமந்த நாளாகியது. நடுக்கடலில் குமுதினி சென்று கொண்டிருந்த போது வழி மறித்த கண்ணாடியிழைப் படகு குமுதினியின் முதல் அறைக்குள் எல்லோரையும் அழைத்து பின்னர் ஒருவர் ஒருவராக இரண்டாவது அறைக்குள் அழைத்து துடிக்கத் துடிக்க கூரிய ஆயுதங்களால் வெட்டிச் சாய்த்தனர். இந்தக் கொடூர தாக்குதலில் இருந்து தப்பிப் பிழைக்க கடலில் குதித்தவர்களை துப்பாக்கிரவைகள் பதம் பார்த்தன.

பிஞ்சுகள், பெண்கள், வயோதிபர் என்ற பேதமின்றி குதறியே உயிர் குடித்து கோரத் தாண்டவம் ஆடினர் அரக்கர் குழு.

நடுக்கடலில் நடந்த ஈனச் செயலில் 36 பேர் உயிரிழந்தனர். இது 45 நிமிடங்களில் நடந்தேறியது.

குற்றுயிரும் குறையுயிருமாய் கிடந்தவர்களை குமுதினியாள் குறிகாட்டுவான் பாலத்தில் கொண்டு வந்து சேர்த்தாள். குறிகாட்டுவான் பாலத்திலே தங்கி நின்ற நயினாதீவு, புங்குடுதீவு, மக்கள் அவசர அவசரமாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர்.

இந்தக் கொடூர செயல் கண்டு தமிழ் பேசும் நல்லுலகமே சோகத்தில் ஆழ்ந்திருக்க ஏன் மனிதநேயம் மிக்க சர்வதேசமே இப்படியுமா? என்று கதி கலங்கி நின்றது. ஆனால் எந்த நீதியும் கிடைக்கவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் இல்லை.

இன்று வரை இது தொடர்கதையாய் தமிழர் தேமெங்கும் பல்வேறு வடிவங்களில் தொடர்கின்றது. நேற்று குமுதினிப் படுகொலை நடந்து 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளாகும்.

கொடுமைகள் அகன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்க ஏங்கும் மக்களுடன் நானும்

இரா.தர்மரத்தினம்
நெடுந்தீவு

# ஆர்மி சம்பத் கைது

பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினர் ஆர்மி சம்பத் என்பவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

ஆர்மி சம்பத்துடன் மற்றுமொரு அவரது சகாவும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொம்பனித்தெரு பொலிஸ் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் கைது செய்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் உத்தரவிற்கு அமைய சந்தேக நபர்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் ஒப்படைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெமட்டகொட சமிந்த என்னும் பாதாள உலகக் குழு உறுப்பினரை கொலை செய்ய முயற்சித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் ஆர்மி சம்பத்திற்கு தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-5)

# பாகிஸ்தானுடனான நல்லுறவு அத்தியாவசியம்- அமெரிக்கா

பாகிஸ்தானுடனான நல்லுறவு தங்களுக்கு மிகவும் அத்தியாவசியமானது என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கூறியதாவது,

அமெரிக்காவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவில் தற்போது தொய்வு ஏற்பட்டிருப்பது என்னவோ உண்மைதான். சில சமயங்களில் பிரச்சினை மிகுந்த சிக்கல் வாய்ந்ததாக மாறி விடுகிறது.

எல்லா விவகாரங்களிலும் இரு நாடுகளுக்கும் ஒருமித்த கருத்து இருப்பதில்லை.

எல்லாவற்றையும்விட பாகிஸ்தானுடனான நல்லுறவுதான்எங்களுக்கு முக்கியம்.

அந்தப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை இரு நாடுகளும் ஒரே மாதிரியான அச்சுறுத்தல்களையும், ஒரே மாதிரியான கவலைகளையும், ஒரே மாதிரியான அக்கறையையும் பகிர்ந்துகொள்கின்றன.

எனவே, தொடர்ந்து இரு நாடுகளும் இணைந்து பணியாற்றும் என்றார் அவர்.

பாகிஸ்தானுக்கு 8 எஃப்-16 போர் விமானங்கள் வாங்குவதற்கான நிதியுதவியை அமெரிக்க நாடாளுமன்றம் தடுத்துள்ளதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் தொய்வு ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் பிரதமருக்கான வெளிவிவகார ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் கூறினார்.

அதுகுறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு ஜான் கிர்பி இவ்வாறு பதிலளித்தார். (இ-5)

# பௌத்த மதத்துறவி வெட்டிக் கொலை

வங்கதேசத்தில் 70 வயது பௌத்த மதத் துறவி அவரது மடாலயத்தில் வெட்டிக் கொல்லப்பட்டார்.

அந்த நாட்டின் பந்தர்பன் மாவட்டம், நாயக்காங்சாரி என்ற பகுதியில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். பங்களாதேசத்தில் மதச்சார்பற்ற கருத்துகளை வெளியிடுவோர், சிறுபான்மையினர் ஆகியோர் வெட்டிக் கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்தப் படுகொலை நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து நாயக்காங்சாரி பொலிஸ் நிலைய அதிகாரி காஜி அஷான் கூறியதாவது,

பௌத்த மதத் துறவி மாங் ஷோய் வூ-வின் மடாலயம், மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத பகுதியில் அமைந்துள்ளது.

அந்த மடாலயத்தில் அவர தனியாகத் தங்கியிருந்தார். அவருக்கு காலை உணவு அளிப்பதற்காக நேற்று முன்தினம் சனிக்கிழமை மடாலயத்துக்குச் சென்ற சீடரொருவர், அவர் அங்கு அரிவாளால் வெட்டப்பட்டு சடலமாகக் கிடப்பதைக் கண்டார்.

மாங் ஷோய் வூ-வின் கழுத்து அறுக்கப்பட்டிருந்தது என்றார் அந்த சீடர். இந்தப் படுகொலைக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

ராஜ்ஷாஹி நகரில், 65 வயது சூஃபி இஸ்லாம் மத போதகரை இதே முறையில் மர்ம நபர்கள் கடந்த வாரம் வெட்டிக் கொன்றனர்.

முன்னதாக, அந்த நகரில் மிதவாத பேராசிரியர் ஒருவரை இஸ்லாமிய தேச (ஐ.எஸ்) பயங்கரவாதிகள் வெட்டிக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# செய்தித்துளிகள்

## பங்களாதேசத்தில் மட்டும் மின்னல் தாக்கியதில் இதுவரை 56பேர் பலி

பங்களாதேசத்தில் மின்னல் தாக்கி கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 56 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் அதிகமானோர் வயல் வெளியில் வேலை செய்து கொண்டிருந்த போதே மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

பங்களாதேசத்தில் இடி மின்னல் தாக்குதலில் உயிரிழப்புகள் ஏற்படுவது இயல்பாக இருந்தாலும் இவ்வருடம் மிகவும் மோசமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மரம் முறிந்து வீழ்ந்ததில் வீடுகள், வாகனம் சேதம்

நுவரெலியா, கொத்மலை பிரதேசத்திற்குட்பட்ட பலபொக்குன பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை மற்றும் காற்று காரணமாக மரம் ஒன்று வீடுகளின் மேல் சரிந்து வீழ்ந்ததால் இரு வீடுகளும் ஒரு லொறியும் சேதமடைந்துள்ளனது.

இதனால் குறித்த பகுதியில் மின்சார துண்டிப்பு ஏற்பட்டுள்ளதோடு திருத்த பணிகளை கொத்மலை மின்சார சபை மேற்கொண்டு வருகின்றது.

அனர்த்தம் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளை, கொத்மலை பிரதேச சபை அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், பொலிஸார், கிராம சேவகர் மற்றும் பொது மக்கள் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## விமலின் ஆதரவாளரால் அநுரவுக்கு அவதூறு

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் அயர்லாந்து விஜயம் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அவர் மீது சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டவர், மகிந்தவினதும் விமல் வீரவன்சவினதும் முக்கிய ஆதரவாளர் ஒருவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமல் வீரவன்சவுக்கு வக்காலத்து வாங்கும் வஜிர கமல் சமரக்கொடி என்பவர் பர்தாள உலகக் குழுவின் ஒரு உறுப்பினர் எனவும் மக்கள் விடுதலை முன்னணி அவரைப் பற்றிய தக்வல்களை வெளியிட்டதன் பின்னர் அறிவித்தல் விடுத்துள்ளது. (இ-5)


## மகிந்தவுக்காக சாகும்வரை உண்ணாவிரதத்துக்கு தயார்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுக்க குழுவொன்று தயார் நிலையில்உள்ளதாகமேல்மாகாண சபை உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

நவகமுவ பத்தினிதேவா லயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டு எதிர்கட்சியின் சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

## நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறப்பு



மலையகத்தில் நேற்றுக் காலை முதல் பெய்து வரும் அடைமழை காரணமாக மேல் கொத்மலை மின்சார சபைக்கு நீரேந்தும் பகுதியில் ஆற்று நீரின் மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதனால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் நான்கு திறந்து விடப்பட்டுள்ளன.

அணைக்கட்டிற்கு கீழ் பகுதியில் ஆற்றை பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதிகளில் ஆங்காங்கே மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தலைவர் பிரபாகரனை கைது செய்யுமாறு தீர்மானம் நிறைவேற்றியவர் ஜெயலலிதா

## கலைஞர் கருணாநிதி குற்றச்சாட்டு



(டில்லி)

**விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியவர் ஜெயலலிதா என்று கலைஞர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜெயலலிதா நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கைத் தமிழர்கள் பற்றியும், அதிலே தி.மு. கழகத்தின் மீது குறை கூறியும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைத் தமிழர்கள் நலன் பற்றிப் பேசுவதற்கு ஜெயலலிதாவுக்கு ஏதாவது தகுதி உண்டா? ஜெயலலிதா 16-4-2002 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் நிறை வேற்றிய தீர்மானம் மறந்து விட்டதா?

மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது என்றும் தமிழகச் சட்டப் பேரவையில் 16-4-2002 அன்று தீர்மானம் கொண்டு வந்து நிறை வேற்றியவர் ஜெயலலிதா என்பதை தமிழ்நாட்டு வாக்காளர்கள் மறந்து விட்டார்களா? ஜெயலலிதா மறந்து விட்டாலும் உலகத் தமிழர்கள் மறக்கவில்லை. இன்று இலங்கைத் தமிழர் களுக்காக ஜெயலலிதா வடிக் கும் நீலிக் கண்ணீரைக் கண்டு யாரும் ஏமாறப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார். (இ-5)

## தமிழக மீனவர்களின் மீது இலங்.கடற்படை தாக்குதல்

### இந்திய ஊடகங்கள் செய்தி

தனுஷ்கோடி அருகே, தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளது.

தனுஷ்கோடி அருகே மீன்பிடித்த பாம்பன் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளது.

வேதாரண்யத்தில் அண்மையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட, தமிழக மீனவர்கள் 5 பேரை விடுதலை செய்ய வைத்தது மத்திய பாஜக அரசு என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளது.

தங்கள் கோபத்தை இலங்கை கடற்படை இப்படி வெளிப்படுத்தி விட்டதோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

டில்லிக்கு கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன வருகை தந்தார்.

அவருக்கு பிரதமர் மோடி விருந்தளித்த நிலையில், இந்திய மீனவர்கள் மீது சிங்கள கடற்படையால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது என அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

## விஜய் மல்லையாவின் பங்களா பறிமுதல்


கடன்தொகைகளை வசூல் செய்யும் வகையில் கிங்ஃபிஷர் நிறுவனத் தலைவர் விஜய் மல்லையாவுக்குச் சொந்தமான கோவாவில் உள்ள அவரது பங்களாவை பாரத ஸ்டேட் வங்கி கடந்த வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்தது.

ஸ்டேட் வங்கி உள்ளிட்ட பல்வேறு வங்கிகளிடமிருந்து சுமார் ரூ.9,600 கோடி கடன் பெற்று அவற்றை திருப்பிச் செலுத்தாதது தொடர்பாக விஜய் மல்லையா மீது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது.

ஆனால், அவர் பிரிட்டனில் இருப்பதால் இந்த வழக்கில் அவர் ஆஜராகவில்லை.

இந்நிலையில், வெளிநாடுகளில் மல்லையா வாங்கியுள்ள சொத்துகள் தொடர்பான வழக்கில் அவருக்கு எதிராக பிணையில் வெளிவர முடியாத பிடியாணையை மும்பை நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்தது. இதன் தொடர்ச்சியாக, தங்களிடமிருந்து பெற்ற கடன் தொகையை வசூலிக்கும் விதமாக, விஜய் மல்லையாவுக்குச் சொந்தமாக கோவா மாநிலம், பனாஜியில் உள்ள அவரது சொகுசு பங்களாவை பாரத ஸ்டேட் வங்கி கடந்த வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்தது. இதுகுறித்து அந்த வங்கியின் சட்டத்தரணி விகாஸ்குமார் கூறுகையில் "அந்த பங்களாவானது பாரத ஸ்டேட் வங்கியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. இனி அந்த பங்களாவுக்குள் யாரும் செல்ல முடியாது" என்றார். (இ-5)

## குண்டூரில் சுவர் இடிந்து விழுந்ததில் 7 கட்டடத்தொழிலாளிகள் உயிரிழப்பு



ஆந்திர மாநிலம் குண்டூரில் சுவர் இடிந்து விழுந்ததில் 7 கட்டட தொழிலாளிகள் நேற்றுக்காலை உயிரிழந்தனர்.

குண்டூர் மாவட்டம் லட்சுமிபுரம் பகுதியில் 4 மாடிகள் கொண்ட வணிகவளாகம் கட்டும் பணி நடைபெற்று வந்தது. தொழிலாளர்கள் மதில் சுவர் எழுப்பும் பணியில் ஈடுபட்ட போது கரிசல் மண் பகுதியில் சரிவு ஏற்பட்டு உள்ளது. அப்போது ஏற்பட்ட குழியில் அவர்கள் சிக்கிக்கொண்டனர். இதனைத்தொடர்ந்து அப்பகுதியில் இருந்த உணவகத்தின் மதில் சுவரும் விழுந்து உள்ளது. இச்சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் உயிர்பிழைத்த மரியா தாஸ், மண்ணில் மாற்றம் தெரிவதாக நாங்கள் எடுத்துரைத்தோம், அச்சம் தெரிவித்தோம்.ஆனால் கொத்தனார் பணியினை தொடர கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து விபத்து நேரிட்டது என்று கூறியுள்ளார். விபத்து நேரிட்டதை இச்சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்ததும் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து கட்டட தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினர். அவர்கள் அதிகாரிகளின் காரை அடித்து நொறுக்கியதாகவும் கூறப்படுகிறது. பொலிஸார் போராட்டக்காரர்களை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இச்சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருகிறது. (இ-5)

## வீதி விபத்தில் சிக்கி 15 பேர் உயிரிழப்பு

தெலுங்கானாவில் டிப்பர் லொறி-ஆட்டோ மோதி விபத்து நேரிட்டதில் 15 பேர் உயிரிழந்தனர்.

தெலுங்கானா மாநிலம் அடிலாபாத் மாவட்டத்தில் பாயின்ஸா நகரில் டிப்பர் லொறி - ஆட்டோ மோதி விபத்து நேரிட்டதில் 15 பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட இந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் மராட்டிய மாநிலத்தை சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 7 சிறுவர்களும், 5 பெண்களும் உயிரிழந்தனர். இவ்விபத்தில் காயம் அடைந்த மேலும் 3 பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆட்டோவில் கோவிலுக்கு சென்றபோது விபத்து நேரிட்டுள்ளது. இது தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருகிறது. (இ-5)

பாரதச் செய்தி

## ஜார்க்கண்ட் வன்முறையையடுத்து 550 பேர் கைது

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜேஎம்எம்) கட்சியினர் அழைப்பு விடுத்த முழு அடைப்புப் போராட்டத்தின்போது வன்முறையில் ஈடுபட்ட அக்கட்சி எம்எல்ஏ உட்பட 550 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

தொழில், வேலை வாய்ப்பு அல்லது பல்வேறு காரணங்களுக்காக ஜார்க்கண்ட் மாநிலத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக தங்கியிருந்தாலோ அல்லது அங்கு அசையாச் சொத்துக்களை வாங்கியிருந்தாலோ அவர்கள் ஜார்க்கண்ட் மாநில குடியிருப்பாளராக கருதப்படுவர் என்று மாநில அரசு, குடியேறும் உரிமைக் கொள்கையை அண்மையில் உருவாக்கியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஜேஎம்எம் கட்சியினர், ஜார்க்கண்ட் மாநிலத்தின் குடியிருப்பாளர் என்பதற்கான தகுதியை கடந்த 1932 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி நிர்ணயிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது. இதைத் தொடர்ந்து, அக் கட்சியினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

போராட்டக்காரர்கள் ஜாம்ஷெட்பூரில் நின்றிருந்த தனியார் பேருந்துக்கு தீவைத்தனர். இதைத் தொடர்ந்து சிங்பூம் மாவட்டத்தில் தங்கா அருகே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஒரு லொறி தீ வைத்து கொளுத்தப்பட்டது.


பொகாரோ மாவட்டம், நவாடி சாலையை மறிப்பதற்காக வாகன டயர்களை போராட்டக்காரர்கள் எரிப்பதைத் தடுக்க முயற்சித்த பொலிஸ் அதிகாரி ராம் சந்திர ராம் காயமடைந்தார்.

மேலும் பல்வேறு வாகனங்களின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டதுடன், கோல்ஹான் பகுதியில் வீதி மறியலும் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது வன்முறையில் ஈடுபட்ட 550 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் ஜேஎம் எம் கட்சி எம்எல்ஏ தசரத் காக்ராய் மற்றும் அவரது ஆதரவாளர்கள் 50 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

முதல்வர் ரகுவர் தாஸ் உத்தரவின்படி, மாநிலம் முழுவதும் முழு அடைப்பு ஆதரவாளர்கள் 9,284 பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸாரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளனர். இப் போராட்டத்துக்கு ராஷ்ட்ரீய ஜனதா தளம் (ஆர்ஜேடி), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்டவை ஆதரவு தெரிவித்தன. (இ-5)

# இந்துக் கோயிலில் லண்டன் மேயர் சாதிக் கான்



இங்கிலாந்து நாட்டின்தலைநகரான லண்டன் நகர மேயராக பாகிஸ்தானை சேர்ந்தவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பேருந்துச் சாரதியின் மகனான சாதிக் கான்(45), தொழிலாளர் கட்சி வேட்பாளராக போட்டியிட்டார்.

இந்த தேர்தலில் சுமார் 11 இலட்சம் மக்கள் வாக்களித்தனர். வாக்கு எண்ணிக்கையில் மொத்த வாக்குகளில் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமாக பெற்ற சாதிக் கான், லண்டன் நகர புதிய மேயராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு லண்டனில் உள்ள டூட்டிங் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக கடந்த பத்தாண்டுகளாக பதவி வகித்துவரும் சாதிக் கான், மனித உரிமைகள் துறை சட்டத்தரணியாகவும் பணி யாற்றிய அனுபவம் வாய்ந்தவர்.

லண்டன் நகரின் மேயராக பொறுப்பேற்றுக் கொள்ளும் முதல் இஸ்லாமியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சாதிக் கான் லண்டனில் உள்ள சுவாமி நாராயணன் கோவிலுக்கு சென்றார். அங்கு சென்று சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டார் சாதிக் கான். சில நாட்களுக்கு முன்தான் கோவிலுக்கு சென்ற புகைப்படங்களை பேஸ்புக்கில் வெளியிட்டார்.

தற்போது இந்த புகைப் படங்கள் இணையத்தில் பரவி வருகின்றன.

லண்டனில் இருக்கும் இந்தியர்களுடன் நெருக்கமான உறவை பேணி வரும் சாதிக் கான், அங்கு வசிக்கும் இந்தியர்களுக்கு ஆதரவாகவும், இந்தியாவுடன் நல்லுறவை பேண விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.(இ-5)

# இந்தியாவின் எல்லையில் சீனப் படைகள் குவிப்பு!

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**இந்தியாவையொட்டிய எல்லைப் பகுதியில் சீனப் படைகள் குவிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சகமான பென்டகன் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அமெரிக்க நாடாளுமன்றத்தில் இந்த ஆண்டில் சீனாவின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை பென்டகன் தாக்கல் செய்தது. அதைத் தொடர்ந்து, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகத்திலுள்ள கிழக்கு ஆசிய விவகாரத்துறைதுணைஅமைச்சர் ஆபிரகாம் எம். டென்மார்க் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இந்தியாவையொட்டிய எல்லைப் பகுதியில் சீனப் படைகள் குவிக்கப்பட்டிருப்பதையும், அப்பகுதியில் முகாமிட்டுள்ள சீனப் படைகளின் தாக்குதல் திறன் அதிகரித்திருக்கப்பட்டிருப்பதையும் அமெரிக்கா கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது.

சீனா எதற்காக இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்பதை கணிப்பது கடினமாகவுள்ளது.

எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்தியா-சீனா இடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன.

இரு நாட்டு இராணுவ வீரர்களும் ஆயுதங்களுடன் தங்களது எல்லையில் தீவிர ரோந்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்திய எலலையில் சீன படைகளை குவித்திருப்பது கவலையளிக்கிறது.

இதேபோல், உலகின் பிற பகுதிகளில் இருக்கும் தனது தளங்களிலும் சீனா தனது இராணுவ வீரர்களைக் குவித்து வருகிறது.

குறிப்பாக, பாகிஸ்தானில் சீனா தனது இராணுவ வீரர்களை அதிகரித்து வருகிறது. இந்தியாவில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஆஷ்டன் கார்ட்டர் அண்மையில் மேற்கொண்ட சுற்றுப்பயணம மிகவும் ஆக்கபூர்வமானதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்தது.

இந்தியாவுடனான நட்புறவை மேலும் விரிவுபடுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது. சீனாவை கருத்தில் கொண்டு இந்தியாவுடனான உறவை அமெரிக்கா அதிகரிக்கவில்லை.

இந்தியா உலகளவில் ஒரு முக்கிய சக்தியாக வளர்ந்து வருகிறது. ஆகையால், அந்நாட்டுடன் நாங்கள் உறவை வலுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

உலக தரிசனம்

# டெக்சாஸில் பேருந்து விபத்து 8பேர் பலி,44 பேர் படுகாயம்!

டெக்சாஸில் நடந்த பேருந்து விபத்தில் இதுவரையில் 8 பேர் பலியாகியுள்ளனர், 44 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ மாகாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் (உள்ளூர் நேரப்படி) US 83 வீதியில் இந்த விபத்து நடந்துள்ளது.



இதில் 8 பேர் பலியாகியுள்ளதுடன், 44 பேர் படுகாயமடைந்துள்ளனர். உடனடியாக விரைந்து சென்ற மீட்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். காயமடைந்தவர்களுகு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (இ-5)

# 45 ஐ.எஸ். தீவிரவாதிகள் குண்டுவீச்சில் உயிரிழப்பு!

(இஸ்தான்புல்)

சிரியா நாட்டில் கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில் 2 1/2 இலட்சம் பேர் கொன்று குவிக்கப்பட்டனர். 10 இலட்சம் பேர் காயம் அடைந்தும், 1 கோடியே 10 இலட்சம் பேர் அகதிகளாக பிற நாடுகளுக்கு இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

அங்கு பெப்ரவரி மாதம் இறுதியில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள போதிலும், அலெப்போ நகர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மட்டும் மோதல்கள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அலெப்போ நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் இலக்குகளை குறி வைத்து துருக்கியும், அமெரிக்க கூட்டுப்படைகளும் குண்டுவீச்சு நடத்தின. இதில் சிக்கி 45 ஐ.எஸ். தீவிரவாதிகள் பலியாகினர்.

இந்த தகவலை சிரியா அரசன்அனடோலு செய்திமுகாமை தெரிவித்துள்ளது. (இ-5)

# உடல் முழுவதும் ரோமங்கள் வளர்ந்து அவதியுறும் சிறுமி

பங்காளதேசத்தைச் சேர்ந்த 12 வயது சிறுமிக்கு உடல் முழுவதும் ரோமங்கள் வளர்ந்துள்ளன.

பிதி அக்தர் எனும் இந்த சிறுமி விசித்திர நோயால் அவதிப்பட்டு வருகின்றார்.

பிறக்கும்போதே இவரது முகத்தைச் சுற்றி ரோமங்கள் வளர்ந்து காணப்பட்டன. பின்னர் உடல் முழுவதும் முடி வளர ஆரம்பித்துள்ளது.

குழந்தை வளர்ந்தால் இந்தக் குறைபாடு சரியாகிவடும் என பெற்றோர் நினைததுள்ளனர்.

ஆனால், பிதி அக்தர் வளர வளர அவருடன்ரோமங்களும் உடல் முழுதும் வளரத் தொடங்கியது.

அத்துடன் அவரது ஊனும் வளர்ந்து வீங்கிக் காணப்பட்டது.

இதனால் அந்த சிறுமி தன்னுடைய உடலை முழுவதுமாக மூடிக்கொண்டு இருக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்.




அவரது தந்தைக்கு வருமானம் அதிகம் இல்லாததால் தொடர்ந்து வைத்திய சாலையில் வைத்து சிகிச்சை அளிக்க முடியாமல் உள்ளார்.

இதுகுறித்து சிறுமியின் தாய் கூறுகையில், “அவள பிறக்கும்போது கட்வுள் கொடுத்த வரம் என்று நினைத்தோம்.

ஆனால், ஒவ்வொரு நாளும் வலியுடன் வாழும் எனது குழந்தையை நீண்ட காலம் என்னால் பார்க்க முடியாது” என்றார்.

உலகத்தில் நான்கு அல்லது ஐந்து பேர்தான் இது போன்ற விசித்திர நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என சிறுமிக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர் தெரிவித்துள்ளார். (இ-5)





# சிறுவர் அரங்கம்

1435

## முட்டாளும் புத்திசாலியும்

மழை! ஓயாத மழை! ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை. அந்த ஏரி நீர் குளிர்ச்சி அடைந்து விட்டது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்று தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிண ற்றிற்குள் குதித்தது.

அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த ஒரு தவளை இந்தப் புதிய தவளையை வரவேற்றது. "நான் வெகு நாட்களாகப் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவித்துக் கொண்டிரு ந்தேன். உன்னைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி" எனக் கூறிப் பொந்தில் வைத்தி ருந்த உணவு வகைகளைப் புதிய தவ ளைக்குத் தந்தது.

இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த மற்ற தவளைகளுக்குப் புதிய தவளை வந்தது பிடிக்கவில்லை. "இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு" எனக் கவலை ப்பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட முடிவு செய்தன.

இரண்டு தவளைகளும் பேசிக்கொண் டிருப்பதை அருகே சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அக்கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம், "நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியி ருந்தாய்?" எனக் கேட்டது.



"நான் ஏரியில் தங்கி இருந்தேன" என்றது ஏரித் தவளை.

"ஏரியா? அப்படியென்றால் என்ன?" எனக் கேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியவை உண்டு" என்றது ஏரித் தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்றதில் அவ்வளவு உயிரினங்களா?" என்று கேட் டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைவிட மிகப்பெரியது ஏரி" என்றது ஏரித் தவளை.

கிணற்றுத் தவளை நம்பவில்லை. "நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்த கிணற்றைவிட பெரிய நீர் நிலை உலக த்தில் இருக்க முடியாது" என்றது.

ஏரித் தவளை எவ் வளவோ எடுத்துச் சொல் லியும், கிணற் றுத் தவ ளை நம்பவி ல்லை. கூட இருந்த மற்ற தவளை களும் நம்பவில்லை.

எல்லாத் தவளை களும் ஏரித்தவளை யைப் பார்த்து "நீ பொய் யன், புரட்டன், உன் னை நம்பி இங்கே வைத் திருந்தால் ஆபத்து" என்று கூறி ஏரித் தவ ளையைத் தாக்க முய ன்றன.

அப்போது, கிணற்றிலி ருந்து நீர் எடுக்க ஒரு பெண் தோண்டியை இறக்கிய போது, அதனுள் தாவிச் சென்று குதித்த ஏரித் தவளை, தோண்டித் தண் ணீருடன் மேலே சென்றது. தாவிக் குதித்து ஏரி நோக்கிச் சென்றது.

**முட்டாள்களிடம் வாதாடுவதை விட அவர்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது.**

## 05.2016 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1667 - யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வாக்கிய பஞ்சாங்கம் இராமலிங்க முனி வரால் வெளியிடப்பட்டது.
- 1811 - கூட்டுப் படைகள் (ஸ்பெயின், போர் த்துக்கல், மற்றும் பிரித்தானியா) பிரெஞ்சுப் படைகளை ஆல்புவேரா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தன.
- 1916 - யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வெசாக் பண்டிகை அங்குள்ள சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டது.
- 1920 - ரோமில் ஜோன் ஒஃப் ஆர்க் திருத் தந்தை 15ம் பெனடிக்ட்டினால் புனிதப் படுத்தப்பட்டார்.
- 1932 - பம்பாயில் இந்துக்களுக்கும் முஸ்லி ம்களுக்கும் இடையே. இடம்பெற்ற கல வரத்தில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப் பட்டனர்.
- 1960 - கலிபோர்னியாவில் ஹியூஸ் ஆய்வு கூடத்தில் தியொடர் மாய்மன் முதலாவது லேசர் ஒளிக்கதிரை இயக்கினார்.
- 1966 - சீனாவின் கலாச்சாரப் புரட்சியின் ஆரம்பத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.
- 1967 - ஜெருசலேம் நகரம் இஸ்ரேலின் வசம் வந்தது.
- 1969 - சோவியத்தின் வெனேரா 5 விண்கலம் வீனஸ் கோளில் இறங்கியது.
- 1975 - பொதுமக்கள் வாக்கெடுப்பின் அடிப் படையில் சிக்கிம் இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது.
- - ஜுன்கோ டபெய், எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதற் பெண் ஆனார்.
- 1992 - எண்டெவர் விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை முடித்து பூமிக்குத் திரும்பியது.
- 2004 - 30களில் கம்யூனிஸ்டுகளினால் படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்ச த்திற்கும் அதிகமான மக்களை நினைவு கூர உக்ரேனின் தலைநகர் கீவுக்கு அரு கில் உள்ள பிக்கீவ்னியாக் காட்டில் பல்லா யிரக்கணக்கானோர் கூடினர்.
- 2006 - தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகராகத் தகுதி உடைய வராக அறிவிக்க மு. கருணாநிதி தலைமை யிலான தமிழக அமைச்சரவையில் முடி வெடுக்கப்பட்டது.
- 2006 - நியூசிலாந்திற்கருகில் 7.4 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

### பிறப்புக்கள்

- 1931 - நட்வர் சிங், இந்திய அரசியல்வாதி

### இறப்புகள்

- 1830 - ஜோசப் ஃபூரியே, பிரெஞ்சு கணித வியலாளரும் இயற்பியலாளரும் (பி. 1768)
- 1947 - பிரடெரிக் ஹொப்கின்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1861)
- 2010 - அனுராதா ரமணன், எழுத்தாளர் (பி. 1947)

### சிறப்பு நாள்

- மலேசியா - ஆசிரியர் நாள்

### அனுராதா ரமணன

எழுத்தாளர



அனுராதா ரமணன் சிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர். பல்வேறு தலைப்புகளில் புதினங்கள், சிறுகதை களை எழுதியுள்ளார். இவரது சில கதை கள் தொலைக்காட்சித் தொடர்களாகவும், திரைப்படங்களாகவும் வெளிவந்திருக்கி ன்றன. தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளிலும் இவரது படைப்புகள் வெளியாகிச் சிறப்பு பெற்றிரு க்கின்றன.1947 இல் அனுராதா தமிழ் நாட்டிலிலுள்ள தஞ்சாவூரில் பிறந்தவர். நடிகரான அவரது தாத்தா ஆர். பாலசுப்பிரமணியத்தின் தூண்டுதலால் இவர் எழுத்தாளரானார். இவர் கணவர் பெயர் ரமணன். இவர்களுக்கு இரண்டு மகள்கள் உண்டு. ஒரு ஓவியக் கலைஞராகத் தனது பணியைத் தொடங்கிய அனுராதா தொடக்கத்தில் முக்கியமான இதழ்களில் வேலைதேடி முயற்சித்தார். ஆனால் அவரது முயற்சிகள் பலனளிக்கவில்லை. பின் "மங்கை" இதழாசிரியர் அனுராதாவின் படை ப்புகள் நன்றாக இருப்பதை அறிந்து அவரைப் பணியில் சேர்த்துக் கொண் டார். 1977 இல் மங்கை இதழ் மூலமாக தனது எழுத்துலகப் பணியைத் தொடங்கினார் அனுராதா. இலக்கியப் பணி மட்டுமின்றி விவாகரத்துக் கோரும் தம்பதியருக்கு சேர்ந்துவாழ ஆலோசனை வழங்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தார். 30 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 800 புதின்ங்களும் 1,230 சிறுகதைகளும் எழுதியுள்ளார். அவரது கதைகள் பெரும்பாலும் குடும்ப த்தையும் அன்றாட நிகழ்வுகளையும் மையமாகக் கொண்டிரு ந்தன. ஆனந்த விகடனில் வெளியான அவரது சிறுகதை 'சிறை', சிறந்த சிறு கதைக்கான தங்கப் பதக்கம் வென்றது. இச் சிறுகதை அதே பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்டது. கூட்டுப்புழுக்கள், மனரின் பயணம், ஒரு வீடு இருவாசல் ஆகிய புதினங்களும் தமிழ், தெலுங்கு, கன்னட மொழி களில் திரைப்படமாக எடுக்கப்பட்டன. அவற்றுள் கே. பாலசந்தர் இயக்கிய ஒரு வீடு இரு வாசல் திரைப்படம் பிற சமூக சிக்கல்கள் மீதான சிறந்த திரைப்படத்திற்கான தேசிய விருதினை 1991 இல் பெற்றது. இவரது கதை யைக் கொண்டு 1988 இல் வெளியான ஒக்க பாரிய கதா என்ற தெலுங்குத் திரைப்படம் ஐந்து நந்தி விருதுகளை வென்றது. மேலும் இவரது கதைகள் அர்ச்சனைப் பூக்கள், பாசம், கனாக்கண்டேன் தோழி போன்ற இவரது பல கதைகள் தொலைகாட்சித் தொடர்களாகவும் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் அப்போதைய முதலமைச்சர் எம். ஜி. ஆர் இவருக்குத் தங்கப்பதக்கம் வழங்கியுள்ளார்.மே 16, 2010 இல் மாரடைப்பால் சென்னையில் தனது 62 வது அகவையில் இவர் மரணமடைந்தார்.

# சம்பூரில் அனல் மின் திட்டத்தை மாற்றியமைக்க அரசு முயற்சி

## இந்தியாவுடன் 20 ஆம் திகதி முக்கிய பேச்சு

(கொழும்பு)

**சம்பூர் அனல் மின் திட்டத்தை, திரவ இயற்கை எரிவாயு மின் திட்டமாக மாற்றியமைப்பது தொடர்பாக, எதிர்வரும் 20ஆம் திகதி இந்திய பங்காளர்களுடன், இலங்கை மின்சக்தி அமைச்சின் குழுவொன்று பேச்சுக்களை நடத்தவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

அனல் மின் திட்டத்துக்குப் பதிலாக, திரவ இயற்கை எரிவாயு மின் திட்டத்தை அமைப்பதற்கான சாத்திய ஆய்வை மேற்கொள்வதற்கு, பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவை குழு தீர்மானித்துள்ளது.

அத்துடன் சம்பூர் அனல் மின் திட்டம் தொடர்பாக ஏற்கனவே கோரப்பட்ட கேள்விப்பத்திரங்களை இரத்துச் செய்தல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி வைக்கவும் அமைச்சரவைக் குழு முடிவு செய்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் சுலக்சனா ஜெயவர்த்தன. இந்த திட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்றுமே 20 ஆம் திகதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

சம்பூரில் அனல் மின் நிலையத்தை ஆரம்பிக்க சுற்றுச் சூழல், சமூக மட்டத்தில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. திரவ இயற்கை எரிவாயு மின்திட்டத்தை அமைக்கலாமா என்று நாம் யோசித்து வருகிறோம். ஆனால் இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, இலங்கையில் திரவ இயற்கை எரிவாயுயை இறக்கவோ, அவற்றைக் கையாளவோ வசதிகள் இல்லை என்றும், அதனால் இலங்கையில் திரவ இயற்கை எரிவாயு மின்திட்டத்தை ஆரம்பிப்பது நடைமுறைச்சாத்தியமற்றது என்றும் ஜப்பானியர்கள் மேற்கொண்ட சாத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# பசிலுக்கெதிராக போர்க்கொடி



கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் அரசியல் ஒழுங்கமைப்பு பணிகள் பசில் ராஜபக்ஷ விடம் ஒப்படைக்கப்படுவதற்கு கூட்டு எதிர்க்கட்சியின் ஒரு தொகுதி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சி நடவடிக்கைகளில் பசிலை இணைத்துக் கொள்ளப்படுவதற்கு நேரடியாகவே எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

கடந்த அரசாங்கம் தோல்வியைத் தழுவ காரணமாயிருந்தவர்கள், கூட்டு எதிர்க் கட்சியின் கட்சிப் பொறிமுறையில் இருந்தால் கூட்டு எதிர்க்கட்சி பாரதூரமான நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடலாம் என பெயர் குறிப்பிட விரும்பாத கூட்டு எதிர்க் கட்சியின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விமர்சனத்திற்கு உள்ளானவர்கள் கூட்டத்தை ஒழுங்கமைக்கும்பணிகளை பொறுப்பேற்றிருந்த காரணத்தினால் அண்மையில் கிருலப்பனையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கூட்டு எதிர்க் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் பங்கேற்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த உகண்டா விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். (இ-5)

# லண்டன் ஆர்ப்பாட்டம் வேறொரு இடத்தில் இடம்பெற்றதாக கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் லண்டன் சென்றிருந்த போது விடுதலைப் புலிகளின் அனுதாபிகள், மாற்று இடம் ஒன்றில் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாக கொழும்பின் ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி, ஊழல்களுக்கு எதிரான மாநாடு ஒன்றில் பங்கேற்றிருந்தார். இந்த மாநாடு, மார்ல்பொரோவ் ஹவுஸில் இடம் பெற்றது.

அதேநேரம் பொதுநலவாய நாடுகளின் அரச சார்பற்ற அமைப்புக்களின் கூட்டம் ஒன்று, லன்காஸ்டர் ஹவுஸில் இடம்பெற்றது

எனினும் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள், சரியான தகவல் அறியாது லன்காஸ்டர் ஹவுஸ் பகுதியில் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாக இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. (இ-5)

# வற் வரி அதிகரிப்புக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு

(கொழும்பு)

வற் வரியினை 15 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கு முன்னிலை சோசலிசக் கட்சி தீர்மானித்துள்ளது.

"வற்வரியை மீளப்பெறு" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்துள்ள இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை பிரதான நகரங்கள் உட்பட பல பிரதேசங்களிலும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட ஏராளமான அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதாக கட்சியின் பிரசாரச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வற் வரியை அதிகரித்து மக்கள் மீது சுமை சுமத்தப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கம் மக்களுக்கு பொருளாதார ரீதியில் சலுகை வழங்க வேண்டும். அதனை விடுத்து வரிகளை விதித்து மக்களின் வாழ்வாதாரத்தை நெருக்கடிககுள்ளாக்கக்கூடாது. எனவே, வற் வரி தொடர்பில் அரசாங்ம் எடுத்துள்ள தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். மேலும், மக்கள் மீது சுமை ஏற்படுத்தாத பொருளாதாரக் கொள்கையினை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும்.

எனவே, வற் வரி அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் வேலைத் திட்டத்திற்கெதிராக எமது கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

பிரதான நகரங்கள் உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் இவ்வெதிர்ப்பு நடவடிக்கை களை மேற்கொள்ளத் திட்டமிடுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வீட்டுக்கு வந்தவர்களை...

வாங்கவென்று வாய் நிறைய வரவேற்க வேண்டும். முடிந்தால் வாங்க, வாங்க என்று அடுக்கு மொழியுடன் கேட்கலாம். இது நெருக்கத்தைக் கூட்டும். அவர்கள் உறவினர்களாய் இருக்கும் பட்சத்தில் உறவு முறையையும் சேர்த்து அழைக்க வேண்டும்.உதாரணமாக வாங்க சித்தி வாங்க மாமா என்பது போல்.

உள்ளே வந்தவுடன் முதலில் அவர்கள் அமர ஏற்பாடு செய்யுங்கள்.அப்புறந்தான் மற்றவையெல்லாம்.

நாய் குரைத்தால் அதை அடக்குங்கள்.குழந்தை கத்தினால் சமாதானப்படுத்துங்கள்.அலறும் ரேடியோவை நிறுத்துங்கள்.இவை அவர்களது வருகைக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகும்.

அவர்களது வருகையை வீட்டில் யார் யாருக்கெல்லாம் தெரிய வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் உடனே தெரியப்படுத்துங்கள்.உங்களுக்கு மட்டும் தெரிந்தவர்களாக இருந்தால் முக்கியமான குடும்ப உறுப்பினர்களை அழைத்து அறிமுகப்படுத்துங்கள். அறிமுகப்படுத்தும் சம்பிரதாயத்தை அவர்களை நன்கு பாராட்டுவதற்கு கிடைத்த வாய்ப்பு என்பதை மறந்து விடாதீர்கள்.

நேரத்தை மனதில் கொண்டு சாப்பிடச் சொல்வதா, குடிக்க ஏதேனும் கொடுப்பதா என்பதை முடிவு செய்யுங்கள். அவர்களையே கேளுங்கள். பிடிக்காதவற்றைக் கொடுத்து தர்ம சங்கடத்திற்கு ஆளாக்கதீர்கள்.ஒன்றும் வேண்டாம் என்று சொல்பவர்களையும் கட்டாயப்படுத்திப் பாருங்கள். கொஞ்சமாவது சாப்பிடுங்கள் என்று சொல்லுங்கள்.இந்த வகையான கட்டாயப்படுத்தல் அன்பைக் காட்டுவதாகவும் உபசரிப்புக் கலையின் உச்சமாகவும் கொள்ளப்படுமே தவிர தொந்தரவாகக் கொள்ளப்படாது.

இரண்டு மூன்று பேர் வந்தால் ஒருவருடன் மட்டுமே பேசிக் கொண்டிராமல் எல்லோரிடமும் சமமாக பேசிக் கொண்டிருங்கள்.

வந்தவர்களை உட்கார வைத்துவிட்டு வீட்டில் உள்ளவர்களோடு பேசிக் கொண்டிருக்காதீர்கள். வீட்டில் உள்ளவர்களோடு எப்போது வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம்.

அதேநேரத்தில் வீட்டில் உள்ளவர்களோடு சண்டை அடித்துக் கொண்டும் கத்திக் கொண்டுமிராமல் வந்திருப்பவர்களை மனதில் கொண்டு நடந்து கொள்ளுங்கள். தங்கள் முன்னிலையிலேயே விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்ந்தால் அவர்கள் பாடு தர்மசங்டமாகிவிடும். விருந்தினர்கள் வரும் முன் எத்தகைய களேபரம் நடந்திருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் எப்போதும் போல இயல்பாய் நடந்து கொள்ளப்பாருங்கள். வீட்டுக் கசப்புகளை அவர்கள் மீது தெளிக்காதீர்கள்.

வந்தவர்கள் கூடவே குழந்தைகளைக் கூட்டி வந்தால் அவர்களைச் சிறப்பாகக் கவனியுங்கள். அவர்களை நன்கு கவனித்தால் தங்களை இரண்டு மடங்கு உபசரித்ததைப் போல் மகிழ்வார்கள்.

நன்கு உபசரிக்கும் மனநிலை இல்லையா? மனசு சரியில்லை . நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள் என்று பக்குவமாய்ச் சொல்லிவிடுங்கள்.

உங்கள் வீட்டில் உங்களுக்கு செல்வாக்கு அதிகம்.எனவே விருந்தினர்களிடம் பயன்படுத்தும் வார்த்தைகளைப் பக்குவமாய்ப் பேசுங்கள். பொது இடத்தில் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் உங்கள் வீட்டில் அப்படியல்ல.

இறுதியாக,வாசல் வரை வந்து வழி அனுப்பத் தவறாதீர்கள்–

மொத்தத்தில் கூற வேண்டுமானால்

வீட்டிற்கு வந்தவர்கள் நாம் முக்கியமான நபர் போலவும், மதிப்பு மிக்க நபர் போலவும் , அந்நியர் என்ற உணர்வு ஏற்படாத வகையிலும் நடத்தப்பட்டோம் என்ற திருப்தியில் வீட்டை விட்டுப் புறப்படும் வகையில் பார்த்துக் கொள்ளுங்கள்.

லேனா தமிழ்வாணன்

# பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

1) பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் சரியான முறையில் நிரப்பப்படும் போதுதான், ஒவ்வொரு மாணவரும் தனது Z புள்ளிக்கு ஏற்றவாறான துறைகளில் அனுமதியினைப் பெறலாம். அத்துடன் இதற்கேற்றவாறு விருப்பமான பல்கலைக்கழகங்களில் அனுமதியினைப் பெறலாம். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 21 நிறுவனங்களில் அனுமதி பெறுவதற்காக சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு நிபந்தனைகளுக்கு அமைவாக பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் சிலர் கடந்த காலங்களில் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர்.

2) பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தை பின்வரும் இருமுறைகளில் அனுப்பலாம்.

அ) விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து தபால் மூலம் குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஆ) இலத்திரனியல் விண்ணப்பப்படிவத்தினையும் பூர்த்தி செய்து அனுப்பலாம்.

இதில் முதலாவது முறை மாணவர்களுக்கு இலகுவானதாக இருக்கும்.

3) அனுமதி எண்ணிக்கை பின்வருமாறு அமைந்திருக்கும்.

அ) தேசியரீதியில் Z புள்ளி நிரலின் அடிப்படையில் 40 வீதம்.

ஆ) மாவட்டத் திறமையின் அடிப்படையில் 55 வீதம். (சனத்தொகை வீதாசார அடிப்படையில்)

இ) 16 பின்தங்கிய மாவட்டங்களுக்கு சனத்தொகை வீதாசாரப்படி 5 வீதம்.

4) பல்கலைக்கழக அனுமதிகான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்.

அ) மூன்று தடவைக்குள் பரீட்சைக்கு தோற்றி மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ) 30% இற்கு குறையாத புள்ளிகளை பொதுச்சாதாரண வினாத்தாளில் பெற்றிருத்தல் வேண்டும். இதில் குறைவு ஏற்படின் மூன்று தடவைக்குள் பெற்றுக் கொடுக்கலாம்.

5) மாணவர்கள் கூடுதலான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

6) பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டத்தை தீர்மானிக்கும்போது பரீட்சை நடந்த திகதியிலிருந்து மூன்று வருடங்கள் குறிப்பிட்ட பாடசாலையில் கற்றிருத்தல் வேண்டும். பல பாடசாலைகளில் படித்திருப்பின் அதிக காலம் படித்த பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் கருத்தில் கொள்ளப்படும்.

7) விண்ணப்பம் கையினால பூர்த்தி செய்து அனுப்பப்படும் போது பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்ள வேண்டும்.

அ) எழுத்துக்கள் ஒரே தடவை தெளிவாக எழுதப்பட வேண்டும்.

ஆ) ஒரு கூட்டுக்குள் ஒரு எழுத்து மட்டும் எழுதப்பட வேண்டும்.

இ) கறுப்பு அல்லது நீல மை உடைய பேனாவை உபயோகிக்கலாம்.

ஈ) கூட்டுக்குள் புள்ளடி இடப் பட வேண்டும்.

உ) நிபந்தனைக்கு அமைவாக இலக்கங்கள் குறிப்பிட வேணடும். உதாரணம் தமிழர் - 2

ஊ) விண்ணப்பங்களில் இடப்படுகின்ற கையொப்பங்கள் ஒரே மாதிரியாக இருத்தல் வேண்டும்.

எ) சில துறைகளுக்கு விண்ணப்பிக்கும்போது விசேட தகமை வேண்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மூலப்பிரதியின் நிழற்பிரதி சரியான முறையில் உறுதிப்படுத்தி அனுப்பப்பட வேண்டும்.

ஏ) மறக்காது உரிய இடங்களில கையொப்பம் இடப்பட வேண்டும்.



ஐ) தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மேலதிகமாக வேண்டப்பட்ட ஆவணங்களை இணைத்து அனுப்ப வேண்டும்.

ஒ) போலியான ஆவணங்கள் அல்லது போலியான தகவல்கள் சமர்ப்பிக்கக் கூடாது.

ஓ) குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இதற்கான விண்ணப்பம் பிரத்தியேகமாக அனுப்பப்பட வேண்டும்.

ஔ) பல பாடப் பிரிவிலிருந்து மாணவர்கள் தகுதி பெறக்கூடிய கற்கை நெறிகளும் உண்டு. இது தொடர்பாக கைநூல் 64 ஆம் பக்கத்திலிருந்து 82 ஆம் பக்கம் வரை 34 துறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற க.பொ.த சாதாரணதர பரீட்சை முடிவுகளின் தரம் கைநூல் 109 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டு ள்ளது. மேலும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய கற்கை நெறிகளின் விபரம் 110 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

பதிவுத்தபால் மூலம் முடிவுத் திகதிக்கு முன்னர் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

8) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் பின்வரும் முக்கிய ஆறு துறைகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

i) கலைப்பிரிவு.

ii) வணிகவியல் பிரிவு.

iii)உயிரியல் விஞ்ஞானப் பிரிவு.

iv) பௌதீக விஞ்ஞானப் பிரிவு.

v) பொறியியல் தொழில் நுட்பப் பிரிவு.

vi)உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு.

9)கலைப்பிரிவு, வணிகவியல் பிரிவு தொடர்பான Computer Data Sheet பூர்த்தி செய்கின்ற முறையை யாழ். பல்கலைக் கழகம் சந்தைப்படுத்தல் துறைத் தலைவர் இ.ரட்ணத்துடனும் உயிரியல் விஞ்ஞானப்பிரிவு, பௌதீக விஞ்ஞானப்பிரிவு தொடர்பாக யாழ். பல்கலைக் கழக பௌதீகத் துறை தலைவர் பேராசிரியர் இ.ரவிராஜ் உடனும் பொறியியல் தொழில் நுட்பப் பிரிவு, உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு தொடர்பாக யாழ்.பல்கலை க்கழக பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமியையும் தொடர்பு கொள்ளலாம். விண்ணப்பம் பூர்த்தி செய்வது தொடர்பான சந்தேகங்களுக்கு யாழ்.பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறைத் தலைவா இ.ரட்ணத்து டன் தொலைபேசி இலக்கம் 077 373 4136 இற்கு தொடர்பு கொள்ளலாம்.

பொதுக்கருத்து

10) கலைப்பிரிவு

i) கலை (Arts) (ஒன் பது பல்கலைக்கழகங்களில்)

ii) கலை (Arts SAB) (சிறப்பு) - ஸ்ரீபாளி வளாகம்.

iii) கலை (Arts SAB) - இலங்கை சப்பிரகமுவப் பல்கலைக்கழகம்.

iv) தொடர்பாடல் கற்கைகள் (Communication Studies) - கிழக்குப் பல்கலைக கழக திருகோணமலை வளாகம்.

v) சமாதானமும் முரணபாடு தீர்த்தலும் (Peace and Conflict Resolution) - களனிப் பல்கலைக்கழகம்.

vi)இஸ்லாமிய கற்கை நெறி (Islamic Studies) - இலங்கைத் தென் கிழக்குப்பல்கலைக. கழகம்.

vii) அரபு மொழி (Arabic Language) - இலங்கைத் தென கிழக்குப் பல்கலைக்கழகம்.

viii)ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் (TESL)- களனிப் பல்கலைக் கழகம்.

ix) சங்கீதம் (Music)

x) நடனம் (Dance)

xi) நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)

xii) கட்புலக்கலை (Visual Arts) - கட்புல அரங்கேற்ற ககலைப் பல்கலைக்கழகம்

xiii) கட்புலமும் தொழிலநுட்பவியல் கலையும் (Visual & Technological Arts) - சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்.

xiv) சித்திரமும் வடிவமைப்பும் (Art & Design) - இராமநாதன் நுண்கலைக்கழகம்.

மேலும் பின்வரும் பாடநெறிகளுக்கும் கலைத்துறையில் தோற்றியவர்கள் விண்ணப்பிக்கலாம்

1. சட்டம்.
2. கட்டடக்கலை.
3. வடிவமைப்பு.
4. நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்.
5. முகாமைத்துவக் கற்கைகள் (TV)
6. கணிய அளவையியல்.
7. தகவல் தொழில்நுட்பம்.
8. பட்டினமும் நாடும் திட்டமிடல்.
9. தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்.
10. கணக்கிடலும் முகாமைத்துவமும்.
11. தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்.
12. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்.
13. முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும். (SEUSL)
14. உடற்றொழில் கல்வி.
15. விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்.
16. பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்.
17. விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்.
18. தகவல் தொழில் நுட்பமும் முகாமைத்துவமும்.
19. சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும்.
20. தகவல் முறைமைகள்.
21. நிலத்தோற்றக் கட்டடக்கலை.
22. மொழி பெயர்ப்புக் கற்கைகள்.
23. திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள்.
24. செயற்திட்ட முகாமைத்துவம்.
25. உணவு வியாபார முகாமைத்துவம்.

11) வணிகப்பரிவு.

1. முகாமைத்துவம்.
2. முகாமைத்துவம் (பொது) சிறப்பு [Management (Public) Special]
3. சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடம் (Estate Management & Valuation)
4. வணிகவியல் (Commerce)
5. முகாமைத்துவக்கற்கைகள் (TV) [Management Studies (TV)]
6. வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு) [Business Information Systems (Special)]

வணிகவியற் பிரிவில் தோற்றியவர்கள் பின்வரும் பாட நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

1. சட்டம்.
2. கலை (SAB)
3. கணிய அளவையியல்.
4. தகவல் தொழில்நுட்பம்.
5. கட்டடக்கலை.
6. வடிவமைப்பு.
7. நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்.
8. பட்டினமும் நாடும் திட்டமிடல்
9. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும்.
10. தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்.
11. வசதிகள் முகாமைத்துவம்.
12. கணக்கிடலும் முகாமைத்துவமும்.
13. தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்.
14. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்.
15. முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL)
16. உடற்றொழில் கல்வி.
17. விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்.
18. விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் .
19. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்.
20. சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும்.
21. தகவல் முறைமைகள்.
22. நிலத்தோற்றக் கட்டடக்கலை.
23. மொழி பெயர்ப்புக் கற்கைகள்.
24. திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள்
25. செயற்திட்ட முகாமைத்துவம்
26. உணவு வியாபார முகாமைத்துவம்.

க.பொ.த உயர்தரத்தில் பெற்ற Z- புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகவுள்ள மாணவர்களுக்கான அனுமதி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் இப்பகுதியில் தரப்படும் விடயங்கள் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு சில வழிகாட்டல்களைத்தர விளைகினறது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# புலம் பெயர் இலங்கைத் தமிழர் சமரசத்துக்கு முன்வர வேண்டும்

## ஜயம்பதி பிரிட்டனில் வலியுறுத்து



(கொழும்பு)

**புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள், இலங்கை அரசுடன் அரசியல் சமரசத்தை ஏற்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் என்று இலங்கையில் புதிய அரசமைப்புச் சட்டத்துக்கான வழிகாட்டுதல் குழுவின் உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ன வலியுறுத்தியுள்ளார்.**

பிரிட்டனில் இயங்கி வரும் வெளிநாடுவாழ் இலங்கைத் தமிழர்கள் அமைப்பு நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் எதிரும் புதிருமான இரண்டு கட்சிகளும் ஒருங்கிணைந்து ஆட்சியமைக்க முன் வந்தது இதுவரை கிடைக்காத மிக அரிய வாய்ப்பாகும்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, வெளிநாடுவாழ இலங்கைத் தமிழர்கள் அரசியல் சமரசத்துக்கு முன்வர வேண்டும.

எப்போதும், எல்லோருடைய எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவது என்பது இயலாத காரியம்.

எனவே, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் இந்த விவகாரத்தை அணுக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (இ-5)

## கடத்தப்பட்ட இளைஞன் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

இரண்டு கோடி ரூபா கப்பம் கோரி கடத்திச் செல்லப்பட்ட வாரியபொல பிரதேசத்தினை சேர்ந்த இளைஞர் நிக்கவரட்டியவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முனனர் 20 வயதான இளை ஞர் ஒருவரை அடையாளம் தெரியாத நபர்கள் கடத்திச் சென்றிருந்தனர்.

20 வயதுடைய மொஹம்மட் ஆசிக் என்ற இளைஞரே, கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.10 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த கடத்தலின் பின்னர் இரண்டு கோடி ரூபா கப்பம் கோரப்பட்ட நிலையில், குறித்த இளைஞர் நிக்கவரட்டியவில் வைத்து பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். (இ-5)

## பொதுக்கூட்டம்


யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் 2016 ஆம் ஆண்டிற்கான பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதிபர் எம். எஸ். எம். அஸ்ரப் அறிவித்துள்ளார்.

இப் பொதுக்கூட்டத்தில் புதிய உறுப்பினர் தெரிவு இடம்பெறவுள்ளமையினால் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (இ-9)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 722

Search for people, places and things | Nagendram Home

### றோகன்




### லொலிப்பப் விதுஷ்



### தர்சினி

வலிகள் இல்லாத
வழிகள் இல்லை...
விழிகள் மூடினால்
வெற்றிகள் இல்லை...
முயற்சி இல்லாமல்
மகிழ்ச்சி இல்லை...
முயன்ற மனிதன்
தோற்றது இல்லை...
கோபம் கொண்டால்
உறவுகள் இல்லை...

### அச்சு



### நிசாந்தன்




### புகழ்

வாய்விட்டு சிரிங்க...ப்ளீஸ்... சிரிங்க ப்ளீஸ்

Girl:என் பர்த்டேக்கு.
என்ன தருவ?
Boy:என்ன வேணும்?
Girl:ஒரு ரிங் கொடு போதும்
Boy:ம்ம்...ஓகே...but attend
பண்ணகூடாது...Balance போய்டும்...
சரியா...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

159

## பெற்றால்தான் பிள்ளையா படத்தொடர்பான தகராறில் எம்.ஜி.ஆர் சுடப்பட்டார்

கதை

பெற்றால் தான் பிள்ளையா படத்தில் எம்.ஜி.ஆர். ஓர் அனாதைக் குடிசையில் வசிப்பவர்.

அசோகன் வில்லன். அவர் சவுகார் ஜானகியை காதலிப்பதுபோல் நடித்து ஏமாற்றி, குழந்தை பிறந்ததும் கைவிட்டு விடுவார்.

கேட்பாரற்று கிடந்த குழந்தையை எம்.ஜி.ஆர்.எடுத்து வளர்ப்பார்.

எம்.ஜி.ஆர் வீட்டுக்கு எதிர் வீட்டில் எம்.ஜி.ஆர். ராதா வசிப்பார். அவர் ஒரு வித்தைக்காரர். அவருடைய தங்கை சரோஜாதேவி. எம்.ஜி. ஆருக்கும் சரோஜா தேவிக்கும் காதல் ஏற்படுகிறது.

கே.ஏ.தங்கவேலு, பொம்மை வியாபாரி. தன் குழந்தையைக் கண்டு பிடித்துக் கொடுக்கும் படி இவரிடம் சவுகார் ஜானகி கேட்டுக்கொள்வார். தங்கவேலுவும் பொலிஸ் காரர் டி.எஸ்.பாலையாவும் சிரமப் பட்டுத்தேடி குழந்தை யைக் கண்டு பிடித்து விடுவார்கள். ஆனால் குழந்தை மீது மிகுந்த பாசம் கொண்ட எம்.ஜி.ஆர். அதைக் கொடுக்க மறுத்துவிடுவார்.

இதற்கிடையே அசோகன் ஒரு விபத்தில் கால் இழந்து, மனம் திருந்தி, சவுகார் ஜானகியிடம் போய் சேருவார். குழந்தை யாருக்குச் சொந்தம் என்ற விடயம் நீதிமன்றத்துக்குப் போகும். குழந்தை பெற்றோருக்குத் தான் சொந்தம் என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறும்.

குழந்தையை பெற்றோரிடம் எம்.ஜி.ஆர் கொடுக்கும் போது துயரம் மிகுதியால் கண்ணீர் வடிப்பார். குழந்தையைப் பெற்றுக்கொண்டு சவுகார் ஜானகி புறப்படும் போது குழந்தை அப்பா என்றபடி எம்.ஜி. ஆரை நோக்கித்தாவும்.

இதுதான் பெற்றால்தான் பிள்ளையா படத்தின் கதை.

இந்தப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தது.

**தாய்க்குத் தலைமகன்**

12.01.1967 அன்று தேவர் பிலிம்ஸ் தயாரிப்பான தாய்க்கு தலைமகன் வெளியானது.

இதில் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் இணைந்து நடித்தனர். வசனம் ஆரூர் தாஸ். இசை:கே.வி.மகாதேவன். டைரக்ஷன்: எம்.ஏ. திருமுகம்.



அன்று மாலை எம்.ஜி. ஆரை எம்.ஆர் ராதா சுட்டுவிட்டார் என்ற செய்தி எரிமலை வெடித்ததுபோல் வெளியாகியது. தமிழ்நாடு முழுவதும் காட்டுத்தீபோல் இச் செய்தி பரவியது. மக்கள் உறைந்து போனார்கள். சினிமா தியேட்டர்களும் கடைகளும் மூடப்பட்டன. பேருந்துகளும் ரயில்களும் ஓடவில்லை. தமிழ் நாடே ஸ்தம்பித்தது.

எம்.ஆர்.ராதாவால் சுடப்பட்ட எம்.ஜி.ஆர். எமனுடன் போராடி வெற்றி பெற்றார்.

எம்.ஜி.ஆரை எம்.ஆர். ராதா துப்பாக்கியால் சுட்ட சம்பவம் சென்னை ராமாவரம் தோட்டத்தில் உள்ள எம்.ஜி. ஆர். வீட்டில் 1967 ஜனவரி 12 ஆம் திகதி நடந்தது.

அன்று மாலை 5 மணிக்கு ராமாவரம் தோட்டத்தில் உள்ள எம்.ஜி.ஆர். வீட்டுக்கு எம்.ஆர்.ராதா சென்றார். பெற்றால்தான் பிள்ளையா படத்தை தயாரித்த பட அதிபர் வாசுவும் உடன் சென்றார்.

பெற்றால்தான் பிள்ளையா படத்தை தயாரிப்பதற்கு எம்.ஆர்.ராதா ரூபா ஒரு இலட்சம் பண உதவி செய்திருந்தார். படம் முடிந்ததும் அந்தப்பணத்தை வாங்கித்தருவதாக எம்.ஜி.ஆர். கூறியிருந்ததாகவும் அது சம்பந்தமாகப் பேசவே வாசுவுடன் எம்.ஆர்.ராதா அங்கு சென்றதாகவும் கூறப்பட்டது.

எம்.ஜி.ஆரை ராதாவும் வாசுவும் சந்தித்தார்கள். அப்போது தகராறு ஏற்பட்டது. எம்.ஆர்.ராதா தன் மடியில் வைத்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்து எம்.ஜி. ஆரை சுட்டார். எம்.ஜி.ஆர். குனிந்தார் குண்டு இடது புற காது அருகே கன்னத்தில் பாய்ந்தது. (தொடரும்)

# பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தை...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கலைப்பிரிவைப்போலல்லாது உயிரியல், பௌதிகவிஞ்ஞானப் பிரிவுகளுக்கான அனுமதிகள் நாடளாவிய ரீதியில் திறமை அடிப்படையில் 40% உம் மாவட்ட திறமை அடிப்படையில் 55% உம் மிகுதி 5% விசேட ஒதுக்கீடாக கல்வியில் பின் தங்கிய நிலையில் உள்தாக அடையாளம் காணப்பட்ட 16 மாவட்டங்களுக்கும ஒதுக்கப்படும்.

விஞ்ஞானத்துறை மாணவர்களுக்குப்பொருத்தமான, பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான, பலதுறைகள் இருக்கின்ற போதிலும், விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது மாணவர்கள் கவனிக்கத் தவறுகின்ற சில விடயங்களால் பொருத்தமான பல்கலைக் கழகக் கற்கை நெறியைப் பெறும் வாய்ப்பைத் தவறவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

கணித, உயிரியல் துறை மாணவர்களுக்கு முறையே பொறியியல், மருத்துவ மற்றும் விவசாயத்துறைகள் தவிர உயிரியல், பௌதிக விஞ்ஞானத் துறைகளில் தற்போது பல புதிய கற்கைநெறிகளும், வாய்ப்புக்களும் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்றன. முன்னைய கணிப்பொன்றின் படி, பல புதிய துறைகளுக்குப் போதிய மாணவர்கள் விண்ணப்பிப்பதில்லை என்பது தெரியவந்திருக்கிறது. பல்கலைக்கழக அனுமதிக்காக முதலாவது விண்ணப்பத்தை அனுபபும் போது மிகச் சரியானபாடத் தெரிவை மேற்கொள்வதன் மூலம் குறைந்த புள்ளிகளைப் பெற்றிருப்பினும் இலகுவாகப் பல்கலைக் கழக அனுமதி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

இலங்கையில் பொறியியல் கற்கை நெறிகளை வழங்குவதற்கு பேராதனை, மொரட்டுவ றுகுனு மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம், தென்.கிழக்கு, ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன. கணிதப்பிரிவில் அதியுயர்வான Z புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்கள் பொறியியல் துறைக்குத் தெரிவுசெய்யப்படுவார்கள். அவர்களின் பல்கலைக்கழகத் தெரிவிலோ, அல்லது கற்கை நெறித் தெரிவிலோ தவறுகள் ஏற்படவாய்ப்பில்லை. அடுத்த நிலையில் இருக்கின்ற மாணவர்கள் போதிய வழிகாட்டல இல்லாது பொருத்தமான கற்கை நெறியைத் தெரிவுசெய்யாது பல்கலைக்கழக கல்விக்கான சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிடுகின்றனர். அத்தகையவர்கள் பேராதனை, மொரட்டுவ மற்றும் றுகுனு பல்கலைக்கழகங்களை மட்டும் தமது விண்ணப்பங்களில் பொறியியல் கற்கை நெறிக்காக முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்கின்றார்கள். இதனால் கடந்தகாலங்களில் பொறியியல் கற்கக் கூடிய ஏனைய பல்கலைக்கழகங்களுக்கான வாய்ப்புக்களை நழுவ விட வேண்டிய நிலை ஏற்பட்டது.

புதிதாகப் பொறியியல் கற்கை நெறிகளைஆரம்பித்த பல்கலைக் கழகங்களின் பொறியியல் பீடங்களில்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகபொறியல்பீடம் தகைசார் வல்லுநர்கள் பலரையும் கொண்டு மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்று வருகின்றது. எனவே பொறியியல் பீடத்தை தெரிவு செய்ய விரும்புகின்ற மாணவர்கள் தவறாது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பொறியல் பீடத்தையும் ஒரு விருப்பத் தெரிவாகக் குறிப்பிடுவதன் மூலம் சந்தர்ப்பங்கள் நழுவிப்போவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாணவரால் தெரிவு செய்யப்பட்ட விருப்பத்துக்குரிய கற்கை நெறிக்கும், பல்கலைக்கழகத்திற்கும் அனுமதிப்பதற்கு முயற்சிக்குமே தவிர, ஒருவரது விண்ணப்பப் படிவத்தில் விருப்பத்தெரிவு குறிப்பிடப்படாத எந்த கற்கை நெறிக்கும் உரிய Z-புள்ளிகளை அவர் பெற்றிருப்பினும் தெரிவு செய்யாது என்பதை மாணவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

மருத்துவக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் எட்டு பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பு உண்டு. இக்கற்கைநெறியைக் கொழும்பு, பேராதெனியா, யாழ்ப்பாணம், களனி, றுகுனு ஆகிய ஐந்து பல்கலைக்கழக மருத்துவ பீடங்களும், ஸ்ரீ ஜெய்வர்த்தனபுர பல்கலைக்கழகமருத்துவ விஞ்ஞான பீடமும், கிழக்கு, இரஜரட்டை பல்கலைக்கழகங்களின் சுகாதார விஞ்ஞான பீடங்களும் மேற்கொண்டு வருகினறன. பேராதனைப்பல்கலைக்கழகம் பல்லறுவைச் சிகிச்சைக் கற்கை நெறியையும், விலங்கு மருத்துவ விஞ்ஞானக கற்கை நெறியையும் மேற்கொண்டு வருகின்றது. (மேலதிகவிபரங்களுக்கு பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் 2015/2016 கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான கை நூலின் பக்கம் 41 ஐப் பார்வையிடவும்.)

பௌதிக மற்றும் உயிரியல் விஞ்ஞானகற்கை நெறிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட எட்டுப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விஞ்ஞானப்பட்டதாரிகள் பலர் கொழும்பு, பேராதனை போன்ற முன்ணனிப் பல்கலைக்கழகபட்டதாரிகளுக்கு இணையாகத் தமது பட்டப்பின் படிப்பை தேசிய, சர்வதேச பல்கலைக்கழகங்களில் சிறப்பாக மேற்கொண்டு விஞ்ஞானிகளாக, ஆய்வாளர்களாக, திட்டமிடல் பணிப்பாளர்களாக, நிர்வாக அதிகாரிகளாக, ஆசிரியர்களாக, தொழிநுட்ப வியளராக எனப்பல நிலைகளிலும் தமது சேவைகளை ஆற்றிக கொண்டிருப்பினும், வடமாகாணத்திலிருந்து யாழ். பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானத்துறையைத தெரிவு செய்பவர்களின் எண்ணிக்கை இன்று அருகிவருவது கவலைக்குரிய விடயமாகும். ஆனால் வடமாகாணத்திற்கு வெளியேயிருந்து இத்துறைகளைத் தெரிவுசெய்பவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில்வேகமாக உயர்வடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

பௌதிகவிஞ்ஞானப் பிரிவு் மாணவர்களுக்கென பொறியியில், பௌ திக விஞ்ஞானக் கற்கை நெறிக ளைத் தவிர்ந்த 10 கற்றை நெறி களும், உயிரியல் விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கென மருத்துவ, விஞ்ஞான கற்கை நெறிகளைத் தவிர்ந்த 26 கற்கை நெறிகளும் காணப்படுகின்றன. இவை தவிரப் பொதுவான தெரிவுக்கென 34 கற்கை நெறிகளும் காணப்படுகின்றன. எனினும் சில கற்கை நெறிகளுக்குச் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களினால் நடத்தப் படும் உளச் சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டியிருப்பதுடன், உரிய Z-புள்ளியைக் கொண்டிருக்க வேண்டும்.

உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய கற்கை நெறிகளின் விபரங்கள் பக்கம் 110 இல் தரப்பட்டுள்ளது. அதனுடன் சம்மந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் தொடர்பு இலக்கங்கள் பக்கம் 212 இல் தரப்பட்டுள்ளது. மிகப் பரந்த பரப்பில் தெரிவுகள் காணப்படுகின்ற போதிலும் கணித மற்றும் உயிரியல் பிரிவு மாணவர்கள் கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களை மட்டும் தமது விருப்பத் தெரிவுகளாகக் குறிப்பிடுவதனால் ஏனைய பல்கலைக் கழகங்களுக்கான வாய்ப்பினைத் தவற விட்டுவிடுகின்றனர்.

எந்தவொரு கற்கை நெறிகளுக்கும், முதன்மையான விருப்பத் தெரிவுகளைக் குறிப்பிட்ட பின் ஏனைய பல்கலைக் கழகங்களில் உள்ள கற்கை நெறிகளையும் விருப்பத் தெரிவு ஒழுங்கில் குறிப்பிடுதல் சிறந்ததாகும். இருப்பினும், ஒரு மாத காலப்பகுதியினுள் மாணவரது விருப்பத்தெரிவை மீள ஒழுங்குபடுத்த பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழு அனுமதிக்கும்.

இ.ரட்ணம்
தலைவர் சந்தைப்படுத்தல் துறை.
பேராசிரியர் க.கந்தசாமி
பேராசிரியர் பு.ரவிராஜன

# செலான் வங்கி லாபம் ரூ.720 மில்.

செலான் வங்கியானது 2016 மார்ச் 31ஆம் திகதியன்று முடிவடைந்த 3 மாதங்களில் வருமான வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 720 மில்லியனை பெற்று, 2015ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெற்றுக் கொண்ட ரூபா 691 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்தை விட 4% அதிகரிப்பொன்றை பதிவு செய்ததன் மூலம் உறுதிமிக்க காலாண்டு செயற்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளது.

2016 மார்ச் 31-ம் திகதியன்று முடிவடைந்த 3 மாதங்களுக்கான தேறிய வட்டி வருமானம் ரூபா 2,805 மில்லியனில் இருந்து ரூபா 2,939 மில்லியனாக, 4.8% இனால் அதிகரித்தது. 2016 இன் முதலாம் காலாண்டில் தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானமானது ரூபா 562 மில்லியனில் இருந்து ரூபா 695 மில்லியனாக 23.6%இனால் அதிகரித்துள்ளது. கடந்த சில வருடங்களாக செலான் வங்கி அடையப் பெற்ற திடமான வளர்ச்சிப் போக்கின் ஒன்று திரண்ட தன்மையை வெளிப்படுத்துவதாக இது காணப்படுகின்றது.

வங்கியின் ஏனைய தொழிற்பாட்டு வருமானமானது 2015 இல் ரூபா 401 மில்லியனில் இருந்து 2016 இன் முதலாம் காலாண்டில் 117% இனால் குறைவடைந்ததன் மூலம் ரூபா 68 மில்லியன் தேறிய நட்டத்தை பதிவு செய்தது.

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இக் காலப்பகுதியில் செலான் வங்கி கிரயக் கட்டுப்பாட்டிலும் குறிப்பிடத்தக்க கவனத்தை செலுத்தியது. ரூபா 2,129 மில்லியனாக காணப்பட்ட மொத்தச் செலவிலான அதிகரிப்பை, 2016 இன் முதலாம் காலாண்டில் ரூபா 2,273 மில்லியனுக்கு கொண்டுவந்து 6.8% ஆக கட்டுப்படுத்தியதன் மூலம் இது வெளிப்படையாகவே நிரூபணமாகியுள்ளது.

ரூபா 193,103 மில்லியனாக காணப்பட்ட தேறிய முற்பணங்களின் பெறுமதியானது 2016 இன் முதலாம் காலாண்டில் ரூபா 201,350 மில்லியனாக அதிகரித்த நிலையில், செலான் வங்கியானது 4.27% தேறிய கடன் வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2016 இன் முதலாம் காலாண்டு காலப்பகுதியில், வங்கி தனது வைப்புத்தளத்தை ரூபா 224,525 மில்லியனில் இருந்து ரூபா 225,445 மில்லியனாக வளர்ச்சியடையச் செய்திருக்கின்றது. நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்குகளுக்கான வைப்புக்களை உள்ளடக்கிய வங்கியின் குறைந்த கிரய வைப்புத் தளம் (CASA) 2016 மார்ச் மாத இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வைப்புத்தளத்தின் 36.9% ஆக உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. 2016 மார்ச் மாத இறுதியில், மொத்த செயற்படா சொத்துக்களின் (NPA) பெறுமதியானது (IIS இன் தேறிய பெறுமதி) 4.71% ஆக பதிவு செய்யப்பட்டது.

கல்வியில் கூடிய கவனம் செலுத்தும் வகையிலமைந்த கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முன்னெடுப்புக்களை (CSR) செலான் வங்கி தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் 2016 இன் முதலாம் காலாண்டு காலப்பகுதியில் மேலும் 20 பாடசாலை நூலகங்கள் செலான் வங்கியால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதன்படி வங்கியால் இச் செயற்றிட்டத்தின் கீழ் இதுவரை திறக்கப்பட்டுள்ள பாடசாலை நூலகங்களின் மொத்த எண்ணிக்கை 100 ஆக உயர்வடைந்துள்ளது.

கிளை இடமாற்றம் மற்றும் புதுப்பொலிவூட்டல் செயற்றிட்டமும் 2016 இல் முழுமூச்சில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. கடந்த 4 வருடங்களில் வங்கியின் 85% கிளை வலையமைப்பு புதுப்பொலிவூட்டப்பட்டுள்ளது. 2016 மார்ச் 31-ம் திகதி இருந்தபடியான வங்கியின் சேவை நிலைய வலையமைப்பானது 163 கிளைகள் 189 ATM மையங்கள் மற்றும் 100 மாணவர் சேமிப்பு நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

# யாகூவை வாங்க வாரன் பபெட் முயற்சி



பெர்க்ஷயர் ஹாத்வே நிறுவனத்தின் தலைவர் வாரன் பபெட் யாகூ நிறுவனத்தை வாங்கும் முயற்சியில் இருப்பதாகத் தெரிகிறது. யாகூ நிறுவனத்தை வாங்கும் முயற்சியில் இருக்கும் நிறுவனங்களுக்கு வாரன் பபெட் நிதி உதவி செய்ய இருப்பதாக தெரிகிறது.

யாகூ நிறுவனம் கடந்த சில வருடங்களாகவே தடுமாறி வருகிறது. அந்த நிறுவனத்தை வாங்க 10-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் முயற்சி செய்வதாக ஒரு மாதத்துக்கு முன்பு செய்தி வெளியானதை அடுத்து இப்போது வாரன் பபெட்டும் அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இவர் உதவி செய்ய இருக்கும் நிறுவனங்கள் 2-ம் கட்ட பேச்சுவார்த்தையில் உள்ளன. ஆனால் நிச்சயம் வாங்கும் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து யாகூ நிறுவனமோ, வாரன் பபெட்டோ கருத்து தெரிவிக்கவில்லை.

கடந்த மாதம் யாகூவை வாங்க பத்து நிறுவனங்கள் முன்வந்தன. ஆனால் அவை அனைத்தும் பிரைவேட் ஈக்விட்டி நிறுவனங்கள் ஆகும்.

கடந்த மாதம் பெர்க்ஷயர் ஹாத்வே நிறுவனத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடந்தது. அப்போது புதிய தொழில்நுட்பத்தில் முதலீடு செய்யப்படும் என்று கூறினார்.


யாகூ நிறுவனத்தில் 2000ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரை தலைமை நிதி அதிகாரி உள்ளிட்ட பல முக்கிய பொறுப்புகளில் இருந்தவர் சுசன் டெகெர், இவர் இப்போது பெர்க்ஷயர் ஹாத்வே நிறுவனத்தின் இயக்குநர் குழுவில் ஒருவராக இருக்கிறார். இவர் தவிர யாகூ நிறுவனத்தின் சில முன்னாள் பணியாளர்கள், இந்த நிதி உதவிக்கு ஆலோசகர்களாக இருப்பதாகவும் தெரிகிறது.




# நிறுவனங்கள் கையில் ஊழியரின் ஆரோக்கியம்

நிறுவனங்கள் நேர்மையாக ஊழியர்களை நடத்தும் விதத்தில் தான், அவர்களின் ஆரோக்கியம் அடங்கியுள்ளது என பிரிட்டனைச் சேர்ந்த, கிழக்கு ஏஞ்சலியா பல்கலைக்கழகத்தின் ஆய்வில் தெரியவந்து உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான, சுவீடனில் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும், 5,800 பேரிடம், இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில், ஊதியம், வெகுமதி, ஊதிய உயர்வு, பொறுப்பை ஒப்படைப்பது உள்ளிட்ட பல அம்சங்களில், நிறுவனங்கள் நடந்து கொள்ளும் முறைதான், ஊழியர்களின் ஆரோக்கியத்தை தீர்மானிக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

சராசரிக்கும் அதிகமாக, 'கவனிப்பு' உள்ள நிறுவனங்களில், ஊழியர்களின் ஆரோக்கியம் மிகவும் நன்றாக உள்ளது. 'நிறுவனங்கள், தங்களை நடத்துவது சரியில்லை' எனக் கருதும் ஊழியர்கள் ஆரோக்கிய பாதிப்பிற்கு ஆளாகின்றனர். அதேசமயம், தாங்கள் சிறப்பாக நடத்தப்படுவதாக கருதும் ஊழியர்கள், தங்களை மீறி, நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கின்றனர். அதனால், நிறுவனங்கள்



ஆரோக்கியமாக வளர்கின்றன.

இந்த ஆய்வில், 'ஒரு நிறுவனத்தின் நேர்மையான செயல்பாட்டிற்கான அளவுகோல் என்ன?' என்பது தொடர்பாக, 7 கேள்விகள் முன்வைக்கப்பட்டன. அதில், 'நிறுவனத்தின் முடிவால் பாதிக்கப்பட்டோரின் புகாரை காது கொடுத்து கேட்டறிதல், முடிவிற்கு எதிராக முறையீடு செய்ய வாய்ப்பளித்தல்' உள்ளிட்ட அம்சங்கள் இடம் பெற்றிருந தன. 'இந்த ஆய்வில், பணிச் சூழல் சிறப்பாக உள்ள நிறுவனங்களுக்கும், அதன் ஊழியர்களின் ஆரோக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது தெரியவந்தது' என ஆய்வாளர் கான்ஸ்டன்ஸி இப் கூறியுள்ளார்.

# முதலீட்டுக் குருவின் ஆலோசனை

பங்குச் சந்தை குறித்து ஓரளவு பரிச்சயம் இருப்பவர்களுக்கு வாரன் பபெட்டை தெரியாமல் இருக்க முடியாது. அவரின் நிறுவனமான பெர்க்ஷயர் ஹாத்வே நிறுவனத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் கடந்த வாரம் அமெரிக்காவில் நடந்தது. இதில் பெர்க்ஷயர் ஹாத்வே நிறுவனத்தின் தலைவர் வாரன் பபெட் மற்றும் துணைத் தலைவருமான சார்லி முங்கெரும் கலந்து கொண்டு முதலீட்டாளர்களின் கேள்விகளுக்கு 5 மணி நேரத்துக்கு மேல் பதில் அளித்தனர்.

**எப்படி கலந்துகொள்வது?**

இந்த நிகழ்ச்சிக்கு கலந்துகொள்வதே பெரும் செலவு பிடிக்கும் செயல் ஆகும். பெர்க்ஷயர் நிறுவனத்தின் முதலீட்டாளர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும். அவர்களும் கூட நிகழ்ச்சிக்கு முன்பாக பாஸ் வாங்க வேண்டும். ஒருவேளை முதலீட்டாளராக இல்லை என்றாலும், அந்த நிகழ்ச்சிக்கு செல்லாத பெர்க்ஷயர் நிறுவனத்தின் பங்குதாரர்களிடம் பாஸ் வாங்கிச் செல்லலாம். இபே நிறுவனத்தில் கூட இதில் கலந்துகொள்வதற்கான பாஸ்கள் விற்கப்பட்டன.

விமான செலவு, தங்குமிடம், உள்ளிட்டவை பெரிய செலவுகளாக இருப்பதால் இந்த ஆண்டு முதல் முறையாக யாகூ பைனான்ஸ் இணையதளம் மூலமாக ஆண்டு பொதுக்குழ கூட்டம் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. ஆங்கிலம் மற்றும் மாண்டரீன் மொழியில் இந்த நேரலை ஒளிப்பரப்பு செய்யப்பட்டது.

உலகம் முழுவதிலும் இருந்து பல முதலீட்டாளர்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஒவ்வொரு வருடமும் செல்கின்றனர். கடந்த 2015-ம் ஆண்டு 40,000 நபர்களுக்கு மேல் இந்த நிகழ்ச்சிக்கு சென்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஒன்லைனில் நேரலை செய்யப்பட்டதால் இந்த ஆண்டும் அதே அளவு மக்கள் தான் இருப்பார்கள் என்று அமெரிக்க பத்திரிகைகள் கருத்து தெரிவித்திருக்கின்றன.

கடந்த வருடம் நடந்த ஆண்டு பொதுக்குழ கூட்டத்தில் கலந்துகொள்ள சென்ற பிபிஎப்எஎஸ் மியூச்சுவல் பண்ட் நிறுவனத்தின் பராக் பரிக் கார் விபத்தில் மரணம் அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**என்ன பேசினார்?**

ஒவ்வொரு வருடமும் இவர் நிறுவனத்தின் ஆண்டு பொதுக்குழ கூட்டம் சிறப்பு கவனம் பெறும். முதலீடு, பங்குகள், நிறுவனத்தின் நிதி நிலைமை என பல விஷயங்கள் பேசினாலும், இப்போது அமெரிக்காவில் தேர்தல் நேரம் என்பதால் தேர்தல் குறித்த கேள்விகளுக்கும் அவர் பதில் அளித்தார். ஹிலாரி கிளின்டனுக்கு ஆதரவாக பேசுபவர் வாரன் என்பதால், ஒரு வேளை டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றால் உங்களது நிலைப்பாடு என்ன என்பது குறித்த கேள்விக்கு யார் வென்றாலும் பிரச்சினை இல்லை. இருவரில் எவர் வென்றாலும் பெர்க்ஷயர் நிறுவனத்துக்கு பிரச்சினை இல்லை. அதேபோல வெள்ளை மாளிகையில் யார் அதிபராக இருந்தாலும் முதலீடு மற்றும் தொழிலுக்கு சாதகமான சூழல் அமெரிக்காவில் நிலவும். தொழிலுக்கு சாதகமான சூழல் 100 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. தொழிலுக்கு ஏற்ற சமூகமாகவும் இருப்பதால் யார் அதிபராக வந்தாலும் பிரச்சினை இல்லை, அதிபர்கள் வருவார்கள் போவார்கள் என்று வாரன் கூறியிருக்கிறார்.




தெரியாத தொழிலில் முதலீடு செய்வதில்லை என்பது வாரனின் கொள்கை. அதனால் இண்டர்நெட் ஃஐடி சார்ந்த தொழிலில் அவர் பெரிய ஆர்வம் காண்பித்தது இல்லை. கடந்த கூட்டத்தில் இணையம் பல மக்களின் வாழ்க்கையை அழித்து விட்டது. இன்னும் சிலரின் வாழ்க்கையை அழிக்க காத்திருக்கிறது. இதனை எப்படி கையாளுவது என்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம், ஆனால் பெர்க்ஷயர் நிறுவனத்துக்கு இணைய வளர்ச்சியால் எந்த பாதிப்பும் இல்லை என்று வாரன் பபெட் கூறியிருக்கிறார்.

சிகரெட் ஆபத்தானது என்பதால் அந்த பங்குகளில் முதலீடு செய்வதை வாரன் பபெட் விரும்ப மாட்டார். ஆனால் ஒரு வருடத்தில் கோக் உள்ளிட்ட பானங்கள் மூலம் 1.84 லட்சம் பேர் இறந்திருக்கிறார்கள், ஆனால் கோககோலா நிறுவனத்தில் பெர்க்ஷயர் 9.3 சதவீத பங்குகளை வைத்திருக்கிறதே என்ற பத்திரிகையாளர்களின் கேள்விக்கு, ஒரு நாளைக்கு 700 கலோரி அளவுக்கு நான் கோக் குடிக்கிறேன், நான் நீண்ட காலம் நலமாக வாழ்கிறேன் என்று பதில் கூற இவரது பதில் சர்ச்சையை உண்டாக்கி இருக்கிறது.

இன்னும் எத்தனை விமர்சனங்கள் இருந்தாலும் அடுத்த வருட கூட்டத்துக்கு இப்போதே தயாராகி வருபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்?

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
| --- | --- | --- |
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,592.45 | 6,679.84 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,471.37 | 3,509.85⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 4,763.219

***உயர்வைத்தபங்குகள்(ரூ)*** அபான்ஸ் பினான்சியல்(57.10), கொழும்பு லான்ட் (29.50),கொரன(22.30),லங்கா ஹொஸ்பிட்டல்(73.20),சிஜஎப்எல்(0.70).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** எஸ்எம்பி லீசிங்(X)(0.30), புளூ டைமன்ஸ்(X)(0.50)பரஹன்(59.10)புளூ டைமன்ஸ்(1.30), அமாயா லிசர்(65.10).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
| --- | --- | --- |
| ஐக்கிய அமெரிக்க டொலர், | 143.76 | 147.56 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.74 | 214.07 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 162.48 | 168.94 |
| சுவிஸ் பிராங் | 147.11 | 153.21 |
| கனேடிய டொலர் | 110.04 | 115.66 |
| அவுஸ்திரேலிய டொலர் | 103.91 | 108.82 |
| சிங்கப்பூர் டொலர் | 104.15 | 108.15 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.18 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.68 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# நயினாதீவிலிருந்து கதிர்காமத்திற்கு பல வருடங்களின் பின் பாதயாத்திரை

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து கதிர்காமத்திற்கான பாதயாத்திரை பல வருடகால இடைவெளியின் பின்னர் இளைப்பாறிய அரச அலுவலர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டு தி.சோமசேகரம் தலைமையில் எதிர்வரும் 23.05.2016 அன்று அம்மன் ஆலயத்தில் பொங்கல் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது.

யாத்திரை நல்லூர் கந்தசுவாமி கோவில், சந்நதி முருகன் கோவில், வற்றாப்பளை அம்மன் ஆலயம், திருகோணமலை லட்சுமி நாரயனர் ஆலயம், திருக்கோணேஸ்வரம் ஆலயம், வெருகல் முருகன் ஆலயம், மயிலட்டாவெளி காமாட்சி அம்மன் ஆலயம், மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், கொக்கட்டி சோலை தான்தோன்றிஸ்வரர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், திருக்கோயில் முருகன் , பாமை விநாயகர் ஆலயம், உகந்தை முருகன் ஆலயம், இறுதியாக 05.07.2016 இல் கதிர்காமத்தை சென்றடையவுள்ளனர். யாத்திரையில் பங்கு பற்றுபவர்களுக்குரிய உணவு தங்குமிடம் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இளைப்பாறும் ஆலயங்களில் கந்தபுராணம் படிப்பதற்கு உரிய ஒழுங்குகளும் யாத்திரைக் குழுவால் மேற் கொள்ளப்பட்டுள்ளவை மற்றும் நல்லூர், சன்னதி முருகன் கோவில்களிலிருந்தும் (25. 05.2016) புதன்கிழமை மற்றும் (26.05.2016) வியாழக்கிழமை அதிகாலை 4 மணிக்கு யாத் திரை குழுவினர் புறப்பட உள்ளனர். அடியார்கள் இவ்வாலயங்களில் இருந்தும் குழுவுடன் இணைந்து கொள்ளலாம். (இ-7)

# மலையகத்தில் கன மழையால் கட்டடம் சரிந்ததில் வீடு சேதம்



மலையகத்தில் நேற்றுமுன்தினம் இரவு முதல் கன மழையுடன், பனிமூட்டமும் கூடிய சீரற்ற காலநிலை நிலவியது. இந்நிலையில் தொடர்ந்து பெய்த கன மழை காரணமாக ஹட்டன், தும்புருகிரிய வீதியில் அமைந்துள்ள குடியிருப்பொன்றில் மண்மேட்டுடன் கூடிய கட்டடம் சரிந்து விழுந்ததில் குறித்த வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. இதில் எந்தவிதமான உயிராபத்துகளும் ஏற்படவில்லை.பாதிக்கப்பட்ட நான்கு பேர் வேறு இடங்களுக்கு பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | மருதனார் மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 60 | 100 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 75 | 80 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 100 | 100 | 100 | 200 |
| தக்காளி | 160 | 100 | 180 | 240 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 | 50 | 80 |
| கோவா | 120 | 100 | 80 | 100 | 80 | 140 |
| கரட் | 100 | 100 | 70 | 80-200 | 80 | 120 |
| பூசணி | 60 | 50 | 20 | 40 | 30 | 40 |
| புடோல் | 80 | 50 | 40 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 100 | 100 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 130 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 170 | 100 | 130 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 160 | 100 | 100 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 130 | 100 | 100 | 180 | 100 | 160 |
| கறிமிளகாய் | 120 | 100 | 170 | 180 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100 | 100 | 100 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 150 | 200 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 40 | 50 | 60 | 80 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 600 | 400 | 280 | 500 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 15-30 | 40 | 40 | 20-30 |
| இராசவள்ளி | 150 | 200 | 140 | 180 | 150 | 160 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | 60 | 80 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 15 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஜனாதிபதி அலுவலகம் அருகே "மனித வெடிகுண்டு" தாக்குதல் 181

அதிகாரி கல்யாணராமன் கூறுகையில்,

2 ஆவது குண்டு வெடித்ததும் அலுவலகத்தில் உள்ள டியூப்லைட்டுக்கள் நொறுங்கி என் தலைமீது விழுந்தன.

வேலை செய்து கொண்டு இருந்த ஊழியர்கள் அனைவரும் பதற்றத்தில் அங்கும் இங்குமாக ஓடினார்கள் என்றார்.

### சுட்டனர்

குண்டு வெடித்ததை நேரில் பார்த்த மத்திய வங்கிப்பாது காவலர் கூறியதாவது,

வெடிகுண்டுகளுடன் வேகமாக வந்த லொறியை நான் தடுத்து நிறுத்தினேன். அப்போது ஒருவர் திடீர் என்று அதில் இருந்து கீழே குதித்து என்னை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்.

மேலும் சிலர் ஓடி வந்து வங்கியின் கதவைத் திறக்க முயன்றனர். அப்போது அவர்கள் வங்கிக்குள் வெடிகுண்டுகளையும் வீசினார்கள். உடனே நான் அவர்களைத் துப்பாக்கியால் சுட்டேன். அந்தச் சமயத்தில் லொறி பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இவ்வாறு அவர் கூறினார்.

### அடையாளம் தெரிந்தது

இந்தச் சம்பவத்துக்கு நாங்கள் தான் காரணம் என்று விடுதலைப்புலிகள் பொறுப்பு ஏற்றுள்ளதாக இராணுவ அதிகாரிகள் கூறினார்கள்.

வெடிகுண்டுகள் ஏற்றப்பட்ட வாகனத்தை ஒரு மனித வெடிகுண்டுதான் ஓட்டி வந்தார். அவர் வாகனத்தை மத்திய வங்கி கட்டடத்தின் மீது மோதியதால் குண்டு வெடித்தது.

இந்த மனித வெடிகுண்டு யார் என்பது தெரிய வந்தது. அவர் பெயர் கில்லர்ராஜு.

குண்டு வெடித்த கொஞ்ச நேரத்தில் 2 தமிழர்களைப் பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் பெயர்கள் ரகுநாதன், குட்டி.

கொழும்பு நகர பொலிஸ் உயர் அதிகாரி ஆரியசிங்க, விடுதலைப் புலிகளின் வெடிகுண்டு லொறி கடந்த மாதம் 29 ஆம் திகதி வவுனியாவில் இருந்து புறப்பட்டு மறுநாள் கொழும்பு வந்தது என்றார்.

வைக்கோல் போருக்குள் மறைத்து வெடிகுண்டுகள் கொண்டு வரப்பட்டன என்றும் அவர் கூறினார்.

குண்டு வெடித்த இடத்தில் பிளாஸ்ரிக் உறைக்குள் வைக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் அடையாள கார்டு கிடந்தது கண்டு எடுக்கப்பட்டது.

அதில் இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு நாங்கள் தான் காரணம் என விடுதலைப்புலிகள் பொறுப்பேற்று இருக்கிறார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### 4000 கிலோ வெடிகுண்டு

தற்கொலைப் படையினர் வந்த லொறியில் 4 ஆயிரம் கிலோ எடையுள்ள வெடிகுண்டுகள் ஏற்றப்பட்டிருந்தன. அதை எந்தப் படையாலும் தடுக்க முடியாது என்றும் அந்த கார்ட்டில் எழுதப்பட்டிருந்தது என்றும் பொலிஸார் கூறினார்கள்.

முல்லைத்தீவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள். அப்போது நடந்த சண்டையில் 1200 இராணுவத்தினர் பலியானார்கள்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய இராணுவம், சூரிய ஒளி -2 என்ற பெயரில் தாக்குதல் நடத்தி தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளையும் கைப்பற்றினார்கள் இதனால் - ஆத்திரமடைந்த விடுதலைப்புலிகள் இராணுவத்துக்கு தக்க பதிலடி கொடுக்கத் தயாரானார்கள்.

### இராணுவ முகாம்

முல்லைத்தீவு ஒரு பகுதியில் இராணுவத்தினரின் முகாம் இருந்தது. இந்த முகாம் மீத 17.07.1996 அன்று நள்ளிரவு விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள்.

தரை வழியாகவும் கடல் வழியாகவும் வந்த சுமார் 5 ஆயிரம் விடுதலைப்புலிகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர். பெண் விடுதலைப்புலிகளும் இந்தத் தாக்குதலில் பங்கு கொண்டனர்.


### கைப்பற்றினார்கள்

இந்தத் தாக்கதலின் போது சுமார் 1200 இராணுவ வீரர்கள் முகாமில் இருந்தனர். விடு தலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலைச் சமாளிக்க முடி யாமல் அவர்களில் பெரும் பாலானவர்கள் காட்டுப்பகுதி க்குள் ஓட்டம் பிடித்தனர். மற்ற வீரர்கள் விடுதலைப் புலிகளை எதிர்த்துத் தாக்கினார்கள். என்றாலும் அவர்களை முறியடித்து முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

### பிரபாகரன் தலைமையில்

விடுதலைப்புலிகளின் இயக்கத்தலைவரான பிரபாகரன் தலைமை தாங்கி இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கொழும்பு நகரில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சண்டையில் அவர் காயம் அடைந்ததாகவும் ஆனால் அந்தக்காயம் எத்தகையது பற்றி எதுவும் தெரியவில்லை என்றும் இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதும் அவர் காயம் அடைந்ததும் பற்றிய செய்தி விடுதலைப்புலிகளின் இரகசிய வானொலியில் ஒலிபரப்பப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.




யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ஊர்கள்.

(தொடரும்)

இரண்டும் இரண்டும் நான்குதான் அதையும் கூட இருமுறை சரிபார்த்துச் சொல்லுங்கள்.
-விட்டன் பார்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

# முதலமைச்சரின் கருத்தை ஆளுநர் மறுத்தது நியாயமானதா?

வடக்கின் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் பதவி நிலை என்பது மிகவும் பொறுப்பானது.

மாகாண சபையின் அமைப்பில் ஆளுநருக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைக் கொண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட புலத்தைச் கட்டியெழுப்புகின்ற தார்மீகக் கடமை ஆளுநருக்கு உண்டு.

இலங்கையின் ஏனைய மாகாணங்களை விட, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருக்கக் கூடிய ஆளுநர்களின் பணியும் பொறுப்பும் அதிகமானது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த வகையில் வட மாநிலத்தின் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயிடமிருந்து வடபுலம் நிறையவே எதிர்பார்க்கின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சேவையாற்றுகின்ற ஒரு சந்தர்ப்பம் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேக்கு கிடைத்துள்ளது.

அந்தக் கிடைப்பனவை தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காக அவர் பயன்படுத்துவார் என்பது தமிழ் மக்களின் அசையாத நம்பிக்கை.

இருந்தும் வடக்கின் ஆளுநர் அவர்கள் சில சந்தர்ப்பங்களில் தான் ஆளுநர் என்பதை மறந்து ஓர் அரசியல்வாதி போல நடந்து கொள்வதை காண முடிகின்றது.

படைத்தரப்பும் அரசும் சரியான முறையில் நடந்து கொள்ளாதவிடத்து இன்னொரு பிரபாகரன் தோன்றினால் அதைக் குறை சொல்ல முடியாது என்ற சாரப்பட வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இஃது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு முதலமைச்சர், அரசின் அசமந்தப் போக்குத் தொடர்பில் கூறவேண்டியதொரு கருத்து. இக்கருத்தில் நிறைந்த உண்மைகளும் உண்டு.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதம் ஏந்துவதற்கு முன்னதாகவே இலங்கைப் பாராளுமன்றத்தில் தந்தை செல்வநாயகம் அவர்கள் ஒரு கருத்தைக் கூறியிருந்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் தீர்வுகாணத் தவறுமாயின் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவார்கள் என்பதே அவர் கூறிய கருத்தாகும்.

எனினும், அன்றைய சிங்கள அரசியல்வாதிகள் செல்வநாயகத்தின் கருத்தைக் கேலி செய்தனர். இது நடக்கின்ற காரியமா? என்று எள்ளிநகையாடினர்.

ஆனால் தந்தை செல்வநாயகம் கூறியது தீர்க்க தரிசனமானது என்பதை இந்த நாடும் உலகமும் பின்னாளில் உணர்ந்து கொண்டது.

ஆனால் ஒருவர் கூறுகின்ற கருத்து எத்தன்மையது? எச்சந்தர்ப்பத்தில் கூறப்படுகின்றது? கருத்தைக் கூறியவரின் நடுநிலைத் தன்மை போன்றவற்றைப்பற்றி சிந்தித்துக் கருத்து தெரிவிப்பதே பொருத்துடையது.

எனினும், வடக்கின் முதலமைச்சர் கூறிய கருத்துக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே அவசரப்பட்டு மறுத்தான் விட்டமை நாகரிகமாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறினால் இந்த நாட்டில் மீண்டும் ஆயுதப் போர் வெடிக்கலாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நிதானமான அரசியல் தலைவர்களே கூறியுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், வடக்கின் முதல்வர் கூறிய கருத்தை மறுதலித்து, பிரபாகரன் இனித் தோன்றவே முடியாது என கருத்துரைத்தமையானது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த மீதான விசுவாசமோ? ஆளுநர் இவ்வாறு கருத்துரைக்கக் காரணம் என்று எண்ணத் தோன்றும்.

எனவே இது போன்ற விடயங்களில் கௌரவ ஆளுநர் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் பெரு விருப்பமாகும்.

# கச்சதீவில் புதிய தேவாலயம் அமைக்கும் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கச்சதீவில் புதிய தேவாலயத்தை அமைக்கும் பணிகளை இலங்கை அரசாங்கம இடைநிறுத்தியுள்ளது.

கடற்படைத்தளபதி வைஸ அட்மிரல் ரவீந்திர விஜயகுணவர்த்தனவிடம் கத்தோலிக்கத் திருச்சபை விடுத்த கோரிக்கைக்கு அமைவாக புதிய தேவாலயத்தை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை ஆரம்பித்திருப்பதாக கடற்படை தெரிவித்திருந்தது.

இந்தப் புதிய தேவாலயத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 9-ம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றிருந்தது. இந்த நிகழ்வில் கடற்படையின் வடபிராந்திய அதிகாரிகள் மற்றும் கத்தோலிக்கத் திருச்சபையின் குருமுதல்வர் ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் உள்ளிட்ட குருமாரும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில், கச்சதீவில் இருக்கும் பழமையான புனித அந்தோனியார் தேவாலயத்தை இடித்துவிட்டு, புதிய தேவாலயத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தென் மாவட்டங்களில் உள்ள இந்திய மீனவர்களை கவலைக்குள்ளாக்கியிருப்பதாக இந்தியப் பிரதமருக்கு தமிழக முதல்மைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியிருந்தார்.

அத்துடன், கச்சதீவில் உள்ள பழமையான புனித அந்தோனியார் தேவாலயத்தை இடித்துவிட்டு, புதிதாக தேவாலயம் கட்டும்போது தமிழகத்தரப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென இக்கடிதத்தில்தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வலியுறுத்தியிருந்தார். இது தொடர்பில் இந்திய அரசாங்கம் இலங்கையிடம் கேள்வி எழுப்பியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இந்தச் சரச்சைக்குத் தீர்வு காணப்படும் வரை புதிய தேவாலயக் கட்டுமானப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவரத்தன தெரிவித்துள்ளார். (செ-12)

# மகிந்த குடும்பத்தின் ஊழல்களை நான் இன்று அம்பலப்படுத்துவேன்

## மேர்வின் சில்வா சூளுரை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்கள் தொடர்புபட்ட பல்வேறு ஊழல் மோசடிகள் தொடர்பிலான உண்மைகளை அம்பலப்படுத்தப் போவதாக மகிந்த அரசாங்கத்தில் மக்கள் நலன் அமைச்சராக கடமையாற்றிய மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் நேற்று முனதினம் முன்னிலை யாகி சாட்சிமளித்த பின்னரே அவர் இந்த தகவலை ஊடகங்களுக்கு கூறியுள்ளார்.

பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு இதற்கு முன்னமே அமைக்கப்பட்டிருந்தால் நாட்டில் இடம்பெற்ற பலவேறு பாரிய ஊழல் மோசடிகளை தடுத்திருக்கலாம். இன்று கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தவுள்ளேன். இதன் போது கடந்தகால ஆட்சியின் போது இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் அம்பலப்படுத்துவேன். பசில் ராஜபக்ஷ விகாரைக்கு சென்று தேங்காய் உடைத்து வழிபட்டாலும் அவரது கோரிக்கைகளை ஆண்டவன் செவிமடுக்க மாட்டான். பசில் உட்பட ராஜபக்ஷ குடும்பத்தினர் பல்வேறு தவறுகளை செய்துள்ளதால் இறைவன் அவர்களது வேண்டுதல்களை ஏற்றுக்கொள்ள மாட்டான் என்றும மேர்வின் சில்வா மேலும தெரிவித்துள்ளார். (இ-5)

# சாவகச்சேரியில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி வடக்கு டச்சு வீதிக்கருகிலுள்ள வீடொன்றில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

22 வயதுடைய கந்தசாமி தயாபரன் என்ற இளைஞரே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# உதயங்க வீரதுங்கவை கைது செய்ய முயற்சி

(கொழும்பு)

உக்ரேய்னின் உதவியுடன் ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை கைது செய்ய அரசாங்கம் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரேய்னுடன் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதன் மூலம், உதயங்கவை கைது செய்து நாட்டுக்கு கொண்டுவர அரசாங்கம திட்டமிட்டுள்ளது.

உக்ரேய்ன் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ததாக உதயங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்காக குற்றவியல் சட்டம் தொடர்பில் உக்ரேய்னுடன் இலங்கை உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடத்திட்டமிட்டுள்ளது. (செ-12)

## குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

வினா இல.31

(அத்:2.ஸ்லோ:48)

ஸமத்வம் யோக உச்யதே எனும் பாடல் அடி குறிக்கும் பொருள் யாது?

விடை: எதிர்மறையான எல்லா அனுபவங்களையும் சந்திக்கும்போது உள்ளச் சமநிலையுடன் கலங்காத மன அமைதியுடன் இருப்பதே யோகம்.

வினா இல.32

(அத்.2:ஸ்லோ.50)

யோக கர்மஸு கௌஸலம் என்ற பாடல் அடியின் பொருள் யாது?

விடை: திறமையுடன் கடமையாற்றுவதே யோகம்.

ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி

எழுத்துப்பரீட்சை

காலம்:22.05.206 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: காலை 10 மணி முதல் 11 மணி வரை

இடம்: யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

அனைத்து வடமாகாண பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில சங்கத்தானை, டச்சு றோட் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஆதி விநாயகர் கோவில் பிரதேசம், வெளிக்குளம் பிரதேசம், நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வரை, செட்டிகுளம் வைத்தியசாலை, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வி.சி.கே ஆலை ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில நறுவிலிக்குளம், தோமஸ்புரி, வங்காலை நீர்ப்பாசன சபை, வங் காலை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மக்களின் அறிவு வளர்ச்சி



அறியாமை என்ற மயக்கத்தில் வாழும் மக்களுக்கு மேலும் மயக்கத்தையூட்டி அதன் மூலமே வயிறு வளர்த்து வாழும் ஒருவரைத் தவறுதலாக அறிவாளி என்றோ, பெரிய மனிதர் என்றோ, அரசியல் தலைவர் என்றோ, சாது என்றோ, ஞானி என்றோ, மக்கள் கருதும் வழக்கில் உலகம் சிறிது சிறிதாக மாறிக் கொண்டே வருகின்றது.



யார் எந்தக் கருத்தை வெளியிட்டாலும், இயற்கையமைப்பு, மனித இன வரலாறு, முன்னோர் கருத்து, தற்கால உலகப் போக்கு, தனது அறிவு நிலை, விஞ்ஞானம், இவைகளோடு அதை ஒப்பிட்டு ஆராய்ந்து தெளிவு காணும் அளவிற்கு, உலக மக்களின் அறிவு நிலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது.






தனித்த ஒரு மனிதனையோ, அவன் கருத்தையோ, சிறப்பித்துப் பேசிக் கொண்டிருப்பதிலேயே காலம் கழித்து, தான் பயனற்றுப் போகும் அறியாமை இருள், சுய ஆராய்ச்சியால் மக்களிடமிருந்து விலகி வருகின்றது.

இதன் விளைவாக மனிதன் மகத்துவத்தை மனிதன் அறிந்து மனிதனாகவே வாழத்தக்க சூழ்நிலைகள் உலக முழுவதும் குறுகிய காலத்திலேயே உருவாகிவிடும் என்பது திண்ணம்.

# யாழ்.பல்கலைக்கழக தடகளப் போட்டி

# கலை முகாமைத்துவ பீடம் சம்பியன்

யாழ்.பல்கலைக்கழக பீடங்களுக்கிடையே நடைபெற்ற இவ்வாண்டுக்கான தடகளப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடமும் பெண்கள் பிரிவில் கலைப்பீடமும் சம்பியன் ஆகின.

யாழ். பல்கலைக்கழக 2016 ஆம் ஆண்டுக்கான பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டிகள் கடந்த மாதம் 7, 8 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி T. மங்களேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தடகள ஆண்கள் அணியின் தலைவராக வேலணை மேற்கு நடராஜா வித்தியாலய ஆசிரியருமாகிய R.R. ராஜராஜனும் கலந்து சிறப்பித்தனர்.

இப்போட்டியில் எஸ்.வல்லிதரன் (கலைப்பீடம்) சிறந்த தட வீரராகவும் ஏ.சிறி (கலைப்பீடம்) சிறந்த கள வீரராகவும் தெரிவு செய்யப்பட்டனர். எஸ்.பாத்திமா (கலைப்பீடம்) சிறந்த தட வீராங்கனையாகவும் ஜி.துஸ்யந்தி (கலைப் பீடம்) சிறந்த கள வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டியின் சிறந்த வீரராக ஏ.சிறி (கலைப் பீடம்) தெரிவு செய்யப்பட்டார்.

இத் தடகள போட்டியின் 6 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. எஸ். லோஜிகா (கலைப்பீடம்) 1500 மீற்றர், 3000 மீற்றர் ஓட்டங்களிலும் எஸ்.தாரணி (முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்) குண்டெறிதலிலும் ஜி. துஸ்யந்தி (கலைப்பீடம்) உயரம் பாய்தலிலும் ஜெ.ஜனந்தன் (கலைப்பீடம்) கோலூன்றிப்பாய்தலிலும் ஆர்.எம்.ஓ.டி.ரணசிங்க (விஞ்ஞான பீடம்) குண்டெறிதலிலும் புதிய சாதனைகளை நிலைநாட்டியிருந்தனர்.

இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், கலைப்பீடம், விஞ்ஞான பீடம் என்பன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெண்கள் பிரிவில் கலைப்பீடம் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் வணிகக்கற்கைகள் பீடம் என்பன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுக்கொண்டன.

மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் கலைப்பீடமும் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமும் ஒருங்கே முதலாம் இடத்தையும் விஞ்ஞான பீடம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட (ஆண், பெண்) கரம் ஒற்றையர், இரட்டையர் கலப்பு இரட்டையர் ஆட்ட திறந்த சுற்றுப்போட்டி 2016 பெப்ரவரி 21 ஆம் திகதி ஆரம்பமாகி 01.03. 2016 வரை நடைபெற்றது. இச்சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு,

**ஆண்கள் ஒற்றையர் ஆட்டம்**

1ஆம் இடம்–எம்.ஐ.இமாம்–சித்த மருத்துவத்துறை

2ஆம் இடம்-எம்.எம்.எம். ஹசான்–சித்த மருத்துவத்துறை

3 ஆம் இடம் கே.ஏ.எஸ். ஏ.கோடகோடா –முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்.

**பெண்கள் ஒற்றையர் ஆட்டம்**

1ஆம் இடம்–எஸ். கங்காஜினி – முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்

2ஆம் இடம்-எம்.எம்.எம். ஹசான்–சித்த மருத்துவத்துறை

3 ஆம் இடம்–எஸ்.பிருந்தா–மருத்துவ பீடம்.

**ஆண்கள் இரட்டையர் ஆட்டம்**

1 ஆம் இடம்–வி.தினேஷ் –சித்த மருத்துவத்துறையும் என். ஹரிஷாந்–சித்த மருத்துவத்துறை

2 ஆம் இடம்– எச்.ஏம்.வித்தியாரட்ண –இணைந்த சுகாதார& ஏ.கே. சந்துருவன் –விஞ்ஞான பீடம்

**பெண்கள் இரட்டையர் ஆட்டம்**

1ஆம் இடம்–எஸ்.கிரிஜா– இணைந்த சுகாதார அலகு & எஸ்.கங்காஜினி– முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்

2 ஆம் இடம் –எஸ். பிரிந்தா– மருத்துவ பீடம் & ஜி.காயத்திரி– இணைந்த சுகாதார அலகு

**கலப்பு இரட்டையர் ஆட்டம்**

1ஆம் இடம்–எஸ்.பிரிந்தா–மருத்துவ பீடம்& எஸ்.றமேஷ்–சித்த மருத்துவத்துறை

2 ஆம் இடம் –எம். அன்ரனிஸ் –முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் & ஜி.காயத்திரி – இணைந்த சுகாதார அலகு. (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கு மாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் அடம்பன் ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் உதயதாரகை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் அந்தோனியார்புரம் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளன. (கு)

## காண்டீபன், கெனடி சிறப்பாட்டம்; பலாலி விண்மீன் வெற்றி





பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழு குகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் பெரும் உதைபந்தாட்ட சமராக கருதப்படும் வடமாகாண வல்லவன் தொடரில் முதலாம் சுற்றில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் பலாலி விண்மீன் வி.க. எதிர்த்து கரவை சுடர் வி.க. மோதியது. விறுவிறுப்பான முதற்பாதி ஆட்டத்தில் 20 ஆவது நிமிடத்தில் விண்மீன் வீரர் காண்டீபன் முதலாவது கோலினை அடித்தார். அதனை தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்திலும் விளையாட்டினை சுறுசுறுப்பாக்கிய விண்மீன் 40 மற்றும் 53 ஆவது நிமிடங்களில் முறையே காண்டீபன் மற்றும் கெனடி ஆகியோர் கோலினை பதிவு செய்தனர். ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் பலாலி விண்மீன் வி.க. வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக விண்மீன் கெனடி தெரிவு செய்யப்பட்டதுடன் அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை ஓய்வுநிலை பிரதி கல்விப் பணிப்பாளர் சி.சிவப்பிரகாசம் வழங்கி வைத்தார். (கு)

## பால் குளிரூட்டும்...

னால் முள்ளியவளையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பால் பண்ணையாளர்கள் நேரடியாக தமது பாலை உள்ளூரில் சந்தைப் படுத்தக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பால் குளிரூட்டும் நிலையமானது நியூசிலாந்து அரசின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் கிரஹாம் மோட்டன், வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் கட்டடத்திற்கான அடிக்கல்லானது நியூசிலாந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சர் முரே மைக்கலினால் 2013-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ம் திகதிஅவரின் இலங்கைக்கான விஜயத்தின் போது நாட்டப்பட்டது.

இந் நிலையமானது 5ஆயிரம் லீற்றர் பாலை சேமித்து குளிரூட்டும் வசதி கொண்டது. இது எதிர்காலத்தில் 15ஆயிரம் லீற்றர்கள் வரை சேமித்து குளிரூட்டும் வசதி கொண்டது.

மேலும் இதுதொடர்பாக உயர்ஸ்தானிகர் கிரஹாம் மோட்டன் கூறுகையில்,

"உலக தரிசன நிறுவனமானது இவ் முக்கியமான செயற்றிட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்ததற்காக எனது வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வடக்கில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் தமது உணவுப் பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் புதிய தொழில்நுட்ப உதவியுடன் முன்னேற்ற முடியும். அத்தோடு நியூசிலாந்து அரசானது இலங்கைக்கு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உள்ளூரில் அதை திறம்பட சந்தைப் படுத்துவதற்கும் தேவையான் உதவியை நீண்ட காலம் வழங்கிவருகிறது. இது இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் கட்டியெழுப்புகிறது என்றார்.

இத் திறப்பு விழாவிற்கு முப்பத்தொரு பாற் பண்ணையாளர் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், மத்திய, மாகாண மற்றும் மாவட்ட அரச அதிகாரிகள், மில்கோ, மாவட்ட பிரதேச செயலாளர்கள் அத்தோடு நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இது முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பால் பண்ணையாளர்கள் சமூகத்தின் மத்தியில் ஒரு பாரிய திருப்பு முனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த நான்கு வருடங்களாக தமது மேலதிக பாலை தொடர்ச்சியாக சந்தைப்படுத்துவது பால் பண்ணையாளருக்கு ஒரு சவாலாக அமைந்தது. ஆனாலும் தூய்மையான பாலுக்கான கேள்வியானது இம் மாவட்டத்தில் அதிகரித்துவரும் நிலையில் மில்கோ மற்றும் நெஸ்லே பாலை இப்பகுதியில் கொள்வனவு செய்து வருகிறார்கள். தற்போது பால் பண்ணையாளர்கள் ஒரு லீற்றர் பாலுக்கு ரூபாய் 65 இலிந்து 70 வரைபெறுகின்றனர். இது அவர்களுக்கு போதியளவு வருமானத்தை ஈட்டித் தருவதோடு அவர்களது வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப பேருதவியாகவுள்ளது.

முள்ளியவளையில் கட்டப்பட்டுள்ள இப் பால் குளிரூட்டும் நிலையமானது சர்வதேச தொண்டு நிறுவனமான உலக தரிசன நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மூன்று குளிரூட்டும் நிலையங்களில் ஒன்றாகும். ஏனைய இரண்டும் ஆயிரம் லீற்றர் கொள்ளளவுகளைக் கொண்ட குளிரூட்டும் நிலையங்களாக ஒட்டுசுட்டான் மற்றும் மல்லாவிப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர நான்காவதாக பால் குளிரூட்டும் நிலையம் புதுக்குடியிரு ப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேராவில் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது.

இது 5ஆயிரத்திலிருந்து 15ஆயிரம் லீற்றர்கள் வரைசேமிக்கவும் குளிரூட்டவும் வசதிகள் கொண்டதாகஅமையும். மேலும் MFAT மற்றும் TFNZ ஆகியவற்றின் நிதிப்பங்களிப்புடன் உலக தரிசன நிறுவனத்திற்கு ஊடாக 500 லீற்றர் கொள்ளவுகளைக் கொண்ட மூன்று பால் சேகரிப்பு மையங்களை கிராமிய மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இது பால் பண்ணையாளர் சங்கங்கத்திற்கு பாலை சேமிக்கவும், குளிரூட்டப்பட்ட பாலை குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்ப முன்னர் அவை பழுதடையாமல் இருக்கவும உதவியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# கூட்டு ஒப்பந்தம் செத்துவிட்டது; 25-ம் திகதி தொழிற்சங்க போராட்டம்

## அமைச்சர் மனோ கணேசன் அறிவிப்பு

(கொழும்பு)

வர்த்தமானி பிரகடனத்தில் (மார்ச் 23ம் திகதி) உறுதியளிக்கப்பட்டுள்ள நிவாரணப் படியை, நாள் ஒன்றுக்கு ரூபாய் 100 உடன் மொத்தம் ரூபாய் 720 என்று தோட்ட தொழிலாளருக்கு வழங்க தோட்ட நிறுவனங்கள் தயாரில்லை. இந்நிலையில் திட்டமிட்டப்படி 25-ம் திகதி எங்கள் தொழிற்சங்க போராட்டம் நடைபெறும்.

அதையடுத்து, எமது அடுத்தடுத்த கட்ட அரசியல், தொழிற்சங்க நடவடிக்கைகளும் தொடரும். இந்த போராட்டம் தொடர்பில் நமது கூட்டணியின் தொழிற்சங்க பிரிவான பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனத்துடன், கரங்கோர்க்க அனைத்து முற்போக்கு தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளதாவது,

நிவாரணப்படி தரும் 2016-ம் வருட 4-ம இலக்க சட்டம் கொண்டு வரப்பட்டுள்ள இவ் வேளையில் கூட்டு ஒப்பந்தம் அமுலில் இல்லை. ஆகவே, இல்லாத கூட்டு ஒப்பந்தம் தோட்ட தொழிலாளரை கட்டுப்படுத்தாது. எனவே ஏனைய துறையினருக்கு வழங்கப்படும் இந்த நிவாரணப்படி, தோட்ட தொழிலாளருக்கும் வழங்கப்பட்டே ஆகவேண்டும். இதை தருவது தோட்ட நிறுவனங்களோ அல்லது திறைசேரியோ, எதுவாகவும் இருந்துவிட்டு போகட்டும். ஆனால், அது வழங்கப்பட வேண்டும் அல்லது நாங்கள் ஏற்றுக்கொள்ளும் மாற்று யோசனை முன்வைக்கப்பட வேண்டும். இப்படியே இனியும் காலம் கடத்த முடியாது. இதுவே தமிழ் முற்போக்கு கூட்டணியினதும், கூட்டு ஒப்பந்தத்தில் தொடர்பில்லாத பெருந்தோட்ட தொழிற்சங்க சம்மேளனத்தினதும் நிலைப்பாடு.

கூட்டு ஒப்பந்தம் செத்துவிட்டது. இது என்றாவது இப்படி அகால மரணம் அடையும் என எமக்கு தெரியும். இன்று இந்த செத்த பிணத்துக்கு உயிர் தரும் நோக்கம் எமக்கு இல்லை. செத்த பிணத்தை வைத்துக்கொண்டு ஒப்பாரி வைக்கும் நோக்கமும் எமக்கு இல்லை. இது செத்து தொலையட்டும். ஏனெனில் இன்றைய இந்த நெருக்கடி நிலைமைக்கு, இந்த கூட்டு ஒப்பந்தம் அடிப்படை காரணமாக அமையும் என்று எம் தொழிற்சங்க முன்னோர்கள் அப்போதே ஆரூடம் கூறி வைத்தார்கள்.

அரசாங்கத்தில் இருந்தபடி ஏன் வேலை நிறுத்தம் செய்கிறீர்கள் என்ற குதர்க்க கேள்விகளை எழுப்பும் நபர்களை மலையக மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அரசாங்கத்தில் இருந்தப்படியே, இந்த நாட்டிலும், உலக நாடுகளிலும் எத்தனையோ தொழிற்சங்க போராட்டங்களை அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் நடத்தியுள்ளன. இனியும் நடக்கும். அரசில் பங்காளியாக இருந்தாலும் நமது கூட்டணி, நமது மக்களுக்கு விசுவாசமாக இருக்கின்றது.

நமது மக்களுக்கு நாம் விசுவாசமாக இருப்பது, நமது அரசாங்கத்துக்கு தொந்தரவு என நமது ஜனாதிபதியோ, பிரதமரோ கருதினால் அரசிலிருந்து எங்களை அவர்கள் விலக்கலாம். அப்படி ஒரு நிலைமை வருமானால், அதற்கு முகம்கொடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணி தயார் என்பதை உறுதிப்பட கூறி வைக்க விரும்புகிறேன். இன்று பல தேவைகளுக்கு இந்த அரச பலத்தை நாம் பயன்படுத்துகிறோம் என்பது சிந்திப்பவர்களுக்கு புரியும்.

அரசாங்கத்துக்கும் ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் தேவை ஏற்பட்டால், அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். இன்று சிலர் எடுத்த எடுப்பிலேயே அரசில் இருந்து வெளியே வாருங்கள் என்கிறார்கள். இது முதிர்ச்சியற்ற கருத்து.



அதேவேளை இன்னும் சிலர் நாம் வெளியேறி அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தினால். அது மகிந்தவுக்கு இலாபம் என்பதை தெரிந்தே சொல்கிறார்கள். இது திட்டமிட்ட குள்ளநரிகளின் கருத்து. எப்போது போராடுவது, எப்படி போராடுவது, எதுவரை உள்ளே இருப்பது, எப்போது வெளி வருவது, எதை கேட்பது, எதுவரை கேட்டது என்பதையெல்லாம் தெரிந்து கொண்டுதான் தமிழ் முற்போக்கு கூட்டணி பொறுப்புடன் செயற்படுகிறது

கடந்த செப்டம்பரிலிருந்து ஆக எட்டரை மாதங்களே ஆட்சியில் இருந்து புதிய பல மாற்றங்களை கொண்டு வரும் பல்வேறு அடிப்படைகளை அமைதியாகவும், காத்திரமாகவும் சாதித்து வரும் எங்களை கேள்வி கேட்கும் இந்த சில நபர்கள் யார்? கடந்த 25 வருடங்களாக மாறி மாறி வந்த எல்லா அமைச்சரவைகளிலும் ஊமைகளாகவே இருந்து காலத்தை கடத்திய அரசியல் தொழிற சங்க வியாபாரிகள், நான்கு பேரைகூட கூட்டி ஒரு கூட்டம் நடத்த முடியாத காழ்ப்புணர்ச்சி காரர்கள், மகிந்த ராஜபக்ஷவுடன் இன்னமும் இரகசிய உறவு உள்ள வயிற்றுப்பிழைப்பு அரசியல்வாதிகள். இவர்களை நிராகரித்துவிட்டு எம்முடன் கரங்கோர்த்து போராட தயாராகுமாறு கோருகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# கச்சதீவு தேவாலய கட்டுமானப் பணிகள் இந்திய அழுத்தத்தால் நிறுத்தப்படவில்லை!

## இலங்கை கடற்படை விளக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை- இந்தியாவுக்கிடையே உள்ள கச்சதீவில் இலங்கைக் கடற்படையினரால் இடித்து மீளக் கட்டப்பட்டு வந்த, புனித அந்தோனியார் தேவாலய கட்டுமானப் பணிகள் இந்திய அரசின் அழுத்தத்தினால் நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தியை இலங்கை கடற்படை மறுத்துள்ளது.

கால நிலை உட்பட சில காரணங்களுக்காக கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அது விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் கடற்படை பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

யாழ். ஆயர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, கச்சதீவிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தை இடித்து மீளக்கட்டும் பணிகள் கடந்த வாரம் கடற்படையினரால் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அதற்கான அத்திபாரம் போடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எனினும் அங்கு தற்போது பெய்து வரும் கடும் மழை கட்டுமானப் பணிகளை தொடர்வதற்கு இடையூறாக இருப்பதாக தெரிவித்த கப்டன் அக்ரம் அலவி, நிர்மாணப் பணியை தொடர்வதற்கு அத்திபாரம் காயும் வரை காத்திருக்க வேண்டியிருப்பதாக கூறினார்.

இந்த இரண்டு காரணங்களினாலேயே தேவாலய கட்டுமானப் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாகவும் அந்நடவடிக்கை விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறினார்.

தேவாலய கட்டுமானப் பணி எப்போது முடியும் என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கடற்படை பேச்சாளர், கச்சதீவு புனித அந்தோனியார் ஆல்யத்தின் வருடாந்த உற்சவம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்னர் தேவாலயம் முழுமையாக கட்டி முடிக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்கெனவே சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கச்சதீவிலுள்ள தேவாலயத்தை கட்டும் நடவடிக்கையில், தமிழக அரசு தரப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அதன் பின்னர் தேவாலய கட்டுமானப் பணிகள் இந்தியாவின் அழுத்தம் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகிருந்தன.

இந்த பின்னணியில் இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார். (செ-12)

# ஆலய அறங்காவலர் கொலை

(கொழும்பு)

களுத்துறை புளத்சிங்கள ஹல்வத்துரே பிரதேசத்தில் உள்ள பத்திரகாளியம்மன் ஆலயத்தின் அறங்காவலர் கொலை செய்யப்பட்டுள்ளதாக புளத்சிங்கள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

80 வயதான ஏ.ஏ. சோமதாச என்பவரே இவ்வாறு நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஆலயத்தின் பூசகர் மற்றும் கொழும்பு மட்டக்குளிய பிரதேசத்தை சேர்ந்த இரும்பு சேகரிக்கும் நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கொலை செய்வதற்கு முன்னர் நேரத்தை கணித்து குறிக்கப்பட்ட நேரத்தில் முகத்தை கோணிப் பை ஒன்றினால் மூடி கழுத்தை நெரித்து இந்த கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து புளத்சிங்கள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## தமிழக சட்ட...

எதிர்வரும் 19ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தேர்தலில் 1.40 இலட்சம் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப் படவுள்ளன. மொத்தம் 66 ஆயிரத்து ஏழு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் 27ஆயிரத்து 961 வாக்களிப்பு நிலையங்கள் கண்காணிப்புக் கருவிகள் மூலம் கண்காணிக்கப்படவுள்ளதுடன், தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தொகுதியில் மட்டும் இன்றைக்குப் பதிலான எதிர்வரும் 23ஆம் திகதி வாக்களிப்பு நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. (செ-12)

## மக்களின்...

ணியின் (ஜே.வி.பி) அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கியின் ஆளுநர் தொடர்பாக தற்போது அடிப்படையான அரசியல் பிரச்சினை ஒன்று உருவாகியுள்ளது.

மத்திய வங்கியின் திறைசேரி முறிப்பத்திர மோசடி இதற்கு முன்னர் பெரிதாக பேசப்பட்டது. இதனை அரசாங்கத்தின் பெரிய மோசடி எனக் கூறினர்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் சகாக்கள் இதற்கு முன்னர் மக்களுக்கு விநியோகிக்க கொண்டு வந்த கூரை தகடுகளை கூட கொள்ளையிட்டனர். அப்படியாயின் அவர்கள் ஊழல்வாதிகள் இல்லையா?

இதற்கு எதிராக ரணில் விக்கிரமசிங்கவும் அன்று எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதேபோல மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பிலும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை.

மத்திய வங்கியின் மோசடி தொடர்பாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகி அரசியல் ரீதியான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்க அழைப்பை வெளியிட்டு, மத்திய வங்கியின் ஆளுநரை நீக்குமாறு பிரதமருக்கு கூறினார்.

ஆனால், பிரதமர் மத்திய வங்கியின் ஆளுநரை நீக்கவில்லை.

எனினும் மத்திய வங்கியின் ஆளுநரின் பதவிக்காலம் எதிர்வரும் ஜுன் மாதம் முடிவடையவுள்ள நிலையில், ஆளுநரின் பதவிக் காலத்தை நீடிக்காது அவரை விலக்கி விட்டு, தகுதியானவரை அந்த பதவியில் நியமிக்க ஜனாதிபதிக்கு தற்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது.

இந்த நிலையில், அவரது தீர்மானத்திற்கு அமைய ஊழல்,மோசடி மற்றும் திருட்டை ஒழிக்க ஜனாதிபதிக்கு உண்மையான அக்கறை இருக்கின்றதா என்பதை மக்கள் அறிந்து கொள்ள முடியும் எனவும் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார். (செ-12)

## குமுதினி படுகொலை...

சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1985ஆம் ஆண்டு மே 15ஆம் திகதி 65 பேருடன் நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருக்கும் போது நடுக்கடலில் வைத்து கடற்படையினரால் வெட்டியும் குத்தியும் அடித்தும் 36 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

மேலும் பலர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். விடுதலைப்புலிகள் சிங்கள இராணுவத்தை தாக்கும் ஒவ்வொரு சம்பவத்திற்கும் தமிழ் மக்களின் பழிவாங்கப்பட்டனர்.

அன்றைய சம்பவமும் அவ்வாறு தான் இடம்பெற்றது. அநுராதபுரத்தில் இடம்பெற்ற மோதல் ஒன்றிற்காக நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி குமுதினியில் வந்த மக்கள் நடுக்கடலில் வைத்து கடற்படையால் வஞ்சகம் தீர்க்கப்பட்டனர்.

எனினும் குமுதினிப் படுகொலை நினைவான கட்டப்பட்ட கட்டிடமும் உடைக்கப்பட்டு தற்போது நினைவுத்தூபி மட்டுமே அங்கு உள்ளது.

இந்த படுகொலை நினைவாக நெடுந்தீவு இறங்குதுறை முன்பாக முன்பாக நினைவு தூபி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அந்த நினைவு தூபியிலேயே மேற்படி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. முன்னதாக சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலிகள் இடம்பெற்று பின்னர் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நினைவு நிகழ்வீல் வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தலைவர் எஸ். சதீஸ் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## தகவல் அறிதல்...

விக்கிரமசிங்க ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உறுப்பினர்களும் இதற்காக அழைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (செ-12)

## பொலிஸ் அதிகாரத்தை...

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் வன்முறைக் கலாசாரம் தொடர்பில் பலதரப்பினரும் கவலை கொண்டுள்ள நிலையில், இந்த வன்முறைகளை தடுக்க வடமாகாண சபை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையே என ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

வடமாகாணத்தில் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு இருந்தும் இங்கு வன்முறைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்றால், ஏதோ ஓர் இடத்தில் பிரச்சினை உள்ளது என்றே அர்த்தம்.

வட மாகாணத்தில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்பட்டு பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபையிடம் வழங்கினால் யாழ்ப்பாணத்தில் அரங்கேறும் வன்முறை கலாசாரத்தை உடனடியாகக் கட்டுப்படுத்துவோம்.

வடமாகாணத்தில் இராணுவத்தினரை முடக்கி வைத்திருப்பதன் மூலம் வன்முறைகளையோ அல்லது பிரச்சினைகளையோ முடிவுக்கு கொண்டு வர முடியாது. வடமாகாணத்தில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற வேண்டும்.

இராணுவத்தினர் முகாமுக்குள் முடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்ற போதும் அவர்கள் ரோந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. இதனால் மக்கள் இன்னமும் அச்சத்துடனே இருக்கின்றனர். எனவே வடமாகாணத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கருத்தில் மாற்றமே இல்லை என அவர் பதிலளித்துள்ளார்.(செ-12)

## ஜனாதிபதி மைத்திரி...

அவர் வந்தடைந்துள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இந்தியாவின் சாஞ்சி பௌத்த புனிததலத்திற்கும் ஜனாதிபதி சென்றிருந்தார்.

அத்துடன், இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் பாரம்பரியம் மிக்க உஜ்ஜைனி நகரில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சிம்ஹஸ்தா கும்பமேளா நிகழ்விலும் அவர் கலந்து கொண்டார்.

இதையொட்டி சரியான வழியில் வாழ்வோம் என்ற 3 நாள் மாநாடும் நடந்தது. இதன் நிறைவு நாளான நேற்றுமுன்தினம் 51 அம்ச திட்டங்கள் அடங்கிய சிம்ஹஸ்தா பிரகடனத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மத்திய பிரதேச முதலமைச்சர் சிவ்ராஜ்சிங் சவுகான் ஆகியோர் கூட்டாக வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(செ-12)

## நாடு முழுவதும்...

7634 பேர் நேற்று மாலை வரை வெள்ளம் மற்றும் மண்சரிவு பாதிப்புள்ளாகியுள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது.

மட்டக்களப்புக்கு மேல் காணப்படும் தாழ் அமுக்க வலயமானது மேலும் வலுவடைந்தது அதிகரித்த தாழமுக்கமாக மாறும். இந்த அதிகரித்த தாழமுக்கம் காரணமாக நாட்டின் பெரும்பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இன்றைய தினமே தாழமுக்க வலயம் இந்தியாவை நோக்கி நகரும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் வடமாகாணம், வடமத்திய மாகாணம், வடமேல் மாகாணங்களில் உள்ள பல்வேறு பிரதேசங்களில் 100 தொடக்கம் 150 மில்லி மீற்றர் வரையான மழை வீழ்ச்சி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத் தாழமுக்கம் காரணமாக கடலோரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வரை திடீரென அதிகரிக்கக்கூடும். எனவே மீனவர்கள் மற்றும் கடற்றொழில் சார்ந்தோர் எச்சரிக்கை யுடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் திடீரென ஏற்பட்ட காற்றுடன் கூடிய மழை காரணமாக பல மரங்கள் மற்றும் குடிசை வீடுகள், வேலிகள், தற்காலிக கொட்டகைகள் உட்பட நாட்டின் பல பகுதிகளில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதோடு வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவும ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பல இடங்களில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வடக்கில் நேற்றைய தினம் தொடர்சியாக மழை பெய்து கொண்டிருந்த போதும் மாலை 5 மணிக்கு பின்னர் பலத்த காற்றுடன் கூடிய அடைமழை பெய்தது. இதன காரணமாக தாழ்வுப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் பலர் இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

இதேவேளை பாணந்துறை பகுதியில் மினி சூறாவளி ஒன்று ஏற்பட்டு சுமார் 30 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் மஸ்கெலியா, பிரவுன்வீக் சூரியகந்தை தோட்டத்தில் நேற்று இரவு ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 18 குடும்பத்தைச் சேர்ந்த 96 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு பணியில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, தேசிய கட்டட ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளை, மொனராகலை, குருநாகல், இரத்தினபுரி, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தற்போது நிலவும் சீரற்ற காலநிலையில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் அறிவிக்குமாறும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்படக்கூடிய அனர்த்தங்களை கட்டுப்படுத்துதற்காக தகவல்களை கோருவதாக அறிக்கையொன்றினூடாக அவ் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய மக்கள் தகவல்களை வழங்குவதற்கான தொலைபேசி இலக்கங்களும் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

0112434251 என்ற இலக்கத்தினூடாக இலங்கை இராணுவத்தினருக்கு தகவல் வழங்க முடியும் என பாதுகாப்பு அமைச்சுக்கும் 0112445368 என்ற இலக்கத்தினூடாக இலங்கை கடற்படையினருக்கும் 0112343970 என்ற இலக்கத்தினூடாக விமானப் படையினருக்கும் அனர்த்தங்கள் தொடர்பில் தகவல்களை வழங்க முடியும் என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(செ-12,9)

## நிதி மோசடி...

ஈடுபடக்கூடும் என தெரியவருகின்றது.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்ததற்குப் பின்னணியில் இருந்த பல்வேறு சிவில் அமைப்புகள் ஒரு சில அரச நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் அதிருப்தி வெளியிட்டிருந்தன.

இந்நிலையில், நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் சட்டமா அதிபர் அலுவலகம் உட்பட பல முக்கிய துறைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படுமெனத் தெரியவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மோசடிகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நிதி மோசடி விசாரணைப் பிரிவால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட முக்கியஸ்தர்களின் கோப்புகள் மீதான சட்ட நடவடிக்கை தாமதமாகி வருவதற்கான காரணங்களும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் பிரபல அரசியல்வாதிகள் சிலரினதும், அவர்களது நெருங்கிய உறவினர்கள் 11 பேரினதும் நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டு மேலதிக ஆலோசனைகளுக்காக சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பிட்ட 39 கோப்புகள் நீண்டகாலமாகத் தேங்கிக்கிடப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையில், எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் அமைச்சரவை மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-12)

## கஞ்சா...

முனைப்புடன் மேற்கொள்ளுமாறு ஆந்திர மற்றும் கேரளா பிராந்திய அரசாங்கங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கஞ்சா மற்றும் கேரள கஞ்சா என்பன படகுகள் மூலமே கடத்தப்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

இதுவரை இந்த கடத்தல்கள் தொடர்பில் 140 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 20 இந்தியர்களும் உள்ளடங்குகின்றனர்.

ஆரம்ப விசாரணைகளின் படி மஹாராஷ்டிரா, தமிழ்நாடு, தெலுங்கானா போன்ற இடங்களில் இருந்து கஞ்சா கடத்தப்படுகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மருந்துப் பொருட்களுக்காக ஆந்திர பிரதேசத்தில் இருந்து சட்ட ரீதியாக பெருமளவு கஞ்சா ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## 66 ஆண்டுகளில்...

ந்து தப்பிச்சென்ற அனைத்து கைதிகளினதும் விபரங்கள் கொழும்பு டொரிங்டனில் அமைந்துள்ள பொலிஸ் குற்றவியல் ஆவணக் காப்பகத்தின் கணனிக் கட்டமைப்பில் பட்டியலிடப்பட்டுள்ளது.

1950ஆம் ஆண்டு முதல் இலங்கைச் சிறைகளிலிருந்து தப்பிச் சென்று மீளவும் கைது செய்யப்படாதவர்கள் பற்றிய விபரங்களே இவ்வாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

எனினும் கடந்த 66 ஆண்டுகளில் சிறைகளிலிருந்து தப்பிச் சென்ற கைதிகளில் சிலர் தற் போது உயிருடன் இருக்கக்கூடிய சாத்தியமில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இது பற்றிய தகவல்களை திரட்டி மீளவும் சரியான புள்ளி விபரத்தகவல்களை வெளியிடுவதற்கு குற்றவியல் ஆவணக் காப்பகம் திட்டமிட்டுள்ளது. (செ-12)

## ஆளும்கட்சிக்குள்...

னர் பதவி நீடிப்பு வழங்க வேண்டாம் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் மத்திய வங்கி ஆளுநர் பதவி குறித்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தீர்மானமிக்க பேச்சு நடத்தப்படவுள்ளது.

ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் சிலர் மத்திய வங்கியின் ஆளுநர் தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டுமென நடத்திய பேச்சுவார்த்தை குறித்தும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பினை உதாசீனம் செய்து இவ்வாறு இரகசிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தால் அது குறித்தும் கவனம் செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, 2015ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு செயலமர்வு ஒன்றை நடத்துமாறு அண்மைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார். இந்த செயலமர்வின் போது மத்திய வங்கி ஆளுநர் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அர்ஜுன் மகேந்திரன் தகவல்களை கசிய விட்டதாகவும் மோசடி செய்துள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.